தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:135 | 30-11-2025 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

### இன்றைய பஞ்சாங்கம்

30.11.2025 கார்த்திகை 14
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.15

திதி:
இன்று மாலை 4.28 வரை
தசமி பின்பு ஏகாதசி

நட்சத்திரம்:
இன்று இரவு 9.07 வரை
உத்திரட்டாதி பின்பு ரேவதி.

யோகம் :
இன்று அதிகாலை 3.37 வரை
வஜ்ரம் பின்பு சித்தி

கரணம் :
இன்று அதிகாலை 5.17 வரை
தைதுலம் பின்பு மாலை 4.28
வரை கரசை பின்பு வணிசை.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.14 வரை சித்த
யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 9.08 வரை
மகம் பின்பு பூரம்.

நல்ல நேரம்
காலை 6.00 – 7.00.
மாலை 3.15 – 4.15.
இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# டிட்வா புயலாகவே சென்னையை நெருங்குது

## வானிலை மைய தென் மண்டல தலைவர்

## 9 துறைமுகங்களில் 4-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு

## 54 விமானங்கள் ரத்து


## மீட்பு பணியில் 10 தேசிய பேரிடர் குழுக்கள்

**சென்னை, நவ.30:**
வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் அமுதா செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

டிட்வா புயல் வட தமிழ்நாட்டின் கடலோரத்தை ஒட்டி செல்லும். டிட்வா புயலாகவே சென்னையை நெருங்கும். கரையைக் கடக்காது. கடலோரத்தை ஒட்டி செல்லும்" என்றார். இதற்கு முன்பு டிட்வா புயல் சென்னையை நெருங்கும் போது தாழ்வுமண்டலமாக வலுவிழக்கும் என முன்பு கூறப்பட்டு இருந்த நிலையில் தற்போதுபுயலாகவேதென்மேற்கு வங்க கடலை அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

'டிட்வா' புயல் இலங்கை நிலப்பரப்பில் இருந்து முழுமையாக விலகி, டெல்டா மற்றும் வட இலங்கை கடல் பகுதிகளை இன்று காலை அடைந்துள்ளது. தற்போது வரை 65 கி.மீ. வேகத்தில் காற்று சுழற்சி இருக்கிறது. இலங்கை பரப்பில் இருந்து விலகி, டெல்டாவை அடையும்போது புயல் காற்று சுழற்சியின் மைய வேகம் 70 முதல் 80 கி.மீ. வரை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டிட்வா' புயல் டெல்டா கடற்கரையை நெருங்கும்போது மெதுவாக நகரவோ அல்லது நிற்கவோ வாய்ப்பு அதிகம் இருப்பதாகவும், அந்த நேரத்தில் புயலின் மேற்கு பகுதி அதாவது முன் பகுதி காவிரி டெல்டா பகுதிகளில் கரையைத் தொட இருப்பதாகவும், அது முழுமையாக கரையை கடக்காது எனவும் ஹேமச்சந்தர் கூறினார். சில மணி நேரங்கள் டெல்டா நிலப்பரப்பில் ஊடுருவும் 'டிட்வா' புயல், பின்னர் வலுவான நிலையில் தொடர்ந்து வடக்கு திசையை நோக்கி நகர்ந்து, இன்று பிற்பகலுக்கு பிறகு சென்னை உள்ளிட்ட வடகடலோர மாவட்டங்களை வந்தடையும். அவ்வாறு வரக்கூடிய 'டிட்வா' புயல் சென்னை கடலோரப் பகுதிகளுக்கு அருகில் சற்று நிற்க வாய்ப்பு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.








### இன்று முதல் மழை

தற்போதுள்ள நிலவரப்படி, இன்று (ஞாயிற்றுக்கிழமை) வடதமிழகம்புதுச்சேரி மற்றும் அதனையொட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகே புயல் நிலவக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயல் காரணமாகசென்னை உள்ளிட்ட வடகடலோர மாவட்டங்களில் பிற்பகலில் இருந்து நாளை (திங்கட்கிழமை) வரையிலும் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும் எனவும், அதுவும் டெல்டாவில் இன்று குறுகியநேரத்தில் தீவிர கனமழை கொட்டித்தீர்க்கவும் வாய்ப்பு உள்ளது.

நேற்று மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப் பட்டினம், அரியலூர், பெரம்பலூர், திருச்சி, சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணா மலை, காஞ்சீபுரம், சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டைமாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிககனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், கரூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

### 90 கி.மீ. வேகத்தில் காற்று

திருவள்ளூர், ராணிப்பேட்டையில் சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும், சென்னை, காஞ்சீபுரம், வேலூர், செங்கல்பட்டு, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

இந்த புயலினால் இன்று டெல்டா மற்றும் அதனையொட்டிய கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் தரைக்காற்று மணிக்கு 70 கி.மீ. முதல் 90 கி.மீ. வரையிலும், ஏனைய கடலோர மாவட்டங்களில் 55 கி.மீ. முதல் 75 கி.மீ. வரையிலும், நாளை தென் கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் மணிக்கு 55 கி.மீ. முதல் 75 கி.மீ. வேகத்திலும், ஏனைய வட கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் 60 கி.மீ. முதல் 80 கி.மீ. வரையிலான வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் ஆய்வு மையம் அறிவுறுத்தி உள்ளது. தென்மேற்கு வங்க கடல் பகுதியில் டிட்வா புயல் வடக்கு திசை நோக்கி நகர்ந்து வரும் நிலையில் இன்று அதிகாலை முதலே சென்னை மற்றும் புறநகரில் பரவலாக மழை பெய்து வருகிறது. ஒரு சில இடங்களில் விட்டுவிட்டு மிதமான மழை பெய்தாலும் சென்னை முழுவதும் பரவலாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது.

- ▸▸ டிட்வா புயலால் ஏற்பட்டுள்ள மோசமான வானிலை காரணமாக சென்னை விமான நிலையத்திலிருந்து இயக்கப்படும் மற்றும் வருகை தரும் 54 விமானங்கள் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- ▸▸ விழுப்புரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் மயிலாடுதுறை உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய தமிழக கடலோர மாவட்டங்களில் மத்திய அவசரக்கால படை 14 குழுக்களை நிறுத்தியுள்ளது.
- ▸▸ டிட்வா புயல் காரணமாக 9 துறைமுகங்களில் 4-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.
- ▸▸ கொடைக்கானலிலும் இன்று விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொடைக்கானலில் சுற்றுலாத் தலங்கள் இன்று ஒருநாள் தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ▸▸ ராமநாதபுரம்: 2-வது நாளாக ரயில் சேவை நிறுத்தப்பட்டிருந்த நிலையில், பாம்பன் பாலம் வழியாக ராமேசுவரத்துக்கு ரயில் சேவை மீண்டும் தொடங்கியது.
- ▸▸ திருவண்ணாமலை, கார்த்திகை திபத் திருவிழாவை முன்னிட்டு திருவண்ணாமலையில் தீவிர முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனஇதற்கிடையில், டிட்வா புயல் காரணமாக திருவண்ணாமலையின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்து வரும் நிலையில், பக்தர்களின் பாதுகாப்பு கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அண்ணாமலையார் மலை மீது ஏற பக்தர்களுக்கு மாவட்ட நிர்வாகம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

## '2047-ல் இந்தியா வல்லரசாக மாறும்' இஸ்ரோ முன்னாள் தலைவர் சோம்நாத்

**டேராடூன்,நவ.30:**
உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் நடைபெற்ற அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத்தின் (ABVP) 71-வது மாநாட்டின் தொடக்க விழாவில் இஸ்ரோ முன்னாள் தலைவர் சோம்நாத் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-

"நம்பிக்கையும், நிதர்சனமும் ஒன்றையொன்று பூர்த்தி செய்வது போல், அறிவியலும், ஆன்மீகமும் இணைந்து இயங்க முடியும். நமது முனிவர்களும், துறவிகளும் கணிதம், வானியல், உலோகவியல், கட்டிடக்கலை மற்றும் மருத்துவம் ஆகியவற்றை ஆராய்ந்தனர். நமது ஆன்மீகம் நவீன அறிவியலின் நுண்ணறிவுகளை உள்ளடக்கியது.

இந்தியா முன்னேறி வருகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இது மக்களிடையே புதிய நம்பிக்கையை விதைத்து வருகிறது. உலகில் இந்தியா வித்தியாசமாகப் பார்க்கப்படுவது இதுவே முதல் முறை.

இது சாத்தியமானதற்கு காரணம், நாம் ஜனநாயக ஸ்திரத்தன்மையின் தூண்களாக இருக்கிறோம் என்பதுதான்.

இன்றைய இந்தியா ஒரு இளமையான நாடு. நமது மக்கள் தொகையில் 25 சதவீதம் பேர் இளைஞர்கள். அடுத்த 25 ஆண்டுகளுக்கு இதே நிலை நீடிக்கும். இது நமக்கு நன்மை பயக்கும். 2047 ஆம் ஆண்டில் இந்தியா ஒரு வல்லரசாக மாறும். விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி துறையில் இந்தியா முன்னணியில் இருக்கும்.

அரசாங்கம் இப்போது அணுசக்தித் துறையில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கப் போகிறது. இது இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும். சந்திரயான் 3 மூலம், சந்திரனின் தெற்குப் பகுதியை அடைந்த உலகின் முதல் நாடாக இந்தியா ஆனது. ஆதித்யா எல்-1 மூலம், சூரியனை நோக்கியும் நாம் அடியெடுத்து வைத்திருக்கிறோம்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# 'ஆபரேஷன் சிந்தூர்' சிவில்-ராணுவ இணைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு

**டேராடூன்,,நவ.30:**
'வளர்ந்த இந்தியா' என்ற இலக்கை விரைவுபடுத்துவதில் சிவில் சர்வீஸ் பணியாளரக்ள் முக்கிய பங்கு வகிக்கின்றனர் என்று ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

உத்தரகாண்ட் மாநிலம் முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் (LBSNAA) 100-வது பொது அறக்கட்டளை பாடநெறியின் நிறைவு விழாவில் மத்திய பாதுகாப்புத்துறை மந்திரி ராஜ்நாத் சிங் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-

"சிவில் சர்வீஸ் பணியாளர்கள் தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் தங்கள் முக்கிய பங்கைப் புரிந்துகொண்டு, துணிச்சலான வீரர்களைப் போலவே, நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும். 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை சிவில்-ராணுவ இணைப்பிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

அந்த சமயத்தில் அரசின் நிர்வாக இயந்திரம் ஆயுதப்படைகளுடன் இணைந்து செயல்பட்டு, முக்கிய தகவல்களை கடத்தவும், பொதுமக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவும் உதவியது. 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின்போது, பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் உள்ள பயங்கரவாத முகாம்களை நமது ராணுவம் அழித்தது.



2047 ஆம் ஆண்டுக்குள் 'விக்சித் பாரதம்'(வளர்ந்த இந்தியா) என்ற இலக்கை அடைய ஆட்சிக்கும், தேசிய பாதுகாப்புக்கும் இடையிலான ஒருங்கிணைப்பை அதிகரிக்க வேண்டும். சுயசார்பு மற்றும் வளர்ந்த இந்தியா என்ற இலக்கை விரைவுபடுத்துவதில் சிவில் சர்வீஸ் பணியாளரக்ள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

அதிகாரிகள் சமூகத்தின் பின்தங்கிய அல்லது பாதிக்கப்பட்ட மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது, மக்களின் கஷ்டங்கள் அவர்களின் செயல்களால் மட்டுமல்ல, பரந்த சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலைகளாலும் வடிவமைக்கப்படுகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இதுவே ஒருநிர்வாகியை மக்கள் சார்ந்த நபராகவும், இரக்கமுள்ளவராகவும் ஆக்குகிறது. சிவில் சர்வீஸ் பணிகளில் பெண்களின் பங்கு அதிகரித்து வருகிறது. சமீபத்திய யு.பி.எஸ்.சி. தேர்வில், ஒரு பெண் முதலிடத்தைப் பிடித்தார், மேலும் முதல் 5 இடங்களைப் பிடித்தவர்களில் 3 பேர் பெண்கள். 2047 ஆம் ஆண்டுக்குள், பல பெண்கள் அமைச்சரவை செயலாளர் பதவிகளுக்கு உயர்ந்து இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தை வழிநடத்துவார்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL WITH Hi TO tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

## திருக்குறள் குறள்-455

**மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்**



மனத்தின் தூய்மை செய்யும் செயலின் தூய்மை ஆகிய இவ்விரண்டும் சேர்ந்த இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்ப்படும்.

## சிந்திக்க ஒரு நொடி



எப்போது பேச வேண்டும் என்று தெரிந்து வைத்திருப்பதை விட... எப்போது நாம் மௌனமாக இருக்க வேண்டும் என்று தெரிந்து வைத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

**உஷா முத்துராமன்**

## சுவாமி, அம்பாள் மரசிம்மாசனத்தில் திருக்கோயில் வலம்



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்28.11.2025 திருக்கார்த்திகை தீபத்திருவிழா-2025-மாலை சுவாமி, அம்பாள் மரசிம்மாசனத்தில் திருக்கோயில் வலம் நீலமாமிடற்றுஆலவாயிலான் பாலதாயினார், ஞாலம் ஆள்வரே-01.94.1-எம்பிரான் திருஞானசம்பந்தர் பெருமான்

**சொக்கேநின் தாளே துணை**

## திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்குதல்



**திருவண்ணாமலை, நவ.30:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு பெரிய தெருவில் உள்ள ஸ்ரீ வாசவி மஹாலில் அன்னதானம் வழங்க திரு. ரவிச்சந்திரன் திருமதி. பிரேமா அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள். அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார்கள். உபயதாரர்: கார்த்திக் டிபன் சென்டர் திரு. ரவிச்சந்திரன் திருமதி.பிரேமா அவர்கள் சேலம். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சத்திய தர்மச்சாலை அன்னதான அறக்கட்டளை உணவு துறையைச் சேர்ந்த அதிகாரிகள் ஆய்வு

**திருவண்ணாமலை, நவ.30:**

திருவண்ணாமலை பேய் கோபுரத் தெருவில் உள்ள சத்திய தர்மச்சாலை அறக்கட்டளை நித்திய அன்னதான படியின் கீழ்தீபத் திருவிழா சிறப்பாக நேற்று 6-ஆம் நாளள் தீபத் திருவிழா சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு உணவு துறையை சேர்ந்த அதிகாரிகள் IFFCI) சபையில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் போது செயலாளர் திரு. சத்தியவேல் அவர்கள் மற்றும் நித்திய அன்னதான குழுவினர் உடன் இருந்தார்கள். சான்றிதழ் மாவட்ட நிர்வாகம் வழங்கிய ஒப்புதல் கடிதம் உணவு தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

காய்கனிகள் மற்றும் சுற்றுச்சூழல் பார்வை யிட்டு



சரியாக உள்ளது என்று வாய்மொழி சான்றிதழ் வழங்கி பாராட்டி சென்றார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## திமுக எம்.பி.க்கள் கூட்டம்



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று திமுக எம்.பி.க்கள் கூட்டம் திமுக தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் தலைமையில் நடந்தது.

## சி.எஸ்.ஐ பள்ளி குழந்தைகளுக்கு அன்னதானம்



துணை முதல்வர் பிறந்தநாளையொட்டி அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆத்திபட்டி சி.எஸ்.ஐ தொடக்கப்பள்ளியில் பள்ளிக் குழந்தைகளுக்கு அன்னதானம் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு வேஷ்டி - சேலைகளை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமச்சந்திரன் வழங்கினார்.

## விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம்



திருவள்ளுர் கலெக்டர் பிரதாப் தலைமையில் விவசாயிகள் நலன் காக்கும் நாள் கூட்டம் நடந்தது.

## மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



குமரியில் நேற்று நடந்த நலம்காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் அழகுமீனா வழங்கினார்.

## தமிழக பாஜகவின் மாநில மையக் குழு கூட்டம்



கும்பகோணத்தில் தமிழக பாஜகவின் மாநில மையக் குழு கூட்டம் மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன் தலைமையில் நடந்தது. மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்



திருப்பூர் தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பெதப்பம்பட்டியில் நடந்த துணை முதல்வர் உதயநிதி பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் சுவாமிநாதன் பங்கேற்றார்.

## ரஜினிகாந்த் 50 ஆண்டு கால கலைச்சேவையைப் பாராட்டி, சர்வதேச திரைப்பட அமைப்பு, விருது



நடிகர் ரஜினிகாந்த் 50 ஆண்டு கால கலைச்சேவையைப் பாராட்டி, சர்வதேச திரைப்பட அமைப்பு, விருதை மத்திய இணை அமைச்சர் முருகன் முன்னிலையில் கோவா முதல்வர் பிரமோத் சவாந்த் வழங்கினார்.

## வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மேயர் மகேஷ் ஆலோசனை வழங்கினார்.

## மாட வீதிகளில் வலம் வந்த 63 நாயன்மார்கள்



திருவண்ணாமலை தீபத் திருவிழாவில் நேற்று மாட வீதிகளில் வலம் வந்த 63 நாயன்மார்கள்.

## தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 103 வது குருபூஜை நாடக விழா

**மயிலாடுதுறை, நவ.30:**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 103 வது குருபூஜை நாடக விழா மயிலாடுதுறையில் நடைபெற உள்ளதை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் அவர்களிடம் அனுமதி கடிதம் வழங்கி அழைப்பு விடுக்கப்பட்டது. நாடகம் நாட்டுப்புற கலைகளின் தந்தை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளின் நினைவாக ஆண்டுதோறும் நாடகம் மற்றும் நாட்டுப்புற சங்கம விழா நடத்தி வருகின்றனர்.



சுவாமிகளின் 100 வது ஆண்டு விழாவினை தமிழ்நாடு அரசே நடத்த வேண்டும் என கலைஞர்கள் வைத்த கோரிக்கையின் பயனாக கடந்த மூன்று ஆண்டுகளாக பல மாவட்டங்களில் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## விரைவு ரயிலில் ரூ.62.50 லட்சம் ஹவாலா பணம் சிக்கியது: ஒருவரிடம் விசாரணை




**சென்னை, நவ.30:**

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் ஆர்பிஎஃப் போலீஸார் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது. தெலங்கானா மாநிலம் காச்சிகுடாவில் இருந்து எழும்பூருக்கு சர்க்கார் விரைவு ரயில் வந்தது. அதிலிருந்து இறங்கிய ஒருவர் மீது போலீஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அவரை ரயில்வே பாதுகாப்புப் படை அலுவலகத்துக்கு அழைத்து வந்து, அவர் வைத்திருந்த பையை திறந்து பார்த்தனர். அதில் துணியால் சுற்றப்பட்ட ரூ.62 லட்சத்து 50 ஆயிரம் இந்திய பணம் இருந்தது.

ஆனால், அந்தப் பணத்துக்கான சான்று எதையும் காட்டவில்லை. இதையடுத்து அவரிடம் நடத்திய விசாரணையில் அந்த நபர் ஆந்திரப் பிரதேசம் நெல்லூரைச் சேர்ந்த கவுதம் (30) என்பதும், நெல்லூர் பகுதியில் தங்க நகைகள் விற்பனை செய்யும் ஒருவர் கவுதமிடம் இப்பணத்தை சென்னை சவுக்கார் பேட்டையில் உள்ள ஒருவரிடம் ஒப்படைக்க கூறியதாகவும், இதற்கு கூலியாக ரூ.3,000 முதல் ரூ.10,000 வரை தருவதாகவும் கூறியதன் அடிப்படையில் எடுத்து வந்தது தெரியவந்தது.

இதையடுத்து, வருவாய் புலனாய்வுத் துறை அதிகாரிகளிடம் அப்பணம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த நபரிடம் தொடர் விசாரணை நடைபெறுகிறது.

## மழைக்காலத்தில் உயிரிழப்பைத் தடுக்க மின்சார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற மின் ஆய்வுத் துறை வேண்டுகோள்

**சென்னை, நவ.30:**

மழைக்காலத்தில் உயிரிழப்பைத் தடுக்க மின்சார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு மின் ஆய்வுத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக மின் ஆய்வுத் துறையின் சென்னை வடக்கு கோட்ட மின் ஆய்வாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பருவமழை காலங்களில் பொதுமக்கள் பின்வரும் மின்சார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மின்சார வயரிங் வேலைகளை அரசு உரிமம் பெற்றுள்ள நபர்கள் மற்றும் மின் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக மட்டுமே செய்ய வேண்டும்.

ஐஎஸ்ஐ முத்திரை பெற்ற, தரமான வயர்கள் மற்றும் மின்சாதனங்களை மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும். ரெஃப்ரிஜிரேட்டர், கிரைண்டர் போன்ற வீட்டு உபயோக மின்சாதனங்களுக்கு 3 மின்சாக்கெட் உள்ள பிளக்குகள் மூலமாக மட்டுமே மின் இணைப்பு கொடுக்க வேண்டும். உடைந்த சுவிட்சுகளையும் பிளக்குகளையும் உடனே மாற்றிவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் பழுதான மின்சாதனங்களை பயன்படுத்தக்கூடாது. கேபிள் டிவி வயர்களை மேல்நிலை மின்சார கம்பிகளுக்கு அருகே கொண்டு செல்லக்கூடாது.

மின்கம்பத்துக்காக போடப்பட்ட வயர் மீது அல்லது மின்கம்பத்தின் மீது கொடிக் கயிறு கட்டி துணிகளை கண்டிப்பாக காயவைக்கக் கூடாது. மின்கம்பத்திலோ, தாங்கும் கம்பியிலோ கால்நடைகளை கட்டக்கூடாது.

மேல்நிலை மின்கம்பிகளுக்கு அருகேயுள்ள மரக்கிளை வெட்டுவதற்கு மின்வாரிய அலுவலர்களை அணுக வேண்டும். மின்சாரத்தால் ஏற்படும் தீயை தண்ணீர் கொண்டு அணைக்க முயல வேண்டாம்.

இடி அல்லது மின்னலின்போது டிவி, மிக்ஸி, கிரைண்டர், கணினி, தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## டிட்வா புயல் எச்சரிக்கை: சென்னையில் வெள்ள மீட்பு, நிவாரண நடவடிக்கை ஏற்பாடுகள்



**சென்னை, நவ.30:**

சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்க ஏதுவாக மாநகராட்சி சார்பில், 1 லட்சம் நிவாரண பொருட்கள் அடங்கிய தொகுப்பு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வங்கக் கடலில் நிலவும் டிட்வா புயலால், சாலைகளில் தேங்கும் நீரை அகற்ற 170 எண்ணிக்கையில் 100 எச்பி திறன் கொண்ட இயந்திர மோட்டார் பம்புகள், நீர் தேங்கும் இடங்களென கண்டறியப்பட்டு, அங்கு முன்னேற்பாடாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், 550 டிராக்டர்கள் மீது பொருத்தப்பட்ட இயந்திர மோட்டார் பம்புகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்ற, பல்வேறு திறன் கொண்ட மொத்தம் 1,496 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. சென்னையில் உள்ள 22 சுரங்கப் பாதைகளில் மழைநீர் தேக்கமின்றி போக்குவரத்து சீராக இயங்க ஏதுவாக 145 நீர் இறைப்பான்களும், தானியங்கி கண்காணிப்பு கருவிகளும் தயார் நிலையில் உள்ளன. 51 நீர் உறிஞ்சும் லாரிகள் சென்னை குடிநீர் வாரியம் மூலம் பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும், 30 லாரிகள் ஈடுபடுத்தப்பட உள்ளன. 29 ரயில்வே கல்வெர்ட்களிலும் மழைநீர் தங்குதடையின்றி செல்ல நவீன இயந்தரங்கள் மூலம் தூர்வாரப்பட்டுள்ளது.

விழும் மரங்களை அகற்ற 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 சக்திமான் ஹைட்ராலிக் ஏணி, 224 கையடக்க மர அறுவை அறுப்பான்கள், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என, மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.

*Cylcone Ditwah updates:* தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை 14 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை!36 படகுகள் மாநகராட்சியால் வாங்கப்பட்டு மண்டலங்களில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன. கூடுதலாக மீன்வளத்துறையுடன் ஒருங்கிணைந்து, 36 படகுகள் வெள்ள மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்காகஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநகரம் முழுவதும் 215 நிவாரண மையங்கள் தயாராக உள்ளது. மேலும், 111 சமையல் கூடங்கள் தயார் நிலையில் உள்ளன. பிளீச்சிங் பவுடர், லைம் பவுடர், பினாயில் ஆகியவை தேவையான அளவு, இருப்பு வைக்கப்பட்டுள்ளது,

சோழிங்கநல்லூர், பெருங்குடி மண்டலங்களில் 25 நபர் மற்றும் தண்டையார்பேட்டை மண்டலத்தில் 25 நபர் கொண்ட மாநில பேரிடர் மீட்புக்குழு தயார் நிலையில் உள்ளனர். 5 தேசிய பேரிடர் மீட்புக் குழுக்களும் தயார் நிலையில் உள்ளன. புயல் மற்றும் மழையின் போது முதியோர் மற்றும் குழந்தைகளுக்கு வழங்க ஆவின் பால் பவுடர் 1 லட்சம் பாக்கெட்டுகளும், 5 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் பாமாயில் அடங்கிய 1 லட்சம் நிவாரண தொகுப்புகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுச்சேரியில் விஜய் 'ரோடு ஷோ'வுக்கு அனுமதி கிடைக்குமா? - ஏமாற்றத்துடன் புறப்பட்ட புஸ்சி ஆனந்த்



**புதுச்சேரி, நவ.30:**


புதுச்சேரியில் விஜய் 'ரோடு' ஷோ நடத்த அனுமதி கேட்ட விவகாரம் தொடர்பாக டிஜிபியை சந்திக்க வந்து வெகுநேரம் காத்திருந்த தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஏமாற்றத்துடன் புறப்பட்டார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வரும் 2026-ல் சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ளது. இதையொட்டி தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். இதனிடையே, கரூரில் கடந்த செப்டம்பர் மாதம் நடந்த பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41பேர் உயிரிழந்தனர். இதன் பிறகு தவெக தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்தாமல் இருந்தார். இதையடுத்து புதுச்சேரியில் நடைபெற இருந்த மக்கள் சந்திப்பு பயணமும் தள்ளி வைக்கப்பட்டது. இதற்கிடையே, புதுச்சேரியில் மக்கள் சந்திப்பு பயணம் நடத்த கடந்த அக். 11-ம் தேதி தவெக நிர்வாகிகள் முதல்வரை சந்தித்தும், காவல் துறை தலைமையகத்திலும் அனுமதி கேட்டனர். காவல்துறை தரப்பில் இருந்து எந்த பதிலும் இல்லை. இதைத் தொடர்ந்து, வரும் டிச.5-ம் தேதி புதுச்சேரியில் விஜய் 'ரோடு ஷோ' நடத்த அனுமதி கேட்டு, தவெக நிர்வாகி புதியவன் தலைமையில் அக்கட்சியினர் புதுச்சேரி டிஜிபியிடம் கடந்த நவ.26 அன்று மனு அளித்தனர்.

அந்த மனுவில், 'தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் புதுச்சேரியில் காலாப்பட்டில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி தொடங்குகிறார். அதன்பின் அஜந்தா சிக்னல், உப்பளம் வாட்டர் டேங்க் (சோனாம்பாளையம் சந்திப்பு), மரப்பாலம் சந்திப்பு, அரியாங்குப்பம், தவளக்குப்பம், கிருமாம்பாக்கம், கன்னியக்கோவில் ஆகிய இடங்களில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடக்கிறது.

இதில் உப்பளம் சோனாம்பாளையம் சந்திப்பில் தவெக தலைவர் விஜய் உரையாற்றுகிறார். மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதியும், பாதுகாப்பும் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்' என குறிப்பிடப்பட்டிருந்தது. தொடர்ந்து முதல்வர் ரங்கசாமியையும் சந்தித்து, ரோடு ஷோ நடத்த அனுமதி வழங்கும்படி கோரினர். ஆனால் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. இந்நிலையில், தவெக பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் புதுச்சேரிக்கு இன்று வந்தார். அவர் தவெக சார்பில் அளிக்கப்பட்டுள்ள மனு தொடர்பாக காவல் துறை தலைமையகத்தில் டிஜிபி ஷாலினி சிங்கை சந்திக்கக் காத்திருந்தார். அவர் முன் அனுமதி எதுவும் பெறாமல் வந்ததால், புதுச்சேரியில் டிஜிபி இல்லை என்ற தகவலும் தெரியாமல் வெகு நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதையடுத்து, அனுமதிக்காக காத்திருந்த புஸ்சி ஆனந்த் டிஜிபி அலுவலகத்திலிருந்து புறப்பட்டார். அவர் வெளியே வந்தபோது செய்தியாளர்கள், 'அனுமதி கிடைத்ததா?' என கேள்வி எழுப்பினர். அவர் அதற்கு பதில் தராமல், அங்கிருந்து காரில் ஏறிச் சென்றார்.

## 'தமிழகத்தில் இதுவரை 3.5 லட்சம் வாழை மரங்கள் சேதம்' - நிவாரணம் வழங்க கோரிக்கை



**சென்னை, நவ.30:**

'பருவமழை தீவிரத்தால் நெல்லை, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் 3.5 லட்சம் வாழை மரங்கள் உள்ளிட்ட விளைபொருட்கள் சேதமடைந்துள்ளன. இதற்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும்' என்று தமிழக அரசுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், 'வடகிழக்குப் பருவமழையின் தீவிரத்தால் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டத்தில் உள்ள பிராஞ்சேரி மற்றும் மேலசேவல் சொக்கலிங்கம் உள்ளிட்ட கிராமங்களில் 350 ஏக்கரில் பயிரிடப்பட்ட 3.5 லட்சம் வாழைமரங்கள் குலை விடும் நிலையில் முறிந்து விழுந்து முற்றாக சேதமடைந்துள்ளன.

இதனால், ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வருமானம் இழந்து, ஒரு பருவத்தையே விவசாயிகள் பறிகொடுத்துள்ளனர்.

மேலும், திருச்சி உள்ளிட்ட சில மாவட்டங்களில் கரும்பு, வெற்றிலை, மக்காச்சோளம் போன்ற வேளாண் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேபோல், கடந்த தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழையால் பாதிப்படைந்த குறுவை நெல் அறுவடை, சம்பா, தாளடி இளம் பயிர்களுக்கான நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை. வேளாண் துறை அமைச்சர் நிவாரணம் வழங்குவதாக அறிவித்திருந்த நிலையில், வேளாண் துறை அலுவலர்களின் கணக்கெடுப்பு சரிவர நடைபெறாததால் இழப்பீடு வழங்கப்படாமல் இருக்கிறது.

இந்நிலையில், மறு விதைப்பு செய்து பயிர்கள் வளர்ந்து வந்த சூழலில், பருவமழை மீண்டும் தீவிரமடைந்துள்ளது. எனவே விவசாயிகள் இழப்பை ஈடுசெய்ய குறுவை நெல் மகசூல் பாதிப்புக்கு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் நிவாரணத்தையும், சம்பா மற்றும் தாளடி பயிர்களின் பாதிப்புக்குஉரியநிவாரணத்தையும் உடனடியாக வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், விளைநிலங்களில் தேங்கும் மழை நீரை உடனுக்குடன் வடித்திட, வடிகால்களை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வருவாய்த்துறை மற்றும் பொதுப்பணித்துறையை முடுக்கி விடவேண்டும்' என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### அல்லி மலரின் மருத்துவ ரகசியம்!

அல்லி இனத்தில் சுமார் 50 வகையான கொடிகள் உள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சங்க காலத்து இலக்கியங்களில் ஆம்பல் மலரைப் பற்றி மட்டும் பல குறிப்புகள் உள்ளன. அல்லி இரவில் மலர்ந்து, காலையில் மூடும். மிதக்கும் அகன்ற நீள்வட்ட இலைகளையும், நுண் குழலுடைய இலைக் காம்புகளை உடைய நீர்ச் செடி. இதன் மலர்கள் நீர் மேல் மிதந்து கொண்டிருக்கும்.

எகிப்தில் உள்ள நைல் ஆற்றில் பூக்கும் நீல நிற அல்லி இரவில் மலர்ந்து காலையில் குவியும் என்றாலும், அதே ஆற்றில் பூக்கும் வெண்னிற அல்லி காலையில் மலர்ந்து இரவில் குவியும்.

தாமரையைப் போல் நீரில் பூக்கும் பூதான் அல்லி. இந்த மலர் இறைவனுக்கு படைக்கும் மலராகும். இதற்கு ஆம்பல், குமுதம், கைவரம் என்ற பெயர்களும் உண்டு.

வெள்ளை நிற மலர்கள் உடையது வெள்ளை அல்லி எனவும், செந்நிற மலர்களை உடையது செவ்வல்லி, அறக்காம்பல் எனவும், நீல மலர்களுடையது கருநெய்தல், குவளை எனவும் வழங்கப்படுகிறது. தமிழகமெங்கும் குளம் குட்டைகளில் பூக்கின்றன. இதன் இலை, பூ (விதை, கிழங்கு ஆகியவை மருத்துவ (LILY MEDICINE) பயன் உடையது.

1. இதன் கிழங்கு குளிர்ச்சி தரும். பூ தாது வெப்பத்தை அகற்றும் குருதிக்கசிவையும் தடுக்கும்.

2. இதன் இலையை நீர் விட்டு காய்ச்சி ஆறிய பின் புண்களைக் கழுவி வந்தால் எளிதில் ஆறும்.

3. அல்லிக்கிழங்கை உலர்த்தி பொடித்து வைத்துக்கொண்டு பாலில் 5 கிராம் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வந்தால் குடல்புண், வயிற்றுப்போக்கு, மூலம் ஆகியவை குணமாகும்.

4. கருநெய்தல் பூவை நீரில் இட்டு காய்ச்சி வடிகட்டி சர்க்கரை சேர்த்து தேன் பதமாக காய்ச்சி 10 மில்லி அளவு காலை, மாலை சாப்பிட்டு வர மூளை கொதிப்பு தணியும். கண் குளிர்ச்சியடையும், இதய படபடப்பை தணிக்கும்.

5. உலர்ந்த வெள்ளை இதழ்களை நீரில் ஊற வைத்து வடித்த தண்ணீரை 30 மில்லியாக காலை, மாலை குடித்து வந்தால் சிறுநீர் ரத்தம், சிறுநீர் பாதையில் உள்ள புண், சிறுநீர் அதிகமாக கழிதல், தாகம், காய்ச்சல் ஆகியவை குணமாகும்.

6. அல்லிப்பூவிற்கு நீரிழிவை சீராக்கும் குணம் உள்ளது. வெப்ப சூட்டால் ஏற்படும் கண் நோய்களை தீர்க்கும். அல்லிப் பூவை அரைத்து சர்பத் செய்து சாப்பிடலாம்.

7. உடலில் ரத்தம் சுத்தமாக இருந்தால் தான் மனிதன் ஆரோக்கியமாக வாழ முடியும். செவ்வல்லியின் இதழ்களை காய வைத்து பொடி செய்து காலை, மாலை இருவேளை கசாயம் செய்து சாப்பிட்டு வந்தால் ரத்தம் சுத்தமாகும்.

8. வெள்ளை அல்லிப் பூவையும், ஆவாரம் பூவையும் சம அளவு எடுத்து போதிய அளவு சர்க்கரை சேர்த்து நீரில் காய்ச்சி கூழ் போல் ஆன பின் இறக்கி ஆற வைத்து காலை, மாலை பசும் பால் சேர்த்து சாப்பிட்டு வந்தால் சிறுநீர் தொடர்பான நோய்கள் அனைத்தும் குணமாகும்.

9. கண் சிவப்பு, கண் எரிச்சல் கண்ணில் நீர் வடிதல் போன்ற கண் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு அல்லி இலையை கண்களை மூடி அதன் மீது வைத்து ஒரு மணி நேரம் வைத்து எடுத்தால் சரியாகும்.

10. கோடைக்காலத்தில் உஷ்ணத்தினால் குழந்தைகளுக்கு சூடு கட்டி வரும். இதற்கு அல்லி இலையையும், அவுரி இலையையும் சம அளவில் எடுத்து அரிசி கழுவிய நீரில் அரைத்து பூசினால் கட்டி உடைந்து குணமடையும்.

11. உங்களுக்கு எவ்வளவு தண்ணீர் அருந்தினாலும் தாகம் தீராது. இதற்கு வெள்ளை அல்லி மலர்களை நீரில் கொதிக்க வைத்து குடித்து வந்தால் தாகம் தீரும்.

# தமிழகத்தில் 14 மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை!

**சென்னை, நவ.30:**

வங்கக் கடலில் நிலவும் டிட்வா புயல் ஞாயிற்றுக்கிழமை காலை சென்னையை நெருங்குகிறது. இதன் காரணமாக கடலோர பகுதிகளில் 90 கி.மீ வேகத்தில் சூறாவளிக் காற்று வீசும். 14 மாவட்டங்களில் இன்று (நவ.30) கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு இலங்கை பகுதிகளில், யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கே சுமார் 80 கிமீ தொலைவிலும், வேதாரண்யத்திலிருந்து தென்கிழக்கே 140 கிமீ தொலைவிலும், புதுச்சேரியில் இருந்து தென்கிழக்கே 280 கிமீ தொலைவிலும்,சென்னையிலிருந்து தெற்கே 380 கிமீ தொலைவிலும் டிட்வா புயல் நிலை கொண்டுள்ளது.

இது, மேலும் வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை (நவ.30) காலை, தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில், வடதமிழகம் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளுக்கு அருகே நிலவக்கூடும். புயல் நகர்ந்து வரும்போது காலையில், சென்னையில் இருந்து 50 கிமீ தொலைவிலும், மாலையில் 25 கிமீ தொலைவிலும் நிலவக்கூடும்.

கனமழையும் தரைக்காற்றும்: இதன் காரணமாக இன்று (நவ.30) வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தென் தமிழக கடலோர மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் பலத்த தரைக்காற்று மணிக்கு 55 முதல் 65 கிமீ வேகத்திலும், இடையிடையே 75 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். இதர வட தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் பலத்த தரைக்காற்று மணிக்கு 60 முதல் 70 கிமீ வேகத்திலும், இடையிடையே 80 கிமீ வேகத்தில் வீசக்கூடும்.

எங்கெல்லாம் மிக கனமழை: இன்று (நவ.30) திருவள்ளூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக்கூடும்.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். சேலம், கள்ளக்குறிச்சி, கடலூர் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

டிச.1-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழையும், திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.




## பட்ஜெட் விலையில் ரியல்மி சி85 ஸ்மார்ட்போன்

**சென்னை, நவ.30**

பட்ஜெட் விலையில் ரியல்மி சி85 ஸ்மார்ட்போன் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்திய ஸ்மார்ட்போன் சந்தையில் ரியல்மி சி85 ஸ்மார்ட்போன் அறிமுகமாகி உள்ளது. பட்ஜெட் விலையில் வெளிவந்துள்ள இந்த போனின் சிறப்பு அம்சங்கள் குறித்து விரிவாக பார்ப்போம்.

உலக அளவில் ஆண்ட்ராய்டு போன்களை உற்பத்தி செய்து வரும் சீன தேச எலக்ட்ரானிக் பொருட்கள் உற்பத்தி நிறுவனமான ரியல்மி நிறுவனம் அவ்வப்போது தங்கள் நிறுவன பயனர்களுக்காக புதிய அப்டேட்களுடன் கூடிய ஸ்மார்ட்போன்களை அறிமுகம் செய்வது வழக்கம்.

இந்த நிறுவனம் இந்தியாவில் பட்ஜெட் விலையில் போன்களை விற்பனை செய்து வருகிறது. ஒப்போவின் துணை நிறுவனமாக சந்தையில் களம் கண்டு, பின்னர் தனியொரு பிராண்டாக ரியல்மி உருவானது.

தற்போது ரியல்மி சி85 5ஜி ஸ்மார்ட்போனை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. இந்த போன் இரண்டுவிதமான ரேம் வேரியன்ட்டில் வெளிவந்துள்ளது.

## SIR: ‘2002/05 வாக்காளர் பட்டியலில் பெயரை கண்டறிய முடியாவிட்டாலும் படிவம் அளிக்கலாம்’

**கோவை, நவ.30:**

2002/2005-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் பெயரை கண்டறிய முடியாவிட்டால், படிவத்தில் குறிப்பிட்ட பகுதியை பூர்த்தி செய்யாமல் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார்.



கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் கிரியப்பனவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கோவை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணிகள் விரைவில் நிறைவு பெற உள்ள நிலையில், வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கீட்டுப் படிவத்தை விரைவாக பெற்றிட தங்கள் பகுதிக்குரிய வாக்குச்சாவடி நிலை அலுவலர் தற்போது வீடு வீடாக வருகின்றனர்.

கடைசிநேர நடவடிக்கையை தவிர்த்து, உடனடியாக கணக்கீட்டுப்படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் ஒப்படைத்து விடவும். கடந்த 2002/2005-ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரையோ அல்லது தங்களின் உறவினர்களின் பெயரையோ கண்டறிய இயலாத வாக்காளர்கள், கணக்கீட்டுப் படிவத்தில் அப்பகுதியினை பூர்த்தி செய்யாமல் காலியாக விட்டு, பிற விவரங்களை பூர்த்தி செய்து கையொப்பம் செய்து வழங்கினாலே போதும்.

அத்தகைய வாக்காளர்களின் பெயர்கள், வரைவு வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்படும். எந்த ஆவணமும் கணக்கீட்டுப் படிவத்துடன் இணைக்க வேண்டிய அவசியம் இல்லை. கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்து வழங்கும் வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே, வரும் டிசம்பர் 9-ம் தேதி வெளியிடப்பட உள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறும்.

எனவே, வாக்காளர்கள் கால தாமதம் செய்யாமல் உடனடியாக தங்களுக்கு வழங்கப்பட்ட கணக்கீட்டுப் படிவத்தினை பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் வழங்க வேண்டும்.

மேலும், கணக்கீட்டுப் படிவத்தினை பூர்த்தி செய்வதில் ஏதேனும் தகவல் அல்லது உதவி தேவைப்பட்டால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் உதவி மையத்தின், கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1950-ஐ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. டிசம்பர் மாதத்துக்குள் இதற்குத் தீர்வு காணப்படும். இவ்வாறு அவர் கூறினார். சிறுபான்மையினர் ஆணையத் துணை தலைவர் எம்.எம். அப்துல் குத்தூஸ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திருச்செந்தூர் அருகே படகில் சென்று வாழைத்தார் அறுவடை செய்த விவசாயிகள்!



**திருச்செந்தூர், நவ.30:**

வயல்களை வெள்ளம் சூழ்ந்ததால் விவசாயிகள் படகில் சென்று வாழைத்தார்களை அறுவடை செய்தனர். திருச்செந்தூர் அருகேயுள்ள செம்மறிகுளம் கஸ்பா பகுதிக்கு அதிக அளவு தண்ணீர் வந்ததால், அருகே உள்ள வாழைத் தோட்டங்களுக்குள் வெள்ளம் புகுந்தது.

சுமார் 50 ஆயிரம் வாழைகள் மழை வெள்ளத்தால் சூழப்பட்டன. இவை அறுவடைக்குத் தயாராக இருந்தவை. மழைநீர் தேங்கி வாழைத்தார்கள் சேதமடையும் நிலை ஏற்பட்டதால், அவற்றை உடனடியாக அறுவடை செய்ய வேண்டிய கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டது.

இதையடுத்து, மீனவர்களிடம் படகை வாடகைக்கு வாங்கி வந்து சுமார் 300 மீட்டர் தொலைவுக்கு சூழ்ந்திருந்த வெள்ளத்தைக் கடந்து வாழைத்தோட்டங்களுக்குச் சென்று வாழைத்தார்களை அறுவடை செய்து, படகில் வெளியே கொண்டு வந்தனர். பின்னர் லாரிகள் மூலம் வெளி மாநிலங்களுக்கு வாழைத்தார்களை அனுப்பி வைக்கப்பட்டன. ஆண்டுதோறும் மழைக்காலங்களில் இதுபோன்ற பிரச்சினைகளை சந்தித்து வருவதாகவும், இதற்கு தீர்வுகாண அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தினர்.

## திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா 6ம் நாள்: வெள்ளி யானை வாகனத்தில் சந்திரசேகரர் வீதிஉலா

மலையில் மகாதீபம் ஏற்ற தயாராக உள்ள கொப்பரை



5ம் நாள் இரவு (28-11-2025) பஞ்சமூர்த்திகள் தரிசனம்











6ம் நாள் (29-11-2025)







**திருவண்ணாமலை, நவ.30:**

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் கார்த்திகை தீபத்திருவிழா கடந்த 24-ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தீபத் திருவிழாவின் 6-ஆம் நாள் விழாவில் 63 நாயன்மார்கள் வீதியுலா நடைபெறுவது வழக்கம். அதன்படி, திங்கள்கிழமை காலை 63 நாயன்மார்கள் வீதியுலா நடைபெற்றது. முன்னதாக, அலங்கரிக்கப்பட்ட 63 நாயன்மார்களுக்குகோயிலில் சிவாச்சாரியார்கள் சிறப்பு பூஜைகள்செய்துவழிபட்டனர். இதையடுத்து, காலை 10 மணிக்கு நாயன்மார்கள் வீதியுலா தொடங்கியது. நாயன்மார்களைத் தொடர்ந்து,சமயக்குறவர்கள் நால்வரும், யானை வாகனத்தில் விநாயகரும் வீதியுலா வந்தனர். இறுதியாக, வெள்ளி யானை வாகனத்தில் சந்திரசேகரர் வீதியுலாவந்துபக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

இரவு 10 மணிக்கு மூஷிக வாகனத்தில் விநாயகர், மயில் வாகனத்தில் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான், வெள்ளித் தேரில் அருணாசலேஸ்வரர், வெள்ளி விமான வாகனங்களில் பராசக்தியம்மன், சண்டிகேஸ்வரர் உள்ளிட்ட பஞ்ச மூர்த்திகள் வீதி உலா நடைபெற்றது. கோயில் ராஜகோபுரம் எதிரே இருந்து புறப்பட்டபஞ்சமூர்த்திகள்வீதி உலாதேரடிதெரு, திருவூடல் தெரு, பே கோபுரத் தெரு, பெரிய தெரு உள்ளிட்ட மாட வீதிகள் வழியாகச் சென்றது. வழிநெடுகிலும் காத்திருந்த திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்செய்தனர்.கொட்டும் மழையிலும் ஏராளமான பக்தர்கள்கிரிவலம் வந்தனர்.

இன்று பஞ்ச ரதங்களின் தேரோட்டம்: தீபத் திருவிழாவின்7-ஆம்நாளான (நவ. 30) பஞ்ச ரதங்களின் தேரோட்டம்நடைபெறுகிறது.

இதையொட்டி, காலை 6.30 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் விநாயகர் தேரோட்டம் தொடங்குகிறது.

தொடர்ந்து, முருகர், அருணாசலேஸ்வரர், பராசக்தியம்மன், சண்டிகேஸ்வரர் தேர் என பஞ்ச ரதங்களும் ஒன்றன்பின் ஒன்றாக வீதி உலா வரும். இதையொட்டி மர தேரில் பொருத்தப்படும் கலசத்திற்கு சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டன.

அதனை தொடர்ந்து விநாயகர், முருகர், அண்ணாமலையார் எழுந்தருளும் பல்வேறு தேர்களுக்கு கலசங்கள் பொருத்தப்பட்டு பணிகள் நிறைவு பெற்றன.

உள்ளூர் விடுமுறை

கார்த்திகை மாதம் மகா தீப திருநாள், டிசம்பர் மூன்றாம் நாள் (03-12-2025) புதன்கிழமை நடைபெற உள்ளது. இதையொட்டி அன்று உள்ளூர் விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# திக்..திக்.. திக்..திக்..திக்....!



நள்ளிரவு நேரம். ஆள் அரவமற்ற சந்து. குரு சந்தைக் கடந்து தெருவில் திரும்பியபோது சடாரென்று எதிரில் வந்து நின்றான் ஒருவன் ! அவன் கையில் துப்பாக்கி! கண்களைச் சுற்றி கர்சீப் கட்டியிருந்தான்.

குரு அரன்றுபோனான். " யாரப்பா நீ ? உனக்கு என்ன வேண்டும் ?" பயத்தில் உடல் வேர்த்தது !

" உன் உயிர் வேண்டும் ! " என்று அவன் சொல்ல பீதியில் குருவின் உடல் ஆடத்தொடங்கியது.

" என்னப்பா இது ! கடையில் வெல்லம் வேண்டும்னு கேட்பதுபோல் இருக்கு !" கொஞ்சம் தைரியத்தை வரவழை த்துக் கொண்டு கேட்டான். " ஆமாம் ! நீ யார். எதுக்கு கண்ணைச் சுத்தி கர்சீப் கட்டியிருக்கே ?" குருவுக்குள் சிந்தனை ஓடியது. சட்டென நியாபகம் வந்தது. குரல் யாருடையது என்பது தெரிந்தது. கலாவின் அண்ணன் மகேந்திரனின் குரல்தான் அது !

" ஏய், நீ கலாவோட அண்ணன் மகேந்திரன்தானே ?" குரு கேட்க கண்ணைக் கட்டியிருந்த கர்சீப்பை அவிழ்த்தான். " பரவாயில்ல நீ கெட்டி க்காரன்தான்!" என்றான் மகேந்திரன்.

உடனே பயம் அகல சிரித்த குரு, " ஏதா வது டிராமாவுல நடிக்க ரிகர்ஸல் பண் ணுறியா ?"

" டேய் ! டிராமாவெல்லாம் இல்லை. உண்மையிலேயே உன்னைக் கொல் லத்தான் போறேன் !"

திடுக்கிட்டான் குரு. "விளையாடறயா? எதுக்கு நீ என்னைக் கொல்லணும்.?" நீ என்னைக் கொல்லும் அளவுக்கு நான் அப்படியென்ன தப்பு செய் தேன்..." குரலில் நடுக்கம் இருந்தது !

" படுபாவி ! ஒண்ணுமே தெரியாத மாதிரிநடிக்கிறயே.... என் தங்கையை ஒரு வருஷமா காதலிச்சிட்டு இன்னி க்கு வேற ஒரு பெண்ணைக் கல்யா ணம் செய்ய முடிவெடுத்திருக்கியே ! நீ ஒரு நம்பிக்கை துரோகி ! நீ சாகத் தான் வேண்டும் !" துப்பாக்கியை குருவின் மார்புக்கு நேராக குறிவை த்தான் மகேந்திரன்.

பீதியுடன் பின் வாங்கிய குரு, " "மகேந்திரா, ப்ளீஸ் நான் சொல்றதை கொஞ்சம் காது கொடுத்து கேளு. சூழ்நிலை அப்படி ! இப்போ நான் மனசு மாறிட்டேன். உன் தங்கையை யேக் கட்டிக்கிறேன். இது உறுதி !" இரு கை குவித்து கண்களில் நீர் மல்க கெஞ்சினான் குரு.

வாய் விட்டுச் சிரித்த மகேந்திரன், " டேய், உன்னைப் பற்றி எனக்குத் தெரியும் . சந்தர்ப்பவாதி நீ ! என் கையில் துப்பாக்கி இருக்கறதைப் பார்த்துட்டு கபட நாடகம் ஆடுறே. உன் வார்த்தையை நான் நம்பத் தயா ராயில்லை. ஸோ மகனே நீ சாகத் தான் வேண்டும். " குறி பார்த்தான்.

" நோ !" அதிர்ச்சியில் மேலும் பின் வாங்கினான் குரு. " பேசி தீர்க்கலா ம்ப்ளீஸ்..." அதை கொஞ்சமும் காதில் வாங்கிக் கொள்ளாமல் 'டுமீல் ' சுட்டான். இரத் தம் சொட்ட சொட்ட தன் மார்பை பிடித்துக் கொண்டே தரை யில் சாய்ந்தான் குரு. கண்கள் இரு ட்டிக் கொண்டு வர, மகேந்திரன் சட்டென ஓடும்போது ரவுண்ட்ஸில் இருக்கும் இரண்டு கான்ஸ்டபிள்கள் நடந்ததைக் கண்டு மகேந்திரனை அமுக்கிப் பிடித்தனர். கடைசி காட்சியாக இது தெரிய, திருப்தி கலந்த புன்னகையுடன் நிரந்தரமாக கண் மூடினான் குரு.

திடுக்கிட்டு கண் விழித்த குருவின் உடல் பூராவும் வேர்வைக் குளியல் ! ' சே ! என்னவொரு பயங்கரமான கனவு ! சுவற்றில் மாட்டியிருந்த கடிகாரத்தை பார்த்தான். மணி அதிகாலை ஐந்து என்று காட்டியது. ' அதிகாலை கண்ட கனவு பலிக்கும்' யாரோ எப்பொழுதோ சொன்னது இப்பொழுது நியாபகத்தில் வர பயம் வந்து முழுமையாகத் தொற்றிக் கொண்டது. ' கலா வேற ஜாதி ! அவளை நீ கட்டி க்கக்கூடாது ' அம்மா சமீபத்தில் திட்ட வட்டமாகச் சொன்னதும் நினைவில் வந்தது.அதனால் தரகர் கொண்டு வந்த ஒரு ஜாதகம் பொருந்த அந்த ஜாதகத்துக்கரிய பெண்ணை இரண்டொரு நாளில் போய்ப் பார் ப்பதாக முடிவு செய்திருந்தான் குரு.

கண்ட கனவால் இப்போது மனம் மாறினான் குரு. இனி கலாதான் தன் வாழ்க்கைத் துணைவி என்கிற திடமான முடிவும் அவன் மனத்தில் எழுந்தது !



-வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்,
போரூர், சென்னை 600 116

# தேர்தல் நாள்.



மக்கள் ஆங்காங்கே பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருக்க அந்த ஏழு இளைஞர்கள் மட்டும் கோவில் மண்டபத்தில் அமர்ந்து வீண் அரட்டையடித்துக் கொண்டிருந்தனர்.

"ஏம்ப்பா... ஊரே ஓட்டுப் போட வரிசைல நின்னுட்டிருக்கு... நீங்க போகலையா?" ஒரு வளர்ந்து வரும் அரசியல்வாதி கேட்க,

"எதுக்கு... எதுக்கு ஓட்டுப் போடணும்?" ஒருவன் கேட்க,

"நம்ம நாட்டுக்கு நாம ஆற்றும் ஜனநாயகக் கடமையப்பா அது"

"நாடு எங்களுக்கு என்ன செஞ்சுது... நாங்க எதுக்கு ஜனநாயக கடமை ஆற்றணும்?"

"ஹூம்... உங்களுக்கெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடியாது" அந்த அரசியல்வாதி நகர,

மதிய நேர வெயில் அனல் கக்கியது.

கையில் தடியை ஊன்றியபடி நடந்து வந்த ஒரு பழுத்த கிழவி திடீரென்று மயங்கி விழ, இந்த இளைஞர்கள் எழுந்து ஓடினர்.

ஒரு இளைஞன் தண்ணீர் பாட்டில் கொண்டு வந்து அந்தக் கிழவியின் முகத்தில் தெளிக்க, மெல்லக் கண் விழித்தாள்.

"என்ன கிழவி.. கொளுத்தற இந்த வெயில்ல எங்க கிளம்பிட்டே?... வீட்டோட கிடக்க வேண்டியதுதானே?" ஒரு இளைஞன் சொல்ல,

"ஒரு முக்கியமான வேலையாப் போயிட்டிருக்கேன்" கிழவி சொன்னாள்.

"சரி... சரி... உடனே கிளம்பிடாதே.. கொஞ்ச நேரம் உட்கார்ந்து ரெஸ்ட் எடுத்திடுப் போ..." என்றான் இன்னொரு இளைஞன்.

"இல்லப்பா லேட்டாயிடும்... நான் உடனே போகணும்"

"அப்படி எங்க போறே... ஃப்ளைட் பிடிக்கவா?" ஒருவன் சொல்ல மற்றவர்கள் சிரித்தனர்.

"ஓட்டுப் போடப் போயிட்டிருக்கேன்ப்பா"

"என்னது ஓட்டுப் போடவா?... காலம் போன கடைசில உனக்கு இது தேவையா கிழவி?"

"வாயை மூடுடா... நான் இந்த நாட்டோட குடிமகள்... எனக்கான அரசைத் தேர்ந்தெடுக்க எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கற ஜனநாயக உரிமை... பெற்ற தாய்க்கு நீ செய்ய வேண்டிய கடமைகள் இருக்கற மாதிரி... தாய்நாட்டுக்கும் நீ செய்ய வேண்டிய கடமைகள் இருக்கு... அதைச் செய்தால்தான் நீ இந்நாட்டுக் குடிமகன்... இல்லேன்னா நீ வெத்து ஆளு... செத்த ஆளு!"

சொல்லி விட்டு பூத்தை நோக்கி, தடியை ஊன்றிக் கொண்டே கிழவி செல்ல,

"டேய்... இந்த முறை நாமும் ஓட்டுப் போடலாம்டா" என்றான் ஒரு இளைஞன்.

மற்றவர்கள் மறுப்பின்றி ஏற்றுக் கொண்டனர்.



-முகில் தினகரன்
கோயம்புத்தூர்.

# வள்ளுவத்தில் வியாசர்



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## 6.சீமாலிகன்

தேரான் தெளிவும்
தெளிந்தான்கண் ஐயுறவும் தீரா
இடும்பை தரும்

என்பது வள்ளுவம்.

விளக்கம்

ஒருவனைப் பற்றி ஆராயாமல் நம்புவதும், ஆராய்ந்து, நம்பியவனிடத்தில் சந்தேகம் கொள்ளுதலும் நீங்காத துன்பத்தைத் தரும்.

பெரியாழ்வார் திருமொழியில்,
"சீமாலிகன் அவனோடு
தோழமை கொள்ளவும் வல்லாய்
சாமாறு அவனை நீ எண்ணிச்
சக்கரத் தால்தலை கொய்தாய்"
என்கிறார்.

ஆருயிர் நண்பனாக ஏற்றுக் கொள்ளும் கண்ணன், சீமாலிகனை அன்பின் காரணமாக அடக்க மறுக்கிறான்.

யார் இந்த சீமாலிகன்?

யமுனையின் அக்கரையில் வசிப்பவன். கண்ணனின் வீர தீர செயல்களைக் கேட்டு கேட்டு அவன் மீது ஒரு வித வெறுப்புக் கொண்டவன்.

இன்றும் தன் தோழர்களோடு மாமரத்தில் கனிகளைப் பறித்து உண்ண ஆசைப்பட்டு அங்குச் செல்கின்றான். சீமாலிகன் மாங்கனிகளுக்குக் குறி வைத்தால் காய் விழுகிறது. உடனே அவனைக் கேலி செய்கிறார்கள் தோழர்கள். ஒருவன் "கனியைக் கேட்டால் காய் தருகிறாயே! உன் கண் என்ன பசியால் குருடாகி விட்டதோ?" என்கிறான்.

உடனே அடுத்தவன் "இவன் என்ன கண்ணனா? குறி பார்த்து எய்துவதற்கு? யானைக்கும் அடி சறுக்கும் அல்லவா!" என்கிறான்.

ஆனாலும் சமாளித்துக் கொண்டு மானிற்குக் குறி வைக்கிறான். அதுவும் தவறி மீண்டும் ஒரு மரத்து மேலே அம்பு குத்தி நிற்கிறது. இப்பவும் தோழர்கள் "இவன் என்ன கண்ணனா! குறி தவறாமல் செலுத்துவதற்கு!" என்ற கேலி பேச்சு திரும்ப திரும்ப ஒலிக்கிறது.

மீண்டும் மீண்டும் கண்ணன் பெயரைச் சொல்ல சொல்ல, அவனுக்குக் கோபம் மேலிட்டு "என் வெறுப்புக்கு ஆளாகாதீர்கள்!" என்று கத்துகிறான்.

"கண்ணன் என்ன குறி தவற மாட்டானோ? அப்படியானால், அவனிடம் சென்று அவன் அறிந்த வித்தைகள் அனைத்தையும் கற்று, அந்தக் கண்ணனையே வென்று காட்டுகிறேன்!" என்று சபதம் செய்கிறான்.

யமுனை நதியில் குதிக்கிறான். இதனைப் பார்த்த தோழர்கள் "இதென்ன விபரீத விளையாட்டு! வேண்டாம் வா!" என்கிறார்கள். ஆனால் யமுனையில் வெள்ளம் அவனை அடித்துச் செல்கிறது.

அந்த மறுகரையில் தான் அமைந்திருக்கிறது ஆயர்பாடி. அங்கு கண்ணன் மற்ற ஆயர்களோடு மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறான்.

ஒருவன் கண்ணனிடம் "நேரம் ஆகிவிட்டது. கண்ணா! நமது மாடுகள் வெவ்வேறு இடத்தில் மேய்கின்றன. எல்லாவற்றையும் எப்படித் தேடிக் கண்டுபிடிப்பது? அதற்குள் இரவாகிவிடும் கண்ணா! ஏதாவது ஏற்பாடு செய். விரைவில் வீடு திரும்ப வேண்டும்!" என்றான்.

"தோழர்களே! பயம் வேண்டாம்! இதோ மாடுகள் அனைத்தும் இங்கு கூட, ஒரு உபாயம் செய்கிறேன் எனத் தன் புல்லாங்குழலை ஊதுகிறான். அத்தனையும் குழலின் இசை கேட்டுக் கூட ஆரம்பித்தன. ஆயர் சிறுவர்களுக்கு மிக சந்தோஷம்.

" மாடுகள் அத்தனையும் வந்துவிட்டன கண்ணா! புறப்படலாம்!" என்கிற போது யமுனை வெள்ளத்தில் நீந்திக் கொண்டு வந்து சேர்ந்தான் சீமாலிகன்.

ஈர ஆடையுடன் மூச்சு வாங்க கண்ணன் எதிரே நின்றவனைக் கண்டு ஆயர்சிறுவர்கள் பயந்தனர். "கண்ணா! இதுவும் அந்தக் கம்சனால் அனுப்பப்பட்ட அரக்கனாய் இருப்பானோ? வேண்டாம் போவோம்!" என்றனர். ஆனால் கண்ணன் சீமாலிகனைப் பார்த்து "நண்பா! நீ யார்? யமுனையின் வெள்ளத்தையும் பொருட்படுத்தாமல் இங்கு வரக் காரணம் என்ன? நல்ல காலம் யமுனை உன்னை விழுங்கவில்லை!" என்றான்.

உடனே கேலியாகச் சீமாலிகன் "கண்ணா உன் பாதத்தைப் பற்றினாலே பிறவிப் பெருங்கடலைத் தாண்டி விடலாம் என்று சொன்னார்களே! யமுனையைத் தாண்டுவது என்ன அதிசயமா?" என்றான்.

இதனையும் இயல்பாக எடுத்துக் கொண்ட கண்ணன் "என்னால் உனக்கு ஏதேனும் ஆக வேண்டுமா? கூறு உடன் செய்கிறேன்!" என்றான்.

"ஏதேனும் பெற்றுக் கொள்வதற்காக நான் வரவில்லை கண்ணா! உன்னைப் பணிந்து உன் திருவடிக்குச் சேவை செய்யவே வந்துள்ளேன்!" என்றான் சீமாலிகன்.

"நண்பா! உன் விருப்பம் நிறைவேறும். இன்று முதல் நீ என் உயிர்த் தோழன். இனி உன் நலமே என் நலம்!" என்றவன் "வா! நம் வீட்டிற்குப் போகலாம்!" என உரிமையோடு அழைத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தான்.

உடனே சீமாலிகன் "கண்ணனை எளிதில் வசப்படுத்தி விட்டேன். இனி, காரியம் நிறைவேற எந்தத் தடையும் இல்லை!" என்று நினைத்து அவனுடன் நடந்தான்.

கண்ணனின் உயிர்த்தோழன் என்பதால் இவனது ஆணவம் அதிகமாயிற்று. இவனது அட்டகாசம் நாளுக்கு நாள் பெருகியது. பெண்கள் தண்ணீர் எடுக்கச் செல்லும் பொழுது தகாத வார்த்தைகளைச் சொல்கிறான். ஆபரணங்களைத் திருடி வைத்துக் கொள்கிறான். பல மாடுகள் காணாமல் போகின்றன. உண்மையிலேயே, இவன் கண்ணனின் நண்பன் தானா? இல்லை கண்ணன் தான் இவனை நண்பனாகப் பார்க்கிறானா? என்கிற சந்தேகம் ஊர் மக்களுக்கு வந்தது.



நேராக வசுதேவரிடத்தில் புகார் செய்தார்கள். வசுதேவரும் கண்ணனை அழைத்து "கண்ணா! உன் நண்பன் சீமாலிகன் வலுச் சண்டைக்கு இழுத்து மண்டையை உடைக்கிறானாம்; ஆபரணங்களைத் திருடிக் கொள்கிறானாம்; தகாத வார்த்தைகளால் பெண்களைச் சீண்டுகிறானாம். இதற்கெல்லாம் அவனைத் தண்டிக்க வேண்டாமா? என்று ஊர் மக்கள் என்னிடம் கேட்கிறார்கள்? நீ என்ன பதில் சொல்கிறாய்?" என்றார்.

மேலும் "இவனால் நம் ஆயர்பாடிக்கு ஆபத்து என்கிறார்கள்; நீ இன்னும் விளையாட்டு பிள்ளை இல்லை! தக்காரோடு பழக வேண்டும். கூடா நட்பு கேடாய் முடியும்! எங்கோ கிடந்த சீமாலிகனோடு நட்பாகி அவனுக்கு நீ கற்ற வித்தைகளை எல்லாம் கற்பித்துள்ளாய். ஆனால் அவன் அடாத செயல்கள் செய்கிறான். இப்போதும் நீ அவனைக் கண்டிக்காமல் உள்ளாய்! இது தகுமோ?" என்றார்.

அப்பொழுது நாராயணா நாராயணா எனச் சொல்லிக் கொண்டு நாரதரும் அங்கு வந்தார். அவரை வரவேற்ற நந்தன், கண்ணனுக்குத் தக்க அறிவுரை வழங்குமாறு கேட்டுக் கொண்டார். அனைத்தையும் கேட்ட நாரதர் "சீமானிகனை அடக்கக் கண்ணனால் மட்டுமே முடியும்!" என முடித்தார்.

கண்ணன் அங்கு வந்தான். "நாரதர் சொல்வதை ஏற்க முடியாது. நண்பன் எனத் தெளிந்தபின் நட்புக் கொண்டேன். அதில் ஐயுற மாட்டேன். அவன் என் உயிர் நண்பன். அவனைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ என்னால் இயலாது. அவனை அடக்க வேறு வழி தேடி கொள்ளுங்கள்!" என்று கூறி விட்டான்.

"கண்ணா! இது என்ன பேச்சு! கடமையைப் புறக்கணிக்கலாமோ? அடாது செய்பவன் உன் நண்பன். உன் உயிர்த்தோழன் என்றால் விட்டு விடுவதா? கண்டித்து தான் ஆக வேண்டும்!" என்று நாரதர் சொல்லியும்,

"மன்னிக்க வேண்டும்! அவனுக்குத் துரோகம் செய்ய மாட்டேன். வேறு வழியைத் தேடிக் கொள்ளுங்கள்!" என்றான் கண்ணன்.

நாரதருக்கு அப்போதுதான் தோன்றியது கண்ணன் அவனைத் தோழனாக ஏற்றது போல் அவனிடத்தும் இவனிடத்தில் ஐயுறத் தெளிவு பெற்றிருப்பான் என்றால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் தெளிந்த பின்னும் ஐயுறும் சுபாவம் அவன் இடத்தில் இருந்தால்.. என்ற சிந்தனை வந்தவுடன் நேராக சீமாலிகனைப் போய் பார்த்தார் நாரதர்.

"நலமா! சீமாலிகா! குறை ஒன்றும் இல்லையே!" என்றார் நாரதர்.

"கண்ணனை உற்ற நண்பனாகப் பெற்ற எனக்கு என்ன குறை இருக்கும்? நலமே!" என்றான் சீமாலிகன்.

"அப்படியா! ஆனாலும் கண்ணன் ஒரு கபடதாரி! அவனை முற்றிலும் நம்பாதே! என்றார்.

அவனும் கோபப்பட்டான். "கண்ணனைப் பழித்து பேசுவது நீரோ? நீரே ஒரு நாடோடி! நாவை அடக்கிப் பேசுங்கள்!" என்றான்.

உடனே நாரதர் "உண்மை கசக்கத்தான் செய்யும். அது சரி! உனக்குத் தான் கற்ற வித்தை அத்தனையையும் கற்றுக் கொடுத்து விட்டானா கண்ணன்!" என்றார்.

அவனோ "நூற்றுக்கு நூறு!" என்றான் சீமாலிகன்.

அப்படியானால் "நீ ஏமாந்து தான் போயிருக்கிறாய்! உன்னை அவ்வாறு நம்ப வைத்துள்ளான்! இது ஒன்றே போதாதா, அவன் கபடதாரி என்பதற்கு!"

"எனக்கு ஒன்றும் புரியவில்லை நாரதரே! என் மனம் அறிய கண்ணன் என்னிடம் எதையும் மறைக்கவில்லை; மறைக்கவும் மாட்டான்!"

"சரி, அப்படியானால், சக்கரப் பிரயோகம் செய்யக் கற்றுக் கொடுத்திருக்கிறானா?"

"ஆஹா! தக்க சமயத்தில் ஞாபகப்படுத்தினீர்கள். கண்ணன் என்னை ஏமாற்றத்தான் பார்த்து உள்ளான். இதோ இப்பவே போகிறேன்!" என்றான்.

"சீமாலிகா! நீ அதனைக் கற்றுக் கொள்ளவே முடியாது! கண்ணன் அதனைக் கற்றுக் கொடுக்கவே மாட்டான். அப்படியே கற்றுக் கொண்டாலும், அதனால் ஆபத்து நேர்ந்தாலும் நேரிடலாம். ஏன் உன் உயிரே போனாலும் போகலாம் என்று சொல்லிவிட்டு கண்ணன் உனக்கு அதனைக் கற்றுத்தர மாட்டான். ஆனால் நான் சொல்லுவது நடக்கும்! "

"சீமாலிகனிடம் கண்ணன் தப்பவே முடியாது. நொடியில் கற்றுக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்றான்.

உடனே கண்ணன் இடத்தில் சென்றான். சீமாலிகன் பதட்டத்துடன் இருப்பதைக் கண்ட கண்ணன் "சீமாலிகா! உனக்கு யாராவது இடையூறு செய்தார்களா?" என்றான்.

"மாமாய வார்த்தைகள் வேண்டாம் கண்ணா, உன்னைத் தவிர வேறு யாரால் இடையூறு வந்து விடும்!"

"இது என்ன பேச்சு! உன்னுடைய உயிர் நண்பன் நான் தானே!" என்றவனை "கண்ணா ஒன்றும் தெரியாதவன் போல் பேசுகிறாயே! நீ கற்ற வித்தைகள் அனைத்தையும் எனக்குச் சொல்லிக் கொடுத்து விட்டாயா? "

"ஆமாம்! இதில் என்ன சந்தேகம் உனக்கு?"

"இல்லை! பொய் சொல்கிறாய்! சக்கரப் பிரயோக வித்தையை ஏன் மறைத்தாய்?"

"இவ்வுலகில் என்னைத் தவிர வேறு யாராலும் அதனைச் சரியாக பிரயோகிக்க முடியாது. அதனால் அதனை நான் மட்டுமே அறிவேன். மற்றவர் அறியவும் முடியாது!" என்றான்.

"ஏன் முடியாது? எனக்குக் கற்றுக் கொடு. உன்னைப் போலவே நானும் சக்கரத்தைப் பிரயோகம் செய்வேன்!" என்றான்.

"அது விபரீதமாக முடியும் உன் உயிருக்கே ஆபத்தாக முடியும் வேண்டாம் சீமாலிகா!"

"ஆஹா! இதனை தானே நாரதரும் சொல்லி விட்டுச் சென்றார்".

"நீ என்னை உயிர் நண்பன் என்று நினைத்தால் இப்பொழுதே அதைக் கற்றுக் கொடு மறுக்காதே!" என்றான் சீமாலிகன்.

பிடிவாதம் பிடித்துக் கற்றுத் தரச் சொல்ல, கண்ணனும் கற்றுக் கொடுக்கிறான. ஆனால் சக்கரம் அவன் கழுத்தருகில் வராமல் பார்த்துக் கொள்ள சொல்லியும் சக்கரம் அவனது கழுத்தைச் சீவி விடுகிறது.

தோழனைப் பிரிந்து துயர் உற்றான் கண்ணன். வேண்டாம் என்று சொல்லியும் தடுத்தும் தன் முரட்டு பிடிவாதமும், தோழமை கொண்டவனோடு ஐயுற்றதும் தானே அவனது துயருக்குக் காரணமாயிற்று.

ஆனால் ஆயர்பாடி மக்கள் ஆனந்தம் அடைந்தனர்.

ஆராய்ந்து நம்பியவன் இடத்தில் ஐயுறு கொள்ளுதல் நீங்காத துன்பம் தரும் என்பதை இந்நிகழ்வு கூறினாலும் அதனை இக்குறளும் சுருக்கமாகச் சொல்லித் தெளிய வைத்தது.

- தொடரும்

# புண்ணியம் தேடுவோம்



டிசம்பர் மாதம் முதல் நாள், தமிழ் மாதம் கார்த்திகை 16 ம் நாள் விருச்சிக மாதம் 15 ம் நாள் குருவாயூர் ஏகாதசி கைசிக ஏகாதசி ,மோக்ஷ ஏகாதசி, பிரபோதினி ஏகாதசி என பல பெயர்களில் பக்தர்களால் அனுசரிக்கப் படும் தினம்.

ஏகாதசி என்று அழைக்கப்படும் நாளானது, பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களுக்கு இடையிலே பதினொன்றாம் நாளைக் குறிப்பதாகும். இது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வரும், முக்கியமான விரத நாளாகும். வருடத்தில் மொத்தம் 24 ஏகாதசிகள் நிகழ்கின்றன.
குருவாயூர் ஏகாதசி நாள் கார்த்திகை/விருச்சிக மண்டல காலத்தில் வரும் ஏகாதசியாகும். இந்த புண்ணிய தினத்தின் முக்கியத்துவத்தைக் காண்போம்.

க்ஷீரசாகரத்தில் அனந்தசயனனாக பள்ளி கொள்ளும் பகவான் யோகநித்திரையிலிருந்து எழுந்து லஷ்மி தேவியோடு நம்மை அனுக்கிரகிக்கும் மகா புண்ணிய தினம்.
அறநெறியையும், அறநெறியில் உள்ளவர்களையும் காக்கவும்,அதர்மத்தையும், அதர்ம வழியில் உள்ளவர்களையும் அழிக்கவும் பகவான் அவதாரம் செய்கிறார்.

அவ்வண்ணமே பூரண அவதாரம் எடுத்த ஸ்ரீகிருஷ்ண பகவான் பல அவதார லீலைகள் செய்த புண்ணிய தினம்.

பகவத்கீதையை அருச்சுனனுக்கு பகவான் உபதேசம் செய்த புண்ணிய தினம்.

தேவேந்திரன் சுரபியாகிய காமதேனுவுடன் பிருந்தாவனத்தை அடைந்து பகவானை துதித்தும், காமதேனு பால் சுரந்து கோவிந்தாபிஷேகம் நடத்திய மகா புண்ணிய தினம்.
குருவாயூர்க்ஷேத்திரப் பிரதிஷ்டா தினம்.

அத்வைதத்தின் குருவும், சைவ அவதாரமுமான ஆதிசங்கரர் குருவாயூர் கோவிலில் வந்து, இன்று நடைபெறும் பூஜா நிஷ்டைகளை உருவாக்கிக் கொடுத்த மகா புண்ணிய தினம்
குருவாயூர் கோவிலில் தாந்த்ரீக சடங்குகள் ஒன்றும் இல்லாமல் பகவான் பக்த ஜனங்களை நேரில் வந்து அனுக்கிரகம் செய்ய வெளியே வரும் புண்ணிய தினம்.

பக்தரில் உத்தமர்களாகிய மேல்பத்தூர், பூந்தானம், ஆதிசங்கரர், குரூரம்மா, வில்வமங்கலம் சுவாமிகள் போன்றவர்களுக்கு பகவத் தரிசனம் கொடுத்த மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இழந்த குரலை மீண்டும் பகவான் அருளிய மகா புண்ணிய தினம்.
செம்பை வைத்தியநாத பாகவதர் தனது சீடர்களுடன் குருவாயூரில் வந்த சங்கீத ஆராதனை நடத்திய மகா புண்ணிய தினம்.
இன்றும் ஆராதனை நடந்து வருகிறது.

குருவாயூர் ஶ்ரீகோவில் இன்று முழுவதும் தரிசனத்துக்காக திறந்திருக்கும் புண்ணிய தினம்.

பக்தர்கள் ஆராதிக்கும் , பகவானின் அருள் கொண்ட குருவாயூர் கேசவன் என்னும் யானை பகவானை அடைந்த தினம்.

மேல்பத்தூர் பட்டத்திரிப்பாடு தான் எழுதிய நாராயணீயம் என்னும் கிரந்தத்தை பகவானுடைய சன்னதியில் சமர்ப்பணம் செய்த மகா புண்ணிய தினம்.

கார்த்திகை — வளர்பிறை ஏகாதசி — பிரபோதின ஏகாதசி-- கைசிக ஏகாதசி — அனைத்துப் பழங்களையும் பகவானுக்கு நிவேதனம் செய்து நவ வித பக்தியால் இறைவனை வேண்டிக் கொண்டால் இறையருளுடன் மங்கல வாழ்வு மலரும்.

ஏகாதசி விளக்கு என பதினைந்து நாட்கள் குருவாயூர் கோவிலில் கோலாகலமாக நடக்கும் இந்த குருவாயூர் ஏகாதசி மகத்துவம் அறிந்து, விரத விதிகளை பாராட்டி அனுசரித்து
'நான்''எனது'என்ற அகந்தை இல்லாமல் 'சர்வம் கிருஷ்ணார்ப்பணம்' என்ற கோவிந்த நாமத்தை வணங்கி நற்கதி பெறுவோம்.



சோபனா விச்வநாதன்.

# தினம் ஒரு தலைவர்கள் — சாவித்ரி தேவி முகர்ஜி வரலாறு

சாவித்ரி தேவி முகர்ஜி 1905 ஆம் ஆண்டு லியோனில் மாக்சிமியானி ஜூலியா போர்டாஸ் என்ற பெயரில் பிறந்த சாவித்ரி தேவி, கிரேக்க மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு குடிமகனான மாக்சிம் போர்டாஸ் மற்றும் ஜூலியா போர்டாஸ் (நீ நாஷ்) என்ற ஆங்கிலப் பெண்ணின் மகள் ஆவார் . குழந்தை பருவத்திலிருந்தே மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும், அவர் விலங்கு உரிமைகளுக்காக தீவிர ஆதரவாளராக இருந்தார் . அவரது ஆரம்பகால அரசியல் தொடர்புகள் கிரேக்க தேசியவாதத்துடன் இருந்தன . தனது இளமை பருவத்தில் அவர் ஜெர்மன் தத்துவம் மற்றும் ஜெர்மனியில் ஆர்வம் கொண்டிருந்தார்; முதலாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் சிகிச்சையாலும் , கிரேக்க அகதிகளை ஒரே நேரத்தில் நடத்தியதாலும் அவர் கலக்கமடைந்தார். ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களைக் குற்றம் சாட்டினார்.

கிரீஸ் மற்றும் பிரான்சில் கல்வி கற்ற போர்டாஸ், தத்துவம் மற்றும் வேதியியலைப் பயின்றார், லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் என்ற தனது ஆய்வறிக்கையின் அடிப்படையில் லியோன் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் அறிவியலில் இரண்டு முதுகலைப் பட்டங்களையும் , வேதியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றார் . அடுத்து அவர் கிரேக்கத்திற்குச் சென்று, புகழ்பெற்ற இடிபாடுகளை ஆய்வு செய்தார். இங்கே , ஹென்ரிச் ஷ்லிமேன் அனடோலியாவில் ஸ்வஸ்திகாக்களைக் கண்டுபிடித்ததைப் பற்றி அவர் அறிந்தார் . பண்டைய கிரேக்கர்கள் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது அவரது முடிவு . அவரது முதல் இரண்டு புத்தகங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : எஸ்ஸை-கிரிட்டிக் சுர் தியோஃபில் கைரிஸ் மற்றும் லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் . பைபிள் மீதான வெறுப்பாலும், பின்னர் பாலஸ்தீனத்தில் சியோனிச நடவடிக்கைகளாலும் செல்வாக்கு பெற்ற அவர், இளம் வயதிலேயே யூத எதிர்ப்பாளராக மாறினார். 1928 ஆம் ஆண்டின் முற்பகுதியில், போர்டாஸ் தனது பிரெஞ்சு குடியுரிமையைத் துறந்து கிரேக்க குடியுரிமையைப் பெற்றார் . 1929 ஆம் ஆண்டில் (அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஒரு வருடம்) அவர் லென்ட் காலத்தில் பாலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் ஆணைக்கு ஒரு யாத்திரையில் சேர்ந்தார், இது அவரது நம்பிக்கைகளை வலுப்படுத்தியது. போர்டாஸ் தனது யூத எதிர்ப்பில் பல்வேறு பிரெஞ்சு அறிவுஜீவிகளாலும் செல்வாக்கு பெற்றார், அவர்களுடன் யூத எதிர்ப்பு மிகுதியாக இருந்தது; அவர் குறிப்பாக எர்னஸ்ட் ரெனனால் பாதிக்கப்பட்டார்.



இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு , அவர் 1945 ஆம் ஆண்டு சாவித்ரி தேவி முகர்ஜி என்ற பெயரில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மனைவியாக, பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட்டுடன் இங்கிலாந்து சென்றார் . அவர் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கினார், பின்னர் பிரான்சில் உள்ள தனது தாயாரைச் சந்தித்தார், அவருடன் பிரெஞ்சு எதிர்ப்புக்கு பிந்தையவரின் ஆதரவு குறித்து அவர் சண்டையிட்டார். பின்னர் அவர் ஐஸ்லாந்துக்குச் சென்றார் , அங்கு 1947 ஏப்ரல் 5-6 தேதிகளில் ஹெக்லா மலை வெடிப்பதைக் கண்டார். ஐஸ்லாந்தில் இருந்தபோது, அவர் நார்ஸ் தேவாலயத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் சிறிது காலம் இங்கிலாந்துக்குத் திரும்பினார், பின்னர் அவர் ஸ்வீடனுக்குப் பயணம் செய்தார் , அங்கு அவர் ஸ்வென் ஹெடினைச் சந்தித்தார் .

ஜூன் 15, 1948 அன்று, அவர் நோர்ட்-எக்ஸ்பிரஸில் ஏறி டென்மார்க்கிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார், அங்கு அவர் "ஜெர்மனியின் ஆண்களும் பெண்களும்" "நமது புகழ்பெற்ற தேசிய சோசலிச நம்பிக்கையைப் பற்றிப்பிடித்து எதிர்க்க" ஊக்குவித்த கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களின் ஆயிரக்கணக்கான பிரதிகளை விநியோகித்தார்! அவர் கோல்ட் இன் தி ஃபர்னஸில் தனது அனுபவத்தை விவரித்தார்.

1970களின் பிற்பகுதியில், அவருக்கு கண்புரை நோய் ஏற்பட்டது , இதன் விளைவாக அவரது பார்வை வேகமாக மோசமடைந்தது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தின் எழுத்தரான மிரியம் ஹிர்ன், அவரை அடிக்கடி வீட்டிற்குச் சென்று கவனித்துக் கொண்டார். அவர் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து, 1981 இல் ஜெர்மனிக்குத் திரும்பி பவேரியாவில் வசித்து, 1982 இல் பிரான்சுக்குத் திரும்பினார். சாவித்ரி 1982 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எசெக்ஸில் உள்ள சிபிள் ஹெடிங்ஹாமில் ஒரு நண்பரின் வீட்டில் இறந்தார். அவரது மரணத்திற்கான காரணம் மாரடைப்பு மற்றும் கரோனரி த்ரோம்போசிஸ் என பதிவு செய்யப்பட்டது . அவர் இறக்கும் போது மாட் கோஹலின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் விரிவுரை செய்யச் சென்று கொண்டிருந்தார். அவரது உடல் எசெக்ஸின் கோல்செஸ்டரில் ஒரு எளிய விழாவில் தகனம் செய்யப்பட்டது , இதில் டோனி வில்லியம்ஸ் மற்றும் இரண்டு இளம் பிரிட்டிஷ் நாஜிக்கள் கலந்து கொண்டனர். தேவியின் அஸ்தி ஒரு பொறிக்கப்பட்ட கலசத்தில் வர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் உள்ள அமெரிக்க நாஜி கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது, பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டு விஸ்கான்சினின் மில்வாக்கியில் உள்ள "நாஜி மரியாதை மண்டபத்தில்" ஜார்ஜ் லிங்கன் ராக்வெல்லின் அஸ்திக்கு அடுத்ததாக மாட் கோஹலால் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது . அவர் இறக்கும் போது அவர் மிகவும் ஏழையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.
வாழ்க்கையில், தேவிக்கு சில சாதனைகள் மட்டுமே இருந்தன (குறைந்தபட்சம் நாசிசத்தை மீண்டும் தொடங்குவதற்கான அவரது இலக்குகளுடன் ஒப்பிடும்போது), ஆனால் அவரது எழுத்து நவ-நாஜி இயக்கத்தை, குறிப்பாக எஸோதெரிக் நவ-நாசிசத்தை பெரிதும் பாதித்து வருகிறது . கல்வியாளர் ஜெஃப்ரி கப்லான், தேவி "போருக்குப் பிந்தைய தேசிய சோசலிசத்தின் இடிபாடுகளில் இருந்து வெளிவந்த மிகவும் கட்டாய நபர்களில் ஒருவர்" என்று விவரித்தார், மேலும் நவ-நாஜி மறைபொருள் மீதான அவரது செல்வாக்கை "எந்தவொரு நபரை விடவும் அதிகமாக" குறிப்பிட்டார். அவரது படைப்புகள் ஆல்ட்-ரைட் , அத்துடன் புதிய யுக மதம் மற்றும் ஆழமான சூழலியல் ஆகியவற்றையும் பாதித்துள்ளன . அவரது எழுத்துக்களுக்கு மேலதிகமாக, பல தீவிர வலதுசாரிகளுடனான அவரது கடிதப் போக்குவரத்து நவ-நாஜி இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியது. அவர் சிலி நாட்டுத் தூதர் மிகுவல் செரானோவையும் பாதித்தார் , மேலும் அவரது ஹோலோகாஸ்ட் மறுப்பு எர்ன்ஸ்ட் ஜூண்டலைப் பாதித்தது . 1982 ஆம் ஆண்டில், பிராங்கோ ஃப்ரெடா தனது படைப்பான கோல்ட் இன் தி ஃபர்னஸின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார் , மேலும் அவரது வருடாந்திர மதிப்பாய்வின் நான்காவது தொகுதியான ரிஸ்கார்டோ (1980), சாவித்ரி தேவிக்கு "ஆரிய புறமதத்தின் மிஷனரி " என்று அர்ப்பணிக்கப்பட்டது .

# 'பராசக்தி' படத்தின் டப்பிங் பணிகளை தொடங்கினார் சிவகார்த்திகேயன்



பொங்கல் தினத்தன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' படத்தின் டப்பிங் பணிகள் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வீடியோவை தயாரிப்பு நிறுவனமான ஆகாஷ் பாஸ்கரனின் டான் பிக்சர்ஸ் வெளியிட் டுள்ளது.

வீடியோவில், சிவகார்த்திகேயன் டப்பிங் பணியில் ஈடுபட்டுள்ளதையும், படத்தின் சில காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

சுதா கொங்கரா இயக்கியுள்ள இந்தப் படம் 1960-ம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. 'பராசக்தி' படத்தில் ரவி மோகன், அதர்வா மற்றும் ஸ்ரீலீலா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

சிவகார்த்திகேயன் மற்றும் சுதா கொங்கரா இணைந்து பணியாற்றும் முதல் திரைப்படம் இதுவாகும். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 14-ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.



நடிகை நிதி அகர்வால் சேலையில் அழகாக போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்கள் இதோ. ரசிகர்களை கவரும் அழகிய ஸ்டில்களை பாருங்க.

# ஒண்டிமுனியும் நல்லபாடனும்

– திரைவிமர்சனம்




கிராமத்து விவசாயி பரோட்டா முருகேசனின் மகன் விஜயன் தியா சிறிய வயதில் தவறி கிணற்றுக்குள் விழுந்து விடுகிறார். உயிருக்கு போராடும் விஜயன் தியா உயிர் பிழைக்க வேண்டி ஒண்டிமுனி சாமியிடம் மகனை காப்பாற்றி கொடு உனக்கு நேர்த்திக்கடனாக ஆட்டுக்குட்டியை பலி கொடுக்கிறேன் என வேண்டுகிறார் பரோட்டா முருகேசன். மகன் விஜயன் தியாவும் உயிர் பிழைத்து விடுகிறார்.

வேண்டிக்கொண்டபடி ஒண்டி முனிக்கு கிடாவை பலி கொடுக்க நினைக்கிறார். ஆனால் ஊர் செல்வந்தர்கள் இரண்டு பேர் இதற்கு தடையாக இருக்கிறார்கள். ஆண்டுகளும் கடந்து ஓடுகிறது. பரோட்டா முருகேசனின் மகன் விஜயன் தியாவும் வளர்ந்து பொறுப்பின்றி இருந்து வருகிறார். இந்நிலையில் ஒண்டிமுனிக்கு பலி கொடுக்க இருந்த கிடா காணாமல் போகிறது.

இறுதியில் காணாமல் போன கிடாவை பரோட்டா முருகேசன் கண்டுபிடித்தாரா? ஒண்டிமுனிக்கு கிடாவை பலி கொடுத்தாரா? என்பதே படத்தின் மீதி கதை.

நடிகர்கள்

பரோட்டா முருகேசனின் இயல்பான நடிப்பு படத்திற்கு பலம். காடு மேடுகளில் செருப்பு இல்லாமல் நடந்து செல்வது, குடும்பத்துக்காக அவர் படும் கஷ்டங்கள், கிடா விருந்து வைப்பதற்கு அவர் அனுபவிக்கும் சிரமங்கள் என உடலை வருத்திக் கொண்டு கதாபாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார்.

மகனாக வரும் விஜயன் தியா பொறுப்பற்ற கிராமத்து இளைஞனாக நடித்து, பின்னர் தந்தையின் நிலையை அறிந்து வாழ தொடங்குவது என காட்சிகளில் கவனிக்கும்படியான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். கதாநாயகியாக வரும் வித்யா சக்திவேல் கிராமத்து காதலை கண்முன் நிறுத்தியுள்ளார். பரோட்டா முருகேசன் மகளாக வரும் சித்ரா நாகராஜனின் எதார்த்த நடிப்பு படத்திற்கு பக்க பலமாக அமைந்துள்ளது.

இயக்கம்

கிராமத்தில் நடந்த ஒரு உண்மை கதையை மையமாக வைத்து படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குனர் சுகவனம். மனிதர்களின் வாழ்வியலை யதார்த்தத்தோடும் இயல்பாகவும் வெளிக் கொண்டு வந்துள்ள இயக்குனர் சுக வனத்துக்கு பெரிய பாராட்டுக்கள்.

இசை

நடராஜன் சங்கரனின் பின்னணி இசை கதை கேற்றவாறு பயணித்துள்ளது.

ஒளிப்பதிவாளர் ஜேடி விமல், கிராமத்தின் அழகை மாறாமல் படம் பிடித்து இருக்கிறார்.

# பிரித்விராஜை சினிமா துறையிலிருந்து அழிக்க முயற்சி தாயார் பகீர் குற்றச்சாட்டு



ஜெயன் நம்பியார் இயக்கிய பிருத்விராஜின் சமீபத்திய திரைப்படமான 'விலாயத் புத்தா' நவம்பர் 21 அன்று வெளியிடப்பட்டது.

மலையாள திரையுலகில் குறிப்பிடத்தக்க ஆளுமையாக திகழ்பவர் பிருத்விராஜ். மலையாளம், தமிழ் படங்களில் கதாநாயக வளம் வரும் பிருத்விராஜ் கடந்த 2019 இல் மோகன்லாலை வைத்து லூசிபர் என்ற படத்தை இயக்கியதன் மூலம் இயக்குனர் அவதாரம் எடுத்தார்.

முதல் படத்திலேயே தேர்ந்த இயக்குனரான பரிமளித்தார் பிருத்விராஜ். இப்படம் சூப்பர் ஹிட் ஆன நிலையில் கடந்த மார்ச் மாதம் இப்படத்தின் 2 ஆம் பாகமான எம்புரான் வெளியாகி கலவையான விமர்சனத்தை பெற்றது.

இருப்பினும் வசூல் ரீதியாக வெற்றி பெற்றது. இந்த படத்தில் 2002 குஜராத் கலவரத்தில் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையை காட்சிப்படுத்தியதால் இந்து அமைப்புகள் உள்ளிட்ட வலதுசாரி அமைப்புகளின் எதிர்ப்பை சம்பாதித்தார் பிருத்விராஜ்.

இந்நிலையில் ஒரு நடிகராக தனது மகனை திரைப்படத் துறையிலிருந்து அழிக்க சிலர் பெரிய சதித்திட்டம் தீட்டி வருவதாக பிருத்விராஜின் தாயார் மல்லிகா சுகுமாரன் கவலை தெரிவித்துள்ளார்.

மலையாள ஊடகங்களுக்கு மல்லிகா சுகுமாரன் அளித்த பேட்டியில் "பிருத்விராஜை குறிவைத்து சமூக ஊடகங்களில் தொடர்ந்து தவறான பிரச்சாரம் பரப்பப்படுகிறது. இது அவரை சினிமா தொழிலில் இருந்து நீக்க திட்டமிட்ட முயற்சி" என்று கூறினார்.

ஜெயன் நம்பியார் இயக்கிய பிருத்விராஜின் சமீபத்திய திரைப்படமான 'விலாயத் புத்தா' நவம்பர் 21 அன்று வெளியிடப்பட்டது.

இந்தப் படம் வெளியானதிலிருந்து ஒரு குழு தனது மகனை வேண்டுமென்றே குறிவைத்து வருவதாகவும் அவர்கள் பிருத்விராஜை தொழில் ரீதியாக மட்டுமல்ல, தனிப்பட்ட முறையிலும் அவமானப்படுத்த முயற்சிக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினார்.

பிரபல மலையாள நாவலை தழுவி சந்தன மரகடத்தல் பற்றிய கதைக்களத்துடன் எடுக்கப்பட்ட 'விலாயத் புத்தா' எதிர்பார்த்த வரவேற்பை பெறவில்லை.

விலாயத் புத்தா படத்தின் காட்சிகளை தவறாக சித்தரித்ததாகவும், வகுப்புவாத பதட்டங்களைத் தூண்டும் நோக்கில் அவற்றை திரித்து கூறியதாகவும் கூறி படத்தின் தயாரிப்பாளர் அளித்த புகாரின் பேரில் ஒரு யூடியூப் சேனலுக்கு எதிராக எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



மலையாளத்தில் மிகவும் பிரபலமான நடிகைகளில் ஒருவர் பிரியம்வதா கிருஷ்ணன். இவர் 2019ல் மலையாளத்தில் வெளியான தோட்டப்பன் படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். இந்த ஆண்டு இவர் நடிப்பில் வெளிவந்த நரிவேட்டா படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. அப்படத்தில் இடம்பெற்ற மின்னல்வள பாடலும் படுவைரலானது.

லேட்டஸ்ட் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் பதிவிடுவதை வழக்கமாக கொண்டுள்ளார் பிரியம்வதா கிருஷ்ணன். இந்த நிலையில், சிவப்பு நிற ஆடையில் எடுத்துக்கொண்ட தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

## ரிவால்வர் ரீட்டா- திரைவிமர்சனம்




நாயகி கீர்த்தி சுரேஷ் பாண்டிச்சேரியில் தாய் ராதிகா, அக்கா மற்றும் தங்கையுடன் வாழ்ந்து வருகிறார். ஒரு நாள் அக்கா குழந்தையின் முதல் பிறந்தநாள் கொண்டாட இருக்கும் நிலையில், பிரபல ரவுடி சூப்பர் சுப்பராயன் போதையில் வீட்டுக்கு வருகிறார். அப்போது எதிர்பாராத விதமாக ரவுடியை கீர்த்தி சுரேஷும், ராதிகாவும் அடிக்கிறார்கள். மயங்கி கீழே விழுந்த ரவுடி இறந்து விடுகிறார்.சூப்பர் சூப்பராயன் பிணத்தை எப்படி அப்புறப்படுத்துவது என்று குடும்பத்தினருடன் கீர்த்தி சுரேஷ் திட்டம் போடுகிறார். இதற்கிடையில் ரவுடியின் எதிர் கும்பல் பிணத்தை அடைய முயற்சி செய்கிறார்கள். சூப்பர் சுப்பராயனின் மகன் சுனில் தந்தையைத் தேடி அலைகிறார்.

இறுதியில் கீர்த்தி சுரேஷ் சூப்பர் சூப்பராயனின் பிணத்தை எப்படி அப்புறப்படுத்தினார்? பிணத்தை அடைய நினைத்த கும்பலின் நிலை என்ன ஆனது? தந்தை தேடி அலைந்த சுனில் என்ன செய்தார் என்பதே படத்தின் மீதி கதை?

நடிகர்கள் :படத்தில் கதாநாயகியாக நடித்திருக்கும் கீர்த்தி சுரேஷ் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். படம் ஆரம்பித்திலேயே டெலிவரிக்கு பிளான் சொல்லும் காட்சி, போலீஸ் ஸ்டேஷனில் இருந்து தப்பிக்கும் காட்சி, சுனிலுடன் நீண்ட வசனம் பேசும் காட்சி, ஆகிய இடங்களில் சிறப்பான பங்களிப்பை கொடுத்திருக்கிறார் கீர்த்தி சுரேஷ். இவருக்கு அடுத்தபடியாக தாயாக நடித்திருக்கும் ராதிகா தனது வெகுளித்தனமான நடிப்பால் ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார்.

வில்லனாக நடித்திருக்கும் சுனில் படம் முழுக்க தந்தையை இறுக்கமான முகத்துடன் தேடி வருகிறார். அதிக வசனமும் அதிக முக பாவனைகள் இல்லாதது வருத்தம். போலீஸ் அதிகாரியாக வரும் ஜான் விஜய், ஓவர் ஆக்டிங் போல் இருக்கிறது. ரெடிங் கிங்ஸ்லி, கல்யாண் மாஸ்டர், சுரேஷ் சக்கரவர்த்தி. சென்ராயன் ஆகியோரின் நடிப்பு திரைக்கதை ஓட்டத்திற்கு உதவி இருக்கிறது.

இயக்கம் : கர்மா இஸ் பூமராங் என்பதை மையமாக வைத்து படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் ஜே கே சந்துரு. கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார். படம் ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக திரைக்கதை நகர்த்திருக்கிறார். ஆனால் டார்க் காமெடி பெரியதாக ஒர்க் அவுட் ஆகவில்லை.

இசை: சான் ரோல்டனின் இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசையில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கலாம்.

ஒளிப்பதிவு : தினேஷ் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவு படத்திற்கு பலம்.

ரேட்டிங்: 2.5/5



நடிகை ஸ்ரீலீலா சேலையில் கவர்ச்சி போஸ் கொடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட். கடற்கரையில் எடுத்த அழகிய ஸ்டில்களை பாருங்க.

## முகமது குட்டி.. மம்மூட்டி ஆனது எப்படி?..



நான் கல்லூரியில் படிக்கும் போது, என் பெயர் உமர் ஷெரீப் என்று எல்லோரிடமும் சொல்வேன். மலையாளத் திரையுலகில் மெகாஸ்டார் என்று லட்சக்கணக்கான ரசிகர்களால் போற்றப்படும் நடிகர் மம்மூட்டி உடைய இயற்பெயர் 'முகமது குட்டி பனப்பரம்பில் இஸ்மாயில்' ஆகும். இந்நிலையில் தனது பெயர் மம்மூட்டி என மறுவியதற்கு பின்னால் உள்ள சுவாரஸ்யமான கதையை அவர் பகிர்ந்துள்ளார்.

கேரளாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், மம்மூட்டி தனது கல்லூரி நாட்களை நினைவு கூர்ந்தார்.


அப்போது, "நான் கல்லூரியில் படிக்கும் போது, என் பெயர் உமர் ஷெரீப் என்று எல்லோரிடமும் சொல்வேன். என் உண்மையான பெயர் முகமது குட்டி என்று யாருக்கும் தெரியாது.

ஒரு நாள், என் ஐடி கார்டு தற்செயலாக பாக்கெட்டில் இருந்து கீழே விழுந்துவிட்டது. இதன் காரணமாக, எனது உண்மையான பெயர் முழு கல்லூரிக்கும் தெரிய வந்தது என்று தெரிவித்தார்.

அந்த நேரத்தில், அவரது நண்பர்களில் ஒருவரான சசிதரன், ஐடி கார்டில் 'முகமது குட்டி' என்ற பெயரை 'மம்மூட்டி' என்று தவறாகப் படித்ததாகக் கூறினார்.

எனவே, "அவர் தவறாகப் படித்த பெயர் பின்னர் எனக்குப் பொருத்தமாகிவிட்டது" என்று மம்மூட்டி சிரித்தபடி கூறினார்.

இந்த சந்தர்ப்பத்தில், அவர் தனது நண்பர் சசிதரனை மேடைக்கு அழைத்து பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார். ரஜினியின் குசேலன் படம் போல நடந்த இந்த நிகழ்வு அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியது.



## 'கருப்பு' படத்தின் OTT வெளியீடு

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் சூர்யா. இவரது நடிப்பில் வெளியான 'கங்குவா' அவரது ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெறாத நிலையில், அடுத்து வெளியான 'ரெட்ரோ' படம் ஓரளவு வரவேற்பை பெற்றது என்று சொல்லாம்.

இதனை தொடர்ந்து, ஆர்.ஜே.பாலாஜி இயக்கத்தில் நடித்துள்ள சூர்யாவின் 45-வது படமான 'கருப்பு' படம் விரைவில் வெளியாக உள்ளது. டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகி உள்ள இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். கதாநாயகியாக திரிஷா நடித்துள்ளார். மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படம் நீதிமன்ற வழக்கு ஒன்றை மையமாக வைத்து அதில் கடவுள் நம்பிக்கையை இணைத்து உருவாகியுள்ளது. 'கருப்பு' திரைப்படத்தை அடுத்தாண்டு ஜனவரி 23-ந்தேதி வெளியிட தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்துள்ளதாக சினிமா வட்டாரத்தில் கூறப்படுகிறது.

இந்த நிலையில், 'கருப்பு' படத்தின் ஓ.டி.டி. உரிமத்தை நெட்பிளிக்ஸ் நிறுவனம் அதிக தொகைக்கு வாங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், சாட்டிலைட் உரிமத்தை ஜீ5 நிறுவனமும் கைப்பற்றியுள்ளதாக கூறப்படுகிறது.



நடிகை ஷிவானி நாராயணன் ஷார்ட் உடையில் மிகவும் கவர்ச்சியாக போஸ் கொடுத்த ஸ்டில்கள்.

## 'ரூட்'... Dubbing Wrap செய்த கவுதம் கார்த்திக்



நடிகர் கவுதம் ராம் கார்த்திக் நடிப்பில் வெளியாக இருக்கும் படம் 'ரூட் - ரன்னிங் அவுட் ஆஃப் டைம்'. ரஜினிகாந்தின் 'கோச்சடையான்' படத்தில் இணை இயக்குநராகப் பணியாற்றிய அறிமுக இயக்குநர் சூரியபிரதாப் இயக்கத்தில் உருவாகி உள்ள இப்படத்தில் நடிகை அபர்சக்தி குரானா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து உள்ளார். நடிகை பவ்யா திரிகா, கவுதம் ராம் கார்த்திக்கு ஜோடியாக நடித்துள்ளார்.

இப்படத்தில் ஒய்.ஜி.மகேந்திரன், பாவ்னி ரெட்டி, லிங்கா, ஆர்.ஜே.ஆனந்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். அறிவியல் கற்பனையும், உணர்ச்சியைப் பிணைந்து கலந்த ஒரு வித்தியாசமான கிரைம் திரில்லராக இப்படம் உருவாகி உள்ளது. சென்னை மற்றும் பிற முக்கிய இடங்களில் படமாக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கடந்த மாதம் படிப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில், படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், நடிகர் கவுதம் ராம் கார்த்திக் 'ரூட்' படத்தின் டப்பிங் பணியை நிறைவு செய்துள்ளார். இதனை தொடர்ந்து இன்னும் சில நாட்கள் படம் வெளியீடு குறித்த தகவல் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




நீயும் நானும்...
நதியின்
நீரோட்டமாய்...
நீ..அகலாத மணற்படுகை..
நான்... நம் காதலில்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## வாழ்க்கை

ஒரு நாளிலிருந்து
நாம் பிடுங்கித் தின்னும்
சந்தோஷங்களும்,
ஒரு நாள் நம்மிடமிருந்து



பிடுங்கித்
தின்னும்
துயரங்களுமாக
யுத்தம்
முடிவதில்லை.

**கே. பி. ஜனார்த்தனன்**




## பரதம்

பாரதத்தின் பாரம்பரியமிக்க
பரத அபிநயம் காட்டும்
பாரதப்பெண்ணே ! உனது
உன்னதக் கலையால்
பார்ப்பவர் கண்கொள்ளை
கொள்ளச்செய்யும் உன்
பரதக்கலை ஞானம்
உலகெங்கும் பரவி நின்
பேரும் நம் பாரதத்தாயின்
கலை பண்பாட்டுத்துறை
பேரும் பாரெல்லாம் மெச்ச
ஓங்கி உயர்ந்து வளரட்டும்!
கலைகள் மிகுந்த எங்கள்
கலை வாழ்கவே ...
பரதக்கலை வாழ்கவே !

**உமா வெங்கடேசன்**



## ஞானக் கூக்கூ....

கனவுக்கன்னி வருகிறாள்
உறக்கத்தில் இனிமை
தருகிறாள் வெண்ணிலா...!



வெட்கப்பட்டு
மறைந்து
பார்க்கிறாய்
வெளியில்
வர தயக்கமா
வெண்ணிலா..!

**நல.ஞானபண்டிதன்**

சூரியன் சுடுமா
நெருப்பு சுடுமா
இரண்டும் சுடுமே பாப்பா
யாரையும் திட்டாதே
அதுவும் சுடுமே...

மழை ஈரமா தண்ணீர் ஈரமா
இரண்டும் ஈரமே
நல்ல பேச்சு பேசிடு பாப்பா
அதுவும் ஈரமே...

வானம் பெரிதா பூமி
பெரிதா இரண்டும் பெரிதே



நல்ல நட்பு
உனக்கிருந்தால்
பாப்பா
அதுவும்
பெரிதே...

**ஹரணி**
தஞ்சாவூர்

## நிபந்தனையில்லா அன்பு.....

உள்ளத்தில் பிறக்கும்
அன்பில் கள்ளமில்லை
என்பதால் அதில்
நிபந்தனையும் இல்லை
விழிகளில் பிறக்கும்
பிரேமம் உண்மை என்பதால்
நிபந்தனையும் இல்லை
உரிமையுடன் கேட்பதால்
நிபந்தனைக்கு வழியே
இல்லை உன் உருவமும்
என் நிழலும் இணைவதால்
நிபந்தனை இல்லா அன்பு
பிறந்ததே ... தென்றல்
நம்மை வந்து தீண்ட
நிபந்தனை உண்டா
மனதில் பிறப்பது காதல்
என்பதால் அதில்
திளைப்பதே உண்மை
நிபந்தனை இருந்தால் அது
உண்மை பிரேமம் ஆகாதே
கண்ணும் கண்ணும்
சந்திப்பதில் என்னே
ஒரு ஆனந்தம் நெஞ்சும்
நெஞ்சும் சந்தித்ததால் நான்
உன்னிடம் தஞ்சம் அடைந்து
விட்டேன் பிறகு....



எங்கே
நிபந்தனை?
நீயும் நானும்
நிபந்தனை
இல்லா
அன்பில்
திளைப்போம்.

**உஷாமுத்துராமன்**



குட்டிக் குட்டிப் படகுகள்
மெல்ல மெல்ல ஆடுது..
துடுப்புப் போட்டு வலிச்சா
துள்ளிக் கிட்டு ஓடுது..


ஆத்துக்குள்ளே மீனுங்க
ஆட்டம் போட்டுக் காட்டுது
வகைவகையா வாத்துங்க
வட்டம் போட்டு நீந்துது...

காத்து வந்து சீண்டும்போது
கலகலன்னு அசையுது
தண்ணிமேல நின்னுகிட்டு
தரிகிடத்தோம் பாடுது..

**ஹரணி** தஞ்சாவூர்

பஸ்ஸில்.. ரயிலில்..
பயணிக்கும் அப்பிராணி
போல அவ்வப்போது
வாழ்க்கை இடம்பெயர்த்து
அமர வைக்கிறது.'கொஞ்சம்
சீட் மாத்திக்கிறீங்களா..
ப்ளீஸ்'கடைசியாக கிடைத்த
இருக்கையில்
சுழல்கிறது சக்கரம் !

**ரிஷபன்**



பம்பரம் சுற்றத் தெரியுமா
பரபரன்னு பம்பரம் சுற்றும்
தெரியுமா..

ஒற்றைக் காலில் வித்தைக்
காட்டும் பம்பரம்
சுற்றச்சுற்றச் சொக்க
வைக்கும் பம்பரம்..

உச்சந்தலையில் பொட்டு
வைத்த பம்பரம்
கயிறு கட்டி இழுத்து விட்டா
காலைச் சுற்றும் பம்பரம்.

குட்டிப் பம்பரம்
கெட்டிப் பம்பரம் பாரு
சுட்டிப் பையா குட்டிப்
பாப்பா கேளு..

பம்பரம் போல சுறுசுறுப்பாக
இருக்கணும்.. நல்லாப் படிச்சு
நாட்டை நீயும் காக்கணும்..

**ஹரணி**
தஞ்சாவூர்

## வடு....

மென்மேகக்குவியலில்
மிதந்து கிடந்த என்னை...
ஒற்றை நாளில் அதல
பாதாளத்தில் மூழ்கடித்தாய்....

இலவம் பஞ்சாய் பறந்து
திரிந்த மனதை... இரும்பின்
துருவாய் இரசாயனம்
செய்தாய்...

இரசவாத மாற்றங்களில்
மின்னிக் கிடந்த என்னை...
புறக்கணிப்பால் மட்கச்
செய்தாய்....

நீ நனைய இருக்கலாம்...
மாற்று... எனக்கு நீ தானே..
ஆனந்த ஊற்று....

நிறம் மாற்றல் உண்டு...
நீ நினைவுகளையே மாற்றிக்
கொண்டாய்...

பாதை மாறுதல் ஆகலாம்...
பயணத்தையே திசைமாற்றிக்
கொண்டாய்..நீ...



இன்று
உனக்கு
இனிதாய்...
விடியலாம்...
நாளை....
ஒருநாள்...
எனக்கும்...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

## கருவி

கருவியின்றி ஏதும் இங்கே
நடக்காது!

நெம்புகோல் அன்றி
எதுவும் நிகழாது!

தெரிந்திருந்தும், 'ஏன்?'
என்று வினவுதல்
வியர்த்தமே!

பொருத்தமான இடத்தில்
பணம் எனும் கருவியும்;

உகந்த தருணத்தில்
ஒரு சொல் என்ற
நெம்புகோலும்;



வேலைக்காரன்
செய்ய
இயலாதவை

வேளைக்
காரனால்
இயலும்

**சசிகலா**



## ஏர்முனைக்கு நேரிங்கே!

ஏர்முனை தானே
ஏற்றமே தானே
ஊர்முனை காக்கும்
உன்னதம் தானே!
பார்முனை முதலாய்க்
காத்திடும் தேனே
சீர்முனை யஃதே
செழிப்பினை நல்கும்!

ஏர்முனைக் கெதிராய்
எதுவுமே இல்லை
கூர்முனை உழவே
கொடுத்திடும் வளமே!
ஓர்முனை யாக
உலகையே காக்கும்
நேர்முனை உழவே
நேர்ந்திடும் எழிலே!


பஞ்சமே இல்லை
பட்டினி இல்லை
நெஞ்சமும் இனிக்கும்
நேர்மையும் மணக்கும்!
கொஞ்சமும் சோம்பல்
கூடுதல் இல்லை
வஞ்சமும் இல்லை
வாட்டமும் இல்லை!

வாழ்வுமே சிறக்கும்
வண்ணமும் பெருகும்
சூழலும் நிறையும்
சொந்தமும் சேரும்!
ஏழைமை போகும்



இறக்கமும் சாகும்
வாழைபோல் வாழ்ந்து
வளத்துடன் உயர்வமே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.




## நம்பிக்கை

சுற்றிலும் முற்றிலும்
பார்த்த பிறகே அருகே
அமர்கிறாய்! எனக்கு ஆயிரம்
ஆசைகள் இருப்பினும் நீ
கா த லி ப் பா ய் என்ற
நம்பிக்கை மட்டும் ஒரு காத
தூரத்தில் இருக்கிறது!

## தொடர்பு

என் எல்லாக் கவிதைகளிலும்
நான் அழைக்காமலே
வந்து விடும் நீ நான்
கா த லி க் க ஆசைப்படும்
போதெல்லாம் மட்டும்
தொடர்பு எல்லைக்கு
அப்பால் சென்று
விடுகிறாய்!

## கா த ல்


எதைப் பற்றியெல்லாம்
உனக்குக்கவிதை எழுத
வரும்? என்று கேட்கிறாய்!
எதை எழுதினாலும் அதில்
உன் கா த ல் வந்தல்லவா
ஊடுறுவி நிற்கிறது!

# நூல் விமர்சனம்

மண்ணும் மக்களும்
அழிவை நோக்கி !
நூல்ஆசிரியர் : மூத்த
பத்திரிகையாளர் ப. திருமலை.
நூல் விமர்சனம் :
கவிஞர் இரா. இரவி !
புதிய வாழ்வியல் பதிப்பகம்,
17, 1–வது மெயின் ரோடு,
கோட்டூர் கார்டன், சென்னை–
600 086. பேச : 044
42072076, மின்னஞ்சல் :
puthiyavazhviyal@gmail.com
பக்கங்கள் :
80, விலை : ரூ. 70.

நூல்ஆசிரியர் மூத்த பத்திரிகையாளர் ப. திருமலை அவர்கள் மகாகவி பாரதியார் போலவே நூலாசிரியர் எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் வேறுபாடு இல்லாத நல்ல மனிதர். இன்றைய நவீன காலத்தில் பலரும் பணத்தாசை பிடித்து அலைகின்றனர். ஆனால் நூலாசிரியர் சட்டம் பயின்றவர். அவர் நினைத்திருந்தால் உயர்நீதிமன்றத்தின் வழக்கறிஞராகி பணம் ஈட்டி இருக்கலாம். பிரபல இதழ்களில் நல்ல சம்பளம் பெற்று நடிகைகளைப் பேட்டி எடுத்து இருக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் விட்டு விட்டு பணம் முக்கியமல்ல; சமுதாயத்திற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற ஏக்கத்தில் எழுதி வருபவரின் உண்மை ஆதங்கப் பதிவு நூல்.

இயற்கைசினம்கொள்கின்றது. பூகம்பம், நில நடுக்கம், புயல், எரிமலை என பல வடிவங்களில் வெளிப்படுத்தி வருகின்றது. இவற்றை உணர்ந்து மனிதர்கள் இயற்கையை அளவின்றி சிதைப்பதை நிறுத்திட முன்வர வேண்டும். சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வை விதைக்கும் நல்ல நூல். நூல் ஆசிரியர் மூத்த






ப. திருமலை.. சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாக எழுத்துப்பணியில் இருப்பவர். எம்.ஏ.. (அரசியல் அறிவியல்) பி.எல்., (சட்டம்) மற்றும் இதழியலில் எம்.பி.ல்., படித்தவர். காந்திய சிந்தனை மற்றும் பெரியார் சிந்தனையில் பட்டயப்படிப்பும், மார்க்சிய சிந்தனை சான்றிதழ் படிப்பும் முடித்தவர். சிறிது காலம் வழக்கறிஞராகப் பணியாற்றிவிட்டு இதழியல் துறைக்கு வந்தவர்.

தினமலர், தினமணி, குமுதம் ரிப்போர்ட்டர் ஆகிய இதழ்களில் முக்கிய பொறுப்பு வகித்தவர். தற்போது கல்கி, ரௌத்திரம், புதியதரிசனம், சமம் உள்ளிட்ட இதழ்களில் எழுதி வருகிறார்.

சமூக பிரச்சினைகள் தொடர்பான இவரது கட்டுரைகள், வாசகர்களால் உற்று நோக்கப்படுபவை. மனித உரிமை மீறல் தொடர்பாக இவர் எழுதிய கட்டுரைகள் பல, நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இதழியல் தொடர்பாக வகுப்புகளையும் நடத்தி வருகிறார். நேர்மையான அறநெறி நிறைந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட "மேம்பாட்டுக்கான இதழியல்" அமைப்பின் தலைவரும்கூட. இன்றைய வளரும் பத்திரிகையாளர்கள் பலருக்கும் முன்னோடி, வழிகாட்டியாகவும் இருப்பவர்.

இவர் எழுதிய "தமிழ்நாட்டில் கொத்தடிமைகள்... சங்ககாலம் முதல் சுமங்கலிதிட்டம் வரை" என்ற நூல் திருப்பூர் தமிழ்சங்கம் விருதும், "காந்திதேசம்" "புதியதேசம்" ஆகிய நூல்கள் கவிதை உறவு இலக்கிய விருதும் பெற்றன. "நீயென உறுதி செய்", "கச்சத்தீவைத் திரும்ப பெற முடியும்", "மடியும் தமிழக மீனவர்கள் தொடரும் இந்திய அரசின் துரோகம்", "மனித நேயத்துக்கு வயது நூறு" (நீதிநாயகம் வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்களின் வாழ்க்கை வரலாறு), "வையை தடம் தேடி.." ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

புதிய வாழ்வியல் பதிப்பகத்திற்காக இவர் எழுதும் முதல் நூல் இது.

புதிய வாழ்வியல் பதிப்பகம்
17, 1வது மெயின்ரோடு, கோட்டூர் கார்டன், சென்னை-85.
☎ 044 – 4207 2076, 72990 24062 / 66

₹ 70

பத்திரிகையாளர் ப. திருமலை அவர்கள், கல்கி வார இதழில் எழுதி வந்த விழிப்புணர்வு கட்டுரையைத் தொகுத்து நூலாக்கி உள்ளார். பத்து முத்தான கட்டுரைகள் உள்ளன. திரு. ஜெ.ஜெயகிருஷ்ணன், திரு. ஆர். வெங்கடேஷ் ஆகியோரின் அணிந்துரை நன்று.

காணாமல் போன கண்மாய்கள் பற்றி புள்ளி விபரங்கள் அதிர்ச்சி தந்தது. "தமிழ்நாட்டில் இருந்த 39202 கண்மாய்களில் 10 சதவீதம் அழிந்து போய் விட்டன. சர்வதேச நீர் மேலாண்மை அழிந்து விட்டன. சுமார் 4000 கண்மாய்கள் அழிந்து விட்டன எனக் கணக்கு கொள்ளலாம். ஆனால் பத்து சதவீதமல்ல, முப்பது சதவீதக் கண்மாய்கள் அழிந்திருக்கும். முதலில் வரத்துக் கால்வாய்களும் அதன் தொடர்ச்சியான கண்மாய்களும் காணாமல் போய் விட்டன என்கிறார் நீரியல் வல்லுநர் கனகவேல்".

உண்மை தான், மதுரைக்கு உயர்நீதிமன்றம் வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தோம், நிறைவேற்றினார்கள், வந்தது எங்கு தெரியுமா? உலகனேரி என்ற ஏரியின் மீது கட்டி உள்ளனர். மதுரையில் நம் கண்முன் நடந்த அரசு ஆக்கிரமிப்பு. இதுபோன்று அரசு மற்றும் தனியார் பல ஆக்கிரமிப்புகள் நாடு முழுவதும் நடந்து உள்ளது. சுற்றுச்சூழல் பிரச்சனைகளை எழுதியதோடு நின்று விடாமல் அதற்கான தீர்வுகளையும் எழுதி உள்ளார், பாராட்டுக்கள்.

இந்நூலினை படிக்கும் வாசகர்களுக்கு இயற்கை வளம் காக்கப்பட வேண்டிய அவசர, அவசியத்தை நன்கு உணர்த்தி உள்ள நூலாசிரியர் மூத்த பத்திரிகையாளர் அவர்களுக்கு பாராட்டுக்கள்.

மதுரையின் பெருமைகள் பல. அவற்றில் ஒன்று பெரிய தெப்பக்குளம். பல தெப்பக்குளங்கள் உள்ளன. ஆனால் அவை சரியான பராமரிப்பின்றி உள்ளன. இந்த நூலில் தெப்பக்குளங்களின் புகைப்படங்களுடன் தூர வார வேண்டிய அவசியத்தை நன்கு விளக்கி உள்ளார்.

மக்களின் அடிப்படைத் தேவை குடிநீர். அதையும் விலை கொடுத்து வாங்கி குடிக்க வேண்டிய நிலைக்கு உலகமயம் தள்ளிவிட்டது. விலை கொடுத்து வாங்கி குடிக்கும் நீரும் உடல் நலத்திற்குக் கேடு என்கின்றனர் .

"குடிநீர் நம் உயிர்நீர், தடையின்றி கிடைத்திடச் செய்வது நம் கையில் தான். செய்வோமா? செய்வோமா?" என்று கேள்வி கேட்டு முடித்துள்ளார் கட்டுரையை. முத்தாய்ப்பு.

எதிர்கால சந்ததிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் செயலான 'மணல் கொள்ளை" பற்றி துணிவாக கட்டுரை வடித்துள்ளார். கொள்ளையர்கள் திருந்த வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும்.

காடுகளை அழித்து நாடுகள் ஆக்கும் பணி வெகுவேகமாக நடைபெற்று வருகின்றது. காடுகளின் அளவும் குறைந்து கொண்டே வருகின்றது. இதனால் 130 வகையான உயிரினங்களை பூமி இழந்து கொண்டிருக்கிறது.

நூலாசிரியர் எந்த ஒரு கட்டுரையையும் குளிரூட்டப் பட்ட அறையில் அமர்ந்து மேம்போக்காக எழுதுபவர் அல்ல. ஒவ்வொரு இடத்திற்கும் சென்று, பார்த்து, கேட்டு, அறிந்து, அறிந்து பல புள்ளி விபரங்களுடன் எழுதும் பழக்கம் உள்ளவர். அதனால் பல தகவல்களின் சுரங்கமாக நூல் மாணவ, மாணவியருக்கு பொது அறிவு தொடர்பான வினாக்களுக்கு விடைகள் தரும் விதமாக நூல் உள்ளது. பாராட்டுகள்.

"காடுகளை காப்பாற்ற வேண்டியது நமது கடமை; இல்லையேல் மழையைத் தொலைத்து விடுவோம். மழை தொலைத்தால் உயிர் தொலையும்".

ஒவ்வொரு கட்டுரையும் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என முத்தாய்ப்பாக வடித்து உள்ளார். ஒரு கட்டுரை எப்படி எழுத வேண்டும் என்பதற்கு இலக்கணம் கூறும் விதமாக நூல் உள்ளது.

மகாகவி பாரதியார், செல்லம்மாள் கடனாக வாங்கி வந்த அரிசியையும், சிட்டுக்குருவிக்குத் தந்து பசியாற்றி மகிழ்ந்த பறவை நேசன். அதனை வழிமொழிவது போல, 'பறவைகளும் நமது உறவுகளே' கட்டுரையை வடித்து உள்ளார்.

"பறவைகளைக் காத்தால் தான் சுற்றுச்சூழலைக் காக்க முடியும், பறவைகள் நமது உறவுகள் என்பதை எண்ணி செயலில் இறங்குவோம்".

இக்கட்டுரை படித்த போது மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் வாழும் ஆயிரக்கணக்கான புறாக்கள், இனிய நண்பர் பாபு, தினமும் தானியங்கள் போடுவதால் தான் உயிர் வாழ்கின்றன. முகநூலிலும் பதிவு செய்துள்ளேன்.

விவசாயி, "மனம் இஷ்டப்பட்டு விரும்பி விவசாயம் செய்யும் நிலை வர வேண்டும், விவசாயத்தில் நேரும் துன்பம் காரணமாக மனம் வெறுத்து நடக்கும் தற்கொலைகள் நிற்க வேண்டும். விவசாய நிலங்களை வீட்டடி மனைகளாக்கும் மடமை ஒழிய வேண்டும்.

காங்கிரீட் காடுகளாகும் வயல்வெளி கட்டுரை விழிப்புணர்வு விதைத்து உள்ளது. வெப்பமாகும் பூமி கட்டுரை நன்று. நிலத்தை மலடாக்கும் சீமைக்கருவேலம் கட்டுரை, 'மரத்தை வெட்டுங்க' மனிதத்தேனீ எழுதிய நூலையும், கட்டுரையையும் நினைவூட்டியது. வருங்கால சந்ததிகளின் வாழ்வாதாரம் நிலைக்க ஆலோசனை வழங்கி உள்ள நல்ல நூல். பாராட்டுக்கள்.

நூல்ஆசிரியர் : மூத்த பத்திரிகையாளர் ப. திருமலை அவர்கள் மனித சமுதாயத்தின் மீதுள்ள பற்றின் காரணமாக விழிப்புணர்வை விதைக்கும் நூல்களை தொடர்ந்து வழங்கி வருகிறார்கள் .பாராட்டுக்கள் .

அட்டைப்பட வடிவமைப்பு உள் அச்சு யாவும் மிக நேர்த்தியாக உள்ளன .புதிய வாழ்வியல் பதிப்பகத்திற்கு பாராட்டுக்கள் .உரத்த சிந்தனையுடன் எழுதி வரும் இனிய நண்பர் ப .திருமலை அவர்களின் நூலை தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்

## நினைத்தாலே இனிப்பவள்

சிரித்தால் பேசினால்
பழகினால் சந்தித்தால்
இனிமை தரும்
அழகிகளுக் கிடையே



நீ மட்டும்
தான்
நினைத்தாலே
இனிப்பவள்!

**முத்து ஆனந்த்**
வேலூர்

## முன் ஏர்

இரவுத் தூக்கம் முக்கியம்
சதா பகல் தூக்கம் மூதேவி
ஆக்கிரமிக்க வழி வகுக்கும்

ஆபத்து நேரத்தில் உதவுவாய்
ஏமாளியாய் இருக்கக்
கூடாது பணம் குவிக்க
சூதாட்டத்தில் முதலீடு
செய்வது அறிவீனம்

கவலையிலிருந்து அகன்றிட
போதைக்கு அடிமை ஆகாதே



சான்றோர்
வகுத்த
நீதியைத்
தட்டாமல்
கடைப்பிடிப்பாய்

**பி. பழனி,**
சென்னை

## நிலா

கொஞ்சம் கொஞ்சமாய்
ஊதி ஊதி பெரிதான
மஞ்சள் நிற பலூன்
காற்று குறைந்து குறைந்து
கடைசியில் காணாமல்



போய்விட்டதா?
இல்லை
நட்சத்திர
சிறுவர்களின்
கரங்களில்
அகப்படாமல்
முகில்
கூட்டங்களுக்கிடையே
ஒளிந்து கொண்டதோ?!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்




## பேசுவதைக் குறையுங்கள்!

அதிகம் பேசாதே
ஆணவங் கொள்ளாதே
இதயம் வலித்திடவே
இனியும் பேசாதே!
பதமாகப் பேசுவாயே
பாடம் படிப்பாயே
எதையும் அளவாக
இன்பாய்ப் பேசிவிடு!

பிழையைச் செய்யாதே
பெருமை பேசாதே
ஒழுக்கந் தவறாதே
ஒருங்காய் வாழ்வாயே!
பழக்கம் எப்படியோ
பாங்காய் நடந்திடுவாய்
வழக்கப் படிதானே
வாழ்க்கை நடத்திவிடு!

பேசல் குறைத்திடுவாய்
பிழையைத் தவிர்த்துவிடு
ஏசல் நிறுத்திவிடு
இனிமை வழிசெல்வாய்!
ஆசை குறைத்துவிடு

அன்பை
நிறைத்துவிடு
தேசம்
போற்றிடவே
தேர்ந்தே
வாழ்ந்துவிடு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## சிக்கனவாழ்வே சிறப்பான வாழ்வு!

சிறுவயதில் பணத்தின் பின்
போக வேண்டும்,
சிறு துளியாய் வங்கியிலே
சேர்க்க வேண்டும்
மறுப்பேதும் சொல்லாமல்
வீண் செலவுகளில்
மனம் சொல்லும்
போக்கினையே மாற்ற
வேண்டும் இவ்வாறு
செய்தால்தான் இனிய வாழ்வு
எளிதினிலே எல்லோர்க்கும்
கிடைக்கலாகும் கடன் பட்டு
வாழ்வதிலே கவலை உண்டு.
காலமது கரைந்து விடும்
முதுமை வரும், எனவேதான்
சொல்லுகின்றேன், இளமை
வாழ்வில் ஏற்றம் பெற
சிக்கனத்தை தத்து எடுப்பீர்
கனவு பல வந்தாலும்
கட்டுப்படுத்தி களிப்பான
வாழ்வதனை கவ்வ
வேண்டும் இக்கணமே
சிந்திந்த்திப்பீர் இதற்கான
வழி சிக்கனமே சிறந்தவழி
இதனை உணர்வீர்,
சிறப்பான முயற்சிகளை
எடுத்துக் கொள்வீர்,
சீர் பெற்ற நல்வாழ்வு
வாழ்ந்திடுவீரே

**முனைவர் என்.பத்ரி,**
ஆதம்பாக்கம்



## பெருமை !

நம்ம பரம்பரை ஒன்னும்
சாதாரண பரம்பரை இல்லை
யானை, மாடு இதெல்லாம்
வெச்சு நெற்கதிர்களை
போரடிச்ச பரம்பரை !

அப்பா அடிக்கடி சொல்லி
வந்தார் இந்த வாக்கியத்தை !

’வீட்டுல அட்டி, அட்டியா நெல்
மூட்டை இருக்கும், மஞ்சள்
இருக்கும், புளி இருக்கும்
வறுமைக்கு இடமே இல்லாமல்
இருந்தது....
பஞ்சமே தெரியாம வளர்ந்த
குடும்பம் நம்ம குடும்பம் !

கொஞ்சம் பெரியவன்
ஆனதும் அப்பாவிடம்
கேட்டான் அவன் !

"அப்பா வசதியான
பரம்பரையில்
இருந்து வந்த நாம
ஏன் இப்போ வறுமையில்
இருக்கோம் !"

பெருமூச்சு விட்டார் அப்பா...

"எல்லாம் குடி தான் மகனே
குடி , குடியில் மதி மயங்கி
போய் பல ஏக்கர் நிலத்தையும்
வித்து இப்படி பரம்பரை
சொத்தையே அழிச்சிட்டாரு
தாத்தா... !"

ஒவ்வொரு வம்சங்களும்
அழிவின் பின்னால்
ஒவ்வொரு காரணங்களும்
இருக்கவே ... கவிதை

## வாழ்க்கை

ஒரு நாளிலிருந்து
நாம் பிடுங்கித் தின்னும்

சந்தோஷங்களும்,
ஒரு நாள் நம்மிடமிருந்து
பிடுங்கித் தின்னும்
துயரங்களுமாக
யுத்தம் முடிவதில்லை.

**கே. பி. ஜனார்த்தனன்**



## வயல்வெளி

பசுமைப் போர்த்திய வயலில்
விடியத் தொடங்கிய
வானிலிருந்து
மூடுபனியின் துளிச் சாரல்
முத்துக்களாய் மின்ன...

தென்றல் பாடியப் பாட்டில்
மெதுவாய் நெல் அலைகள்
மனதைத் தழுவி தாலாட்ட
மண்ணின் மணம்
மனம் தழுவியது.

கோழியின் கூவலில்
விழிக்கும் கிராமம் ...
உச்சியில் கதிரவன்
எழும்ப...
தங்கப் பட்டு போர்த்திய
வயல்வெளிகள்
புன்னகைத்தன.
பாதை ஓரத்தில் பழைய
ஆலமர நிழலில் தீண்டாமல்
கிடந்த நினைவுகள்
காற்றோடு திரும்பிப் பார்க்க...

வாடிய ஆசைகளுக்கும்
புத்துயிர் கொடுத்த மனம்
காரணமே தெரியாமல்
ஆழ்ந்த பெருமூச்சு விடுகிறது.


சூரியன் மேலேற ஏற...
வயல்வெளியின்
அமைதி தரும் அழகே
அழகாக மிளிர்கிறது.

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## தோழியா... காதலியா.... !

பூங்காவில்..
கைகோர்க்காமல்...
ஆனாலும்... நெருக்கமாக
சந்தித்து பேசுகிற ஆணுக்கு
அவள் தோழியாக
இருக்கக்கூடும் !

அவளுடன் அவன்
கைகோர்த்தபடி... மறைவில்
நின்றபடி பேசிகிறவர்கள்...
நிச்சயமாக.... அவர்கள்
காதலர்களாகத்தான்
இருக்கக்கூடும்..

பெண் முன்னே நடக்க..
இரண்டடி தள்ளியே
இடைவெளி விட்டு ஆண்
நடக்கிறான் என்றால்....
நிச்சயமாக சந்தேகமே

இல்லை....
அவர்கள்...
கணவன்
மனைவிதான் !

**எம்.பி.**
**தினேஷ்,**
கோவை



## பார்வை

கரம் பதிந்திருக்கும்–
உன் உதட்டில்
உரம் பதிக்க ஆசை!

உன்– கள்ளப் பார்வையில்
காதலை திருடி
ருசிக்கிறாய்!

விழிகளைப் போல–
அழகான காதல் மொழிகள்
இவ்வுலகில் இல்லை!

உன் கண்களுக்குள்–
கைது செய்யப்பட்ட
என்னை விடுதலை
செய்யாதே ஆயுள் முழுக்க
உன் கண்ணுக்குள்
ஆயுள் கைதியாகவே
இருக்க ஆசைப்படுகிறேன்!


விழிகளை
மூடாதே–
சில
நொடிகளில்
வாழ்ந்து
விடுகிறேன்
உன்
கருவிழிகளுக்குள்!

**பாரதி முத்து**
ஒட்டேரி வேலூர்

## நட்பும் வரமே!

விட்டுக்கொடுக்கும்
வெறுக்கா திருக்கும்
தட்டிக் கொடுக்கும் தாங்கி
நிற்கும் /குட்டிப் பேசும்
குறையை நீக்கும்,
சுட்டிக்காட்டும் சூதை
விலக்கும் /

ஒட்டி நிற்கும் உயர்த்திப்
பிடிக்கும் முட்டி நின்றால்
விட்டுப் பிடிக்கும்,
கட்டி இழுக்கும் கவலை
தீர்க்கும் , பட்டுப் போகாப்
பாதை காட்டும்,

கிட்டே நெருங்க கிளைகள்
விரியும், எட்டிச் செல்லா
திருக்க விரும்பும்
கொட்டிக் கொடுத்தும்
குணமே திரியா, நட்பும்
வரமே , நல்லோர் உறவே /

**திருமதி.**
**இரா இராஜாமணி**
ஈரோடு


## நட்பும் வரமே!

விட்டுக்கொடுக்கும்
வெறுக்கா திருக்கும்
தட்டிக் கொடுக்கும் தாங்கி
நிற்கும் /குட்டிப் பேசும்
குறையை நீக்கும்,
சுட்டிக்காட்டும் சூதை
விலக்கும் /

ஒட்டி நிற்கும் உயர்த்திப்
பிடிக்கும் முட்டி நின்றால்
விட்டுப் பிடிக்கும், கட்டி
இழுக்கும் கவலை தீர்க்கும்,
பட்டுப் போகாப் பாதை
காட்டும்,

கிட்டே நெருங்க கிளைகள்
விரியும், எட்டிச் செல்லா
திருக்க விரும்பும் கொட்டிக்
கொடுத்தும் குணமே திரியா,
நட்பும் வரமே , நல்லோர்
உறவே /

**திருமதி.**
**இரா இராஜாமணி**
ஈரோடு



## அதிர்ஷ்டக்கட்டை !

நான் உன்னைத் தொட
முயலும் பொழுதெல்லாம்
விலகிக் கொள்கிறாய்
தொட்டாற் சிணுங்கியைப்
போல என் மனதில்
உள்ளதை உன்னிடம்
கொட்டிவிட வேண்டும்
என்கிற அவாவில் உன்னை
நெருங்கும் பொழுது
விலகி விலகிச் செல்கிறாய்
வாடிய மலர் போல முகத்தை
வைத்துக் கொண்டு
எதற்காக இந்த நாடகம் ?
நடைமுறையில்
சாத்தியமாகாத

ஒன்று
கனவிலும்
கை
கொடுக்காது
போவது
என் துர்
அதிர்ஷ்டமே !

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**

இரவு முழுவதும் என்னைப்
பார்த்து கண் சிமிட்டிக்

கொண்டிருக்
கிறது..
நான் தூங்கிய
பின் நீ
அனுப்பிய
செய்தி.

**ரிஷபன்**



என்னை விட்டு
ஏன் போகலை என்றாள்.
எப்படி சொல்வேன்?
அவளை போல்
யாரையுமே எனக்கு
காதலிக்க தெரியாது!

எல்லாத்தையும் மறக்காம
எடுத்து வச்சிட்டியா?
மழைக்காலமா இருக்கு
பஸ்ல ஜன்னலோரமா
உட்காரதே ஒரு நாளைக்கு
நாலு , அஞ்சு தடவையாவது
போன் பண்ணு பார்த்து
பத்திரமா போயிட்டு வா
வெளியே வெந்நீர் மட்டுமே
குடி என பத பதைத்து
வெளியூர் அனுப்பும்

உன்
வார்த்தையில்
கொட்டிக்
கிடக்கிறது
ஓர்
பெருங்காதல்!

**லி.நௌஷாத்**
**கான்**



## பெருமை !

நம்ம பரம்பரை ஒன்னும்
சாதாரண பரம்பரை இல்லை
யானை, மாடு இதெல்லாம்
வெச்சு நெற்கதிர்களை
போரடிச்ச பரம்பரை !

அப்பா அடிக்கடி சொல்லி
வந்தார் இந்த வாக்கியத்தை!

’வீட்டுல அட்டி, அட்டியா
நெல் மூட்டை இருக்கும்,
மஞ்சள் இருக்கும், புளி
இருக்கும் வறுமைக்கு இடமே
இல்லாமல் இருந்தது....
பஞ்சமே தெரியாம வளர்ந்த
குடும்பம் நம்ம குடும்பம் !

கொஞ்சம் பெரியவன்
ஆனதும் அப்பாவிடம்
கேட்டான் அவன் !

"அப்பா வசதியான
பரம்பரையில் இருந்து
வந்த நாம ஏன் இப்போ
வறுமையில் இருக்கோம் !"

பெருமூச்சு விட்டார் அப்பா...

"எல்லாம் குடி தான்
மகனே குடி , குடியில் மதி
மயங்கி போய் பல ஏக்கர்
நிலத்தையும் வித்து இப்படி
பரம்பரை சொத்தையே
அழிச்சிட்டாரு தாத்தா... !"

ஒவ்வொரு வம்சங்களும்
அழிவின் பின்னால்
ஒவ்வொரு காரணங்களும்
இருக்கவே செய்கிறது...
அதில் முதன்மை வகிப்பது
என்னவோ ’மது ’தான் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை



## சமநிலையான சாதுக்கள்

" ஐம் புலனையும்
அடக்கி யோகா தியானம்
மூச்சுப்பயிற்சி என்று
செய்து....."

பேச்சை குறைத்து
அமைதியில் மனதை
செலுத்தி மௌனம்
பல நேரங்களில்
கடை பிடித்து ......"

பிறர் நலனுக்காகவும்
உலக நன்மைக்கும்
இறை வழிபாட்டிற்கும்
தன்னை அர்ப்பணித்து
வாழும் நடமாடும்
புனிதர் தெய்வம்..."

சித்தர்கள் சாதுக்கள்
உருவம் கொண்டும்
அரூபம் கொண்டும்
பலவித அற்புதங்களை
செய்யும் மா மனிதர்கள் ....."

கோபம் கவலை ஆசை
எதிர்பார்ப்பு சுயநலம் என்று
எல்லாவற்றையும் தியாகம்
செய்த சன்மார்க்க
நாயகர்கள் ..."

காமம் மோகம் உறவுகள்
என்று எதையும் விட்டுவிட்ட
வழிகாட்டிகள் சாதுக்கள் ..."


உடலை
வருத்தி
உணவை
குறைத்து
உணர்வை
சமன்படுத்தி
உயர்ந்த
உள்ளம் கொண்டவர்கள் ..."

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## நீ வருவாய் என

நீ வருவாய் என நம்பி தான்
விலகுகிறேன். நீ அழைப்பாய்
என்ற நம்பிக்கையில் தான்
கடந்துபோகிறேன்.


உன் மனதில் நான் உள்ளேன்
என நம்பி தான் கொஞ்சம்
மெத்தனம் காட்டினேன்;
உரிமை இருக்கிறது என
நம்பி தான் சிறு கோபங்களை
வெளிப்படுத்தினேன்.

இனி பேசுவதில்லை என
முடிவு எடுத்துவிட்டாயோ?
எனக்கு தெரியாது...
ஆனால் நீ மௌனமாக
இருக்கும் ஒவ்வொரு
நொடியிலும் உன் குரல்
கேட்காமல் நான் இறந்து
கொண்டு இருக்கிறேன்..

சில தூரங்கள் நெருக்கத்தை
உருவாக்கும் என
நினைத்தேன், ஆனால் நீ
ஏற்படுத்தும் தூரம் மட்டும்
என்னை மறைக்க
தொடங்கியுள்ளது.

நீ தவற விட்டாய் என
நான் ஒருபோதும் சொல்லப்
போவதில்லை; ஏனெனில்
உன் ஒரு பார்வைக்காக
நான் ஆயிரம் முறை
உன்னை மன்னிக்க
தயார்.

புரியாத சிக்கல்கள்
உனக்குள்
இருக்கிறதோ?




அல்லது என்னுள்
இருக்கிறதோ? இன்னும்
புரியவில்லை; ஆனால் உன்
நினைவு மட்டும் என் மனதில்
மலர் போல பூத்துக்
கொண்டிருக்கிறது.

நீ திரும்பவில்லை என்றால்?
நான் உன்னை கடந்து
விடுவேன் ஆனால்
நீ திரும்புவாய் என்ற
நம்பிக்கையில் இன்னும்
மனக் கதவை திறந்தே
வைத்திருக்கிறேன்...

சிலருக்கான காத்திருப்பு
வலியாக இருந்தாலும்
அந்த காத்திருப்பு

அவசியமானது..
ஏனெனில்
காதல் காத்திருப்பில்
தானே
தொடங்கியது ..

**ஜனனி அந்தோணி**
**ராஜ்** திருச்சிராப்பள்ளி



## ஒத்திகை

ஒவ்வொன்றிற்கு(ம்)மே
ஒத்திகை பார்த்துப்
பணி(யைச்) செய்யும்
அழகிய கலைமகளான
நீ கா த லு க் கு
ஒத்திகை பார்க்க
நெருங்கினால் மட்டும்
மிகவுமே அழகாகக்
கை நழுவுகிறாய்!

## கடமை

அன்பைக் கூடக் கத்தி போல்
கூர்மையாகக்கண்கள்
வழியாகவெளிப்படுத்துகிறாய்!
ஆகவே அன்பே முதலில்
உனக்குக்காதலுக்கென(வே)
இருக்கும் சில கடமைகளைக்
கற்றுத் தர வேண்டும்!

## வீனஸ்

குணத்தில்
கொலஸ்ட்ரால்
வைத்திருந்தாலும் உன்
அழகிய கண்களின்
பார்வைகளால் கா த ல்
வைட்டமின்களை
என்னுள்
செலுத்தும் என்
பெட்டக வீனஸ் நீ!

## சட்டம் பிள்ளை

உன் கண்களின் பார்வைகள்
மிக நல்ல பிள்ளை என்றாலும்
உன் இ த ழ் க ளி ன்
வேகமோ என்னிடமிருந்து
மு த் த ங் க ளை மிரட்டி
வாங்கும் சட்டாம் பிள்ளை!

## வட்டிக்காரன் மகள்


இன்றைய ஷெட்யூலில்
உனக்கு மு த் த மி ல் லை
என்கிறாய்! அப்பொழுது
தான் எனக்கு நினைவிற்கு
வந்தது நீ கந்து
வட்டிக்காரனின் மகள் என்று!

## விடுமுறை

இரக்கமற்ற அரக்கி நீ!

ஆகவே தான்
நாம் சந்திக்கும்
போதெல்லாம்
மு த் த ங் க ளு க் கு
விடுமுறை வழங்கி
விடுகிறாய்!

**முத்து ஆனந்த்**
வேலூர்



## மோகனச்சாரல்

அழகியே என்னை
ஆளப் பிறந்தவளே..
தேவதை நீ தானோ..
பொக்கிஷங்களை எனக்கு
அள்ளிக் கொடுக்க..
கனா காலத்தை உயிர்ப்பிக்க
காத்திருக்கும் கன்னி
பூதமும் நீ தானே...
அழகான சாரலை
அள்ளித்தந்து,
என் உள்ளத்தை ..
கிளையாக துள்ளி
விளையாடச் செய்த..
துளிர்பனி சாரலாய்...
என் தேகத்தை பதம்
பார்த்த சின்னஞ்சிறு
மழைத்துளி நீ.,ஏன்
இந்த மயக்கம் உன் மீது
மட்டும்... கட்டி அணைக்க
துடித்தேன் என்னுள்
நீ கட்டுப்படவில்லை...
என்னோடு ஒட்டிக்
கொண்டாய் ... எங்கிருந்து
வந்தது இந்த இன்பம்..
என் என தெரியவில்லை உன்
மீது மட்டும் தீரா காதல் என்
தேகத்தை நானே தடவிக்
கொள்ள ஆசைப்பட்ட நேரம்..
உன் துளி நீர் மட்டும் ஏன்
உராசலில் அழகாய் பூர்த்தது

இல்லை இல்லை..
பிறந்தது ...

**கவிஞர் முனைவர்**
**நா மோகன**
**செல்வி மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்

# வாசகர் கடிதம்

தமிழகத்தின்
நெருங்குகிறது திட்வா
புயல். கோவாவில் 77 அடி
உயர ராமர் சிலை திறப்பு.
மோடி திறந்து வைத்தார்
டிசம்பரில் இந்தியா
வருகிறார் ரஷ்ய அதிபர்
புதின். வெட்டிவேர்
மகத்துவம் பற்றிய
கட்டுரை அறிய தகவல்.
ஆருத்ரா நிறுவனத்தில்
1.50 கோடி சொத்துக்கள்
பறிமுதல்.
முதல்வர் என் தொகுதிக்கு
நிறைய செய்துளளார் என
நைனார் நாகேந்திரன்
சான்று. ராஜஸ்தானில்
மயக்க மருந்து தெளித்து
நகை கொள்ளை
அடிக்கப்பட்டது.
கல்லறை பட்டாக்களுக்கு
தீர்வு காணப்படும் என
அரசு அறிவிப்பு.
27 நட்சத்திரங்களுக்கு
உள்ள சித்தர்கள் யார்
யார் என்ற விவரம்
புதுமை. இயற்கையான
மண் குளியல் பற்றிய
கட்டுரையும் அதன்
பலன்களும் மிகவும்
சிறப்பாக இருந்தது.
மூளையை தின்னும்
அமீபா பற்றிய கட்டுரை
சிறந்து விழிப்புணர்வு.
தாளவாடி சுற்றுலா
கட்டுரை பல புதிய
தகவல்களை அறிய
முடிந்தது.
புயல் காரணமாக
பாம்பன் பாலத்தில்
ரயில்கள் செல்ல தடை
விதிக்கப்பட்டுள்ளது.
கல்லூரிகளில்
சான்றிதழ்களை விரைவாக
வழங்க வேண்டும் என
யுஜிசி உத்தரவு.
விஜய் முதல்வராக
வருவார் என
செங்கோட்டையன்
அறிக்கை.
வெளிநாட்டு
சொத்துக்களை கணக்கில்
காட்ட வேண்டும் என
அரசு அறிவிப்பு. திருப்பதி
லட்டு விவகாரத்தில் மூத்த
அதிகாரி கைது
இலங்கை புயலுக்கு 56
பேர் பலியானார்கள்.
எல்லை பாதுகாப்பு
பணியில் ரோபோக்களை
பயன்படுத்த சீனா திட்டம்.
கடலில் முத்து
எடுப்பது போல
முத்து ஆனந்த் அவர்கள்
தன் கவிதை மூலம்
மக்களுக்கு நல்ல
முத்துக்களை வழங்கி
வருகிறார். அனைத்துமே
காதல் என்ற
நல்முத்துக்கள்
காதல் கவிஞர் முத்து
ஆனந்த் அவர்களுக்கு
நெஞ்சார்ந்த
வாழ்த்துக்கள்.
தமிழ்நாடு இ பேப்பர்
தினசரி செய்திகளை
தொகுத்து வழங்கும் விதம்
பாராட்டும்படி உள்ளது
இதற்காக அல்லும் பகலும்
பாடுபடும் தமிழ்நாடு இ
பேப்பர் குடும்பத்தினர்
அனைவருக்கும்
நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்
மீண்டும் நாளை
சந்திப்போம்



**-நடேஷ் கன்னா**
கல்விடைக்குறிச்சி

---

தமிழகத்தை நெருங்கும்
டிட்வா புயல் #மணிக்கு
10கிமீ வேகத்தில் நகர்கிறது
கோவாவில் 77 அடி ராமர்
சிலையை திறந்து வைத்தார்
பிரதமர் மோடி
டிசம்பர் 4ல் இந்தியா
வருகிறார் ரஷ்ய அதிபர்
புதின்
தயார் நிலையில் 6000
நிவாரண முகாம்கள்
#அமைச்சர் சாத்தூர்
ராமச்சந்திரன் தகவல்
அகமதாபாத்: சட்டப்
போராட்டத்தில் வென்று
மருத்துவரானார் மூன்றடி
உயரமுள்ள கணேஷ்
தமிழக முதல்வர் என்
தொகுதிக்கு நிறைய
செய்திருக்கிறார்#நயினார்
வழங்கிய நற்சான்று
மயக்க ஸ்பிரே
அடித்து நகை
கொள்ளை#ராஜஸ்தான்
மாநில கொள்ளையர்கள்
மூவர் கைது
புதுக் கவிதைகளின்
அணிவகுப்பு அட்டகாசம்
நூல் விமர்சனம் சிறப்பு
வாசகர் கடிதங்கள் தூள்
கிளப்புகின்றன
மிஸ் மெஜஸ்டிக் உலக
அழகி போட்டியில் நாகூர்
திருநங்கைக்கு மூன்றாமிடம்
உரிமை கோரப்படாத
முதலீடுகளை மீட்க
விரைவில் ஒருங்கிணைந்த
இணைய தளம்
சென்னை ஒன் செயலி
வாயிலாக மாதாந்திர
பயண அட்டைபெறும்
வசதி#அமைச்சர் சிவசங்கர்
தொடங்கி வைத்தார்
வீட்டில் ஒரு ரூபாய் கூட
இல்லை=எதற்கு சிசிடிவி
கேமரா#ஏமாந்து போன
திருநெல்வேலி திருடன்
விரக்தியில் எழுதி வைத்த
கடிதம்
திருப்பதி: வைகுண்ட
ஏகாதசியை முன்னிட்டு
சாமானிய மக்களுக்கு
முன்னுரிமை
வானிலை ஆய்வு
மையத்தின் எச்சரிக்கையைப்
பின்பற்றுங்கள்#முதல்வர்
மக்களுக்கு வேண்டுகோள்
டித்வா புயல் எதிரொலி
#பாம்பன் பாலத்தில்
ரயில்கள் செல்ல தடை
பங்குச் சந்தை வர்த்தக
மோசடியில் 35 கோடியை
இழந்த முதியவர்
சான்றிதழ்களை துரிதமாய்
வழங்க வேண்டும்
#கல்லூரிகளுக்கு யுஜிசி
எச்சரிக்கை
பெங்களூரு: பண மோசடி
வழக்கில் வின்சோ
நிறுவனர்கள் கைது
மக்கள் சக்தியால் தவெக
தலைவர் விஜய் அரியணை
யில்அமர்வார்#செங்கோ
ட்டையன் கோவையில்
உற்சாகமான பேச்சு
தொழிலில் முதலீட்டு
ஆசை காட்டி ஏழு லட்சம்
மோசடி#முன்னாள்
மாநகராட்சி ஊழியர் கைது
வீடியோவால் வந்த
வினை#ரயிலில் நூடுல்ஸ்
சமைத்த பெண்ணைக்
கண்டுபிடித்த போலீஸ்
நேபாளம் வெளியிட்ட புதிய
பணத்தால் சர்ச்சை
வெளிநாட்டு சொத்துக்களை
கணக்கில் காட்டாதவர்கள்
மீண்டும் வருமான
வரி தாக்கல் செய்ய
வேண்டும்#வருமான
வரித்துறை
நடவடிக்கை=ஆடிட்டர்கள்
கஸ்டமர்களை நல்வழிப்
படுத்தவேண்டும்
திருப்பதி லட்டு நெய்
கலப்பட விவகாரம்#மூத்த
அதிகாரி கைது
எல்லை பாதுகாப்பில்
ரோபோக்களை நிறுத்த சீனா
புதிய திட்டம்
ஹாங்காங் அடுக்குமாடி தீ
விபத்தில் இதுவரை 75 பேர்
உயிரிழப்பு



**-பி.சுரேகா**
சென்னை

---

இன்றைய
தமிழ்நாடு இ
பேப்பரில் நலம் தரும்
மருத்துவ பகுதியில்
வெட்டிவேரின்
மகத்துவம்
தேங்காயின்
நன்மைகள் குறித்த
தகவல்கள் நல்ல
பயனுடையதாக
இருந்தது.
திருவண்ணாமலை
கார்த்திகை தீப விழா
ஐந்தாம் நாள் சுவாமி
அலங்கார காட்சிகள்
புகைப்படங்கள்
நேரிலே இறைவனை
தரிசித்த திருப்தியை
ஏற்படுத்தியது.
இன்றைய
நாளிதழில் தஞ்சாவூர்
அன்பழகன்
அவர்களின் வாழ்ந்தே
தீருவோம் நகரும்
நிழல்கள் தொடர்
30 வாரங்களை
கடந்து மனதிலே
நினைவுகளாக ஒட்டிக்
கொண்டுள்ளது
என்று தான்
சொல்ல வேண்டும்.
தொடர்கதை
ஆசிரியருக்கு எனது
இனிய பாராட்டுக்கள்.
27 நட்சத்திரங்களுக்கு
உரிய சித்தர்களை
வரிசைப்படுத்தி
சிறந்த ஆன்மீக
தகவலை வழங்கி
இருக்கும் கோபி
பச்சமுத்து
அவர்களுக்கு
பாராட்டுக்கள்.
நாள்தோறும்
புத்தம் புது
செய்திகள்
வாசகர்களை
கவர்ந்திழுக்கும்
கதைகள், சினிமா
செய்திகள்,
நாட்டு நடப்புகள்
என்று பல்சுவை
தகவல்களையும்
ஒருங்கே தந்து
வாசகர்களை
திருப்திப்படுத்தும்
தமிழ்நாடு இ பேப்பர்
ஆசிரியர் குழுவிற்கு
நன்றி!



**-கவி-வெண்ணிலவன்**
மணமேல்குடி

---

கோவா சர்வதேச
திரைப்பட
விழாவில் வாழ்நாள்
சாதனையாளர்
விருது நடிகர்
ரஜினிக்கு வழங்கி
மைப்படுத்தியிருப்பது
மிக்க மகிழ்ச்சியாக
உள்ளது திரையுலகில்
ரஜினியின் 50 ஆண்டு
பயணம் மாபெரும்
சாதனை! சரித்திரம்!!
சகாப்தம்!!!அபூர்வ
ராகங்கள் படம் துவங்கி
தற்போது கூலி படம்
வரை ஒவ்வொரு
படத்திலும் அவரது
நடிப்பு உழைப்பு
அர்ப்பணிப்பு
தொடர்ந்து கொண்டே
இருக்கிறது
எவ்வளவு உச்சத்தை
தொட்டாலும் மிகவும்
எளிமை ரசிகர்கள்
மீதும் தமிழக
மக்கள் மீதும் நம்
நாட்டின் மீதும் அவர்
வைத்திருக்கும்
எல்லையில்லா நேசம்
அவரது ஆன்மீகம்
என அனைத்தும்
உச்சத்தில்
வைத்திருக்கிறது சூப்பர்
ஸ்டார் பட்டம் பெற்ற
பின்பும் அன்று முதல்
இன்று வரை அந்தப்
பட்டத்திற்கு நிரந்தர
சொந்தக்காரராக
நிரந்தர சூப்பர்
ஸ்டார் ரஜினி என்று
அனைவராலும்
பாராட்டப்படும்
உச்சத்தை
எட்டியுள்ளார்
சினிமாவில் ஆரம்ப
காலத்தில் மிகவும்
போராடி வெற்றி
பெற்றவர் அவர் இன்று
உச்சத்திற்கு வர
அவர் உழைப்பிற்கு
உறுதுணையாக
நின்ற அனைவருக்கும்
நன்றி சொல்லி
பாராட்டுகிறேன்
50 ஆண்டுகாலம்
சினிமாவில் பயணிப்பது
என்பது லேசான
வேலை கிடையாது
எவ்வளவு சோதனைகள்
போராட்டங்கள்
போட்டிகள்
நிறைந்த
துறையில் தன்
திறமையாலும்
உழைப்பாலும் ரஜினி
என்ற மூன்றெழுத்து
மந்திரம் இந்த பூமி
பந்தில் அனைத்து
இடங்களிலும்
இருக்கிறது உலகம்
முழுவதும் ரசிகர்களை
பெற்றுள்ள ரஜினி
வரும் டிசம்பர் 12
75 ஆவது பிறந்தநாள்
கொண்டாடுகிறார்
முன்கூட்டியே
பொன்விழி
வாழ்த்துக்களை
குதிக்கிறேன் அவர்
வாழ்வில் அனைத்து
நலங்களும் பெற்று
நீண்ட ஆயுள்
ஆரோக்கியத்துடன்
வாழ்க வளமுடன்
திரையுலகில் இன்னும்
சாதித்து தேசிய விருது
பெற வாழ்த்துகிறேன்

**-"போயஸ் கார்டன்"**
**பொன்விழி அன்னூர்**

---

வணக்கம். 29
.11.25 அன்றைய
தமிழ்நாடு இ பேப்பர்.
காம் முதல் பக்கத்தில்
தமிழகத்தை
நெருங்கும் டிட்வா
புயல் என்ற செய்தி
அதிர்ச்சியாக
இருந்தது. இன்றைய
பஞ்சாங்கம் மிக
அற்புத நாளாக
எனக்கு அமைய
உதவியது
மனம் நிறைந்த
பாராட்டுக்கள்.

திருக்குறளை அதன்
பொருளுடன் அறிந்து
பொறுமையாக படித்து
ரசித்து மகிழ்ந்தேன்.
வலங்கைமான்
வரதராஜபேட்டை
மகா மாரியம்மன்
ஆலயத்தில் உள்ள
ஆறு நிரந்தர
உண்டியல்கள்
திறப்பு என்ற செய்தி
அங்கு அதிகமான
காணிக்கை
கிடைத்து அந்த
கோவில் வளமாக
இருக்க இறைவனை
பிரார்த்தனை
செய்தேன்..

நலம் தரும்
மருத்துவம் பகுதியில்
வெட்டிவேரின்
மகத்துவம் மற்றும்
பித்தத்தை குறைக்கும்
தேங்காய் என்று
இரு தகவல்களும்
மிகவும் பயனுள்ள
தகவல் பாராட்டுக்கள்

மயக்க ஸ்பிரே அடித்து
நகை கொள்ளை
ராஜஸ்தான் மாநில
கொள்ளையர்கள்
மூன்று பேர் கைது
என்று சென்னையில்
நடந்த அந்த சம்பவம்
அதிர்ச்சியாக படிக்க
வைத்தது.

தினம் ஒரு
தலைவர்கள் பகுதியில்
அழகு முத்துக்
கோன் அவர்களின்
வரலாறும் அவருடைய
வாள்யேந்திய வண்ண
படமும் மகிழ்ச்சியாக
படிக்க வைத்தது
பாராட்டுக்கள்.

பல்சுவை களஞ்சியம்
பக்கத்தில்
துன்பத்தின் வலி
என்ற அருமையான
தகவல் உண்மை
என்று ரசித்து படிக்க
வைத்தது . ஜோக்ஸ்
மிகவும் அற்புதம்
பாராட்டுக்கள்.

வாழ்வு தரும்
ஆரோக்கியம்
பக்கத்திலிருந்து
அனைத்து
தகவல்களும் அருமை
மருத்துவ குறிப்புகள்
மிகவும் பயனுள்ளதாக
இருந்தது.

16ஆம் பக்கத்தில்
வந்த அனைத்து
வண்ண படங்களுடன்
அரசியல் மற்றும்
ஆன்மிக தகவல்கள்
மனதை கவர்ந்தன
பாராட்டுக்கள்.

சுற்றுலா பக்கத்தில்
வந்த தமிழக
எல்லையில் ஒரு
சொர்க்கம் என்று
தானவாடியில்
தனித்துவமான
அம்சங்கள் மிக
அற்புதமான
தகவல். இதுவரை
தெரிந்து கொள்ளாத
தகவலாக எண்ணி
படிக்க வைத்தது.
பாராட்டுக்கள்.

வானிலை ஆய்வு
மையத்தின்
எச்சரிக்கை பின்பற்றி
மக்களுக்கு முதல்வர்
ஒரு வேண்டுகோள்
விடுத்தது மிகவும்
அருமை. இதை
பின்பற்றினால் நாம்
வரவிருக்கும் பேரிடரில்
இருந்து தப்பிக்கலாம்
என்று தோன்றியது.


விளையாட்டு
செய்திகள் மிகவும்
அருமை அங்கு
எங்கெங்கே என்ன
விளையாட்டுகள்
எப்படி நடந்தன
என்று தெரிந்து
கொள்ள பயனுள்ள
தகவலாக இருந்தது.

டித்வா புயலால்
இலங்கையில் 56 பேர்
உயிரிழப்பு 44000
பேர் பாதிப்பு என்ற
செய்தி அதிர்ச்சியாக
இருந்தது.

அடாது மழை
பெய்தாலும் விடாது
நல்ல தகவல்களை
மிக அருமையாக
விடியலில் எங்கள்
அலைபேசிக்கு
அனுப்பும்
அருமையான
பணியை
அருமையான
பணியினை செய்யும்
தமிழ்நாட்டை
பேப்பரின் ஆசிரியர்
குழுமத்திற்கு
மனமார்ந்த
பாராட்டுக்கள்



**-உஷா முத்துராமன்**




நாங்குநேரியில் 40 செண்ட் (பைபாஸ் ரோட்டில் இருந்து 150அடி) வீட்டுமனை இடம் விற்பனைக்கு (இளந்தோப்பு)

9884431675
9176691675

---

**ST COURIER**

The People's Choice

ISO 9001:2008 Certifed

**DOMESTRIC- INTERNATIONAL**

Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.

**Cell: 9176130601**

---

**OFFICE/RESIDENCE FOR SALE**

7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles

Contact:
**98410 62644**

---

**இடம் விற்பனைக்கு**

இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 செண்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புக்கு:
**8300134494**

---

**Make Money Without Investment Through Mobile**

**Call : 9337501889**




---

**வாடகைக்கு இடம் தேவை**

Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்புக்கு: Dr.ROBINSON
Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

---

**இடம் விற்பனைக்கு**

காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 செண்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.

Contact: **08220426606**

---

அருள்தரும் **தெய்வம்**

என்றும் நம் இல்லங்களில்

வழங்கும்

**2026** மாத காலண்டர்

தெய்வீகப் படங்களுடன்



3 காலண்டர் **100 ரூபாய்**

அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய அற்புத காலண்டர்

இது காலண்டர் அல்ல

**மினி பஞ்சாங்கம்**

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
9337501889

---

**COMMERCIAL SPACE FOR RENT**

5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45

Brokers Contact :
**98422 65900**

SAA

---

**DTCP Sites For Sale**

**@ KALAPATTY**

East Facing Site
6 Cents
**Direct Sale !!!**
**90471 87197**

SAA

---




---

**குடோன் வாடகைக்கு விடப்படும்**

**கோவை வடவள்ளி**

IOB காலனியில்
3614 sq.ft with EB Service 150HP

CT: 88708 68595

Happy Birthday



KEERTHAN

## ஆட்கள் தேவை

கோவை டவுன்ஹால் வைசியாள் வீதி போலீஸ் ஸ்டேசன் அருகில் இருக்கும் அரிசி மொத்த வியாபாரம் கடைக்கு கடையில் பணிபுரிய +2 முடித்த ஆண்கள் தேவை

வேலை நேரம்
காலை - 8.45 AM
மாலை - 8.15 PM
ஞாயிறு விடுமுறை

90039 92134

## Euro Kids

Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior



23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

## GODOWN FOR RENT

NEW GRADE-A WAREHOUSE
20,000 sqft
Location: Salem
- 12th KM Salem - Chennai NH
- Ample Truck Parking
- Dock Leveller

72000 51508

## WANTED

YELLOW FOREST FURNISHINGS
RS Puram, Coimbatore
ASST PROJECT CO-ORDINATOR
Training will be given
PROJECT MANAGER
Experience in Interior Field Preferred. Liasoning with Architects and Institutional Customers
Attractive Salary + Incentive + Bonus
Whats app Resume
98424 09490

## WANTED

GENERAL MANAGER
For An Security Agency In Coimbatore
- Qualification : Any Degree with Minimum 5 years experience in the related field.
- Age: Below 55 Years
- Salary: Rs.40,000/- per Month


Send your Resume to:
94889 44796
74484 64001
snoufalrizwan2009@gmail.com

## கோவை பீளமேட்டில் உள்ள

லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

## S.R Call Drivers Travels

24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM



Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

## WANTED

DELIVERY BOY
Two wheeler Licence must
Plenum Info Sys
Singanallur
96887 48510

## WANTED

For a Sheet Metal Fabrication Company in Malumichampatti
✷ Welders
✷ Welding Contractors
Experience in Sheet Metal Welding.
Contact :-
99405 15121

## ஆட்கள் தேவை

நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.
6385434442

## ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை

பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
94477 69114 | 044 - 6378118

## WANTED

AAIFA BUILDERS
Job location: karungal and marthandam
1. CIVIL ENGINEERS Male and Female (experience and freshers. 20 nos)
2. 3D AND 2D DESIGNER Male and Female
3. OFFICE ADMIN (any Master Degree) Male and Female
4. MARKETING EXECUTIVE Male and Female

Gmail: agnesjerlin55@gmail.com Whatsapp: 99402 43322

## WANTED

PERSONAL DRIVER
Automatic & Manual Gear
Experience Minimum 6 Years
Vacancy : 5
Salary Above ₹ 25,000*
Male
Candidates must bring thier resume with recent passport size Photo (Passbook, Pan Card & Aadar Card) Copy
Walk-in Interview Date 24-11-2025, Monday
Time : 10.30 am to 1.30 pm, 4.00 pm to 7.00 pm
VENUE : RAJAN & Co, 50 Court Road, Opp. S.L.B.School, NGL-1.
50, கோர்ட் ரோடு, எஸ்.எல்.பி. ஸ்கூல் எதிரில், நாகர்கோவில்-1.
Mob. 9487871915
ராஜன் & கோ
Experience The Revolution
"Conditions Apply"

## DRIVERS WANTED

பள்ளி வாகனம் ஓட்ட டிரைவர்கள் தேவை
NEAR ANJUGRAMAM
Contact No:
9840391231

## சேல்ஸ்மேன்கள் தேவை

ஸ்நாக்ஸ் ஏஜென்ட்-ல் பணிபுரிய அனுபவம் உள்ள சேல்ஸ்மேன்கள் தேவை.
.......நேரில் வரவும்.......
வயது : 25 முதல் 40 வரை
சம்பளம் : 20,000 + இன்சன்டிவ்
Contact No :
9952704949, 8903224949
திரவியம் ஆஸ்பத்திரி பின்புறம், புரவசேரி

## SHEMFORD LITTLE STARS

Joshua Street,
Opposite to CSI Matriculation School,
Vettoornimadam, Nagercoil-3
WE ARE HIRING
OPEN POSITION
COMPUTER OPERATOR
Literacy skill-Tamil, English, Hindi
Contact: 9443049882

## ஆட்கள் தேவை

ஏஜென்சியில் பணிபுரிய
* சேல்ஸ்மேன்
சம்பளம்: ரூ.10,000 + ரூ.100 +Incentive
* ஹெல்ப்பர்
சம்பளம்: ரூ.10,000 + ரூ.100
நேரில் வரவும். 9 am to 6 pm
தியான் ஸ்டோர்ஸ்
42/1, அசம்பு ரோடு, CBH எதிரில், வடசேரி, நாகர்கோவில்.
செல்: 8110081165
9488888898

## ஸ்ரீ கிருஷ்ணர் உபாசகர் பரிகார புகழ்

ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE



# பல்சுவை களஞ்சியம்




## நீ மனிதனாகவே இரு...

ஒரு முறை மகாகவி காளிதாசர் வயல்வெளியே வெயிலில் நடந்து சென்ற போது தாகம் எடுத்தது..!

சற்று தூரத்தில் ஒரு கிராமப்பெண் கிணற்றில் தண்ணீர் சேந்தி குடத்தில் எடுத்து வந்து கொண்டிருந்தாள்!

காளிதாசர் அவரைப் பார்த்து அம்மா தாகமாகஇருக்கு... கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா? என்று கேட்டார்.....

அந்த கிராமத்துப்பெண்ணும், தருகிறேன் உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள் என்றாள்!

உடனே காளிதாசருக்கு ஒரு உயர்வு மனப்பான்மை ஏற்பட்டு, இந்த பெண்ணிடம் நாம் யார் என்று சொல்ல வேண்டுமா என நினைத்து நான் ஒரு பயணி அம்மா என்றார்!

உடன் அந்த பெண், உலகில் இரண்டு பயணிகள் தான்! ஒருவர் சந்திரன் ! ஒருவர் சூரியன் ! இவர்கள் தான் இரவு பகலென பயணிப்பவர்கள் என்றாள்.....!

சரி என்னை விருந்தினர் என்று வைத்துக் கொள் என்றார் காளிதாசர்!

உடனே அந்தப் பெண், உலகில் இரண்டு விருந்தினர் தான்! ஒன்று செல்வம்! இரண்டு இளமை! இவை இரண்டும் தான் விருந்தினராக வந்து உடனே போய் விடும் என்றாள்!

சற்று எரிச்சலான காளிதாசர் தான் ஒரு பொறுமைசாலி என்றார்! ....



உடனே அந்த பெண் அதுவும் இரண்டு பேர்தான்...! ஒன்று பூமி ! எவ்வளவு மிதித்தாலும், எவர் மிதித்தாலும் தாங்கும்! மற்றொன்று மரம் ! யார் கல்லால் அடித்தாலும் பொறுத்துக் கொண்டு காய்களைக் கொடுக்கும் என்றாள்!

சற்று கோபமடைந்த காளிதாசர் நான் ஒரு பிடிவாதக்காரன் என்றார்!

அதற்கும் அந்த பெண் உலகிலேயே பிடிவாதக்காரர்கள் இரண்டு பேர் தான்... ஒன்று முடி ! மற்றொன்று நகம் ! இரண்டும் எத்தனை முறை வேண்டாம் என்று வெட்டினாலும் பிடிவாதமாக வளரும் என்றாள் சிரித்தபடி!....

தாகம் அதிகரிக்கவே நான் ஒரு முட்டாள் என்று தன்னை கூறிக்கொண்டார்!

உடனே அந்த பெண், உலகிலேயே இரண்டு முட்டாள்கள் தான்!

ஒருவன் நாட்டை ஆளத்தெரியாத அரசன் மற்றவன் அவனுக்குத் துதிபாடும் அமைச்சன் ! என்றாள்! ...

காளிதாசர் செய்வதறியாது, அந்த பெண்ணின் காலில் விழுந்தார்!

உடனே அந்த பெண் மகனே... எழுந்திரு... என்றதும் நிமிர்ந்து பார்த்த காளிதாசர் மலைத்துப்போனார்!

சாட்சாத் சரஸ்வதி தேவி யே அவர் முன் நின்றாள்! காளிதாசர் கைகூப்பி வணங்கியதும், தேவி தாசரைப் பார்த்து... காளிதாசா! எவன் ஒருவன் தன்னை மனிதன் என்று உணர்கின்றானோ, அவனே மனிதப்பிறவியின் உச்சத்தை அடைகிறான்!

"நீ மனிதனாகவே இரு" என்று கூறி தண்ணீர் குடத்தை காளிதாசர் கையில் கொடுத்து சரஸ்வதி தேவி மறைந்தார்..!

## சிந்திக்க சில வரிகள்....

நமது இரவுகள் நீளமானவை. அவற்றை நெடுந்தூக்கத்தில் சுருக்க வேண்டாம். நமது பகல்கள் தூய்மையானவை. அவற்றை நம் பாவங்களால் அசுத்தப் படுத்த வேண்டாம். வாழ்வில் நாம் போகிற வழி சாக்கடையாய் அமைந்து விட்டாலும், சேருகிற இடம் கோயிலாக இருக்க வேண்டும். அப்படி ஒரு வீரிய வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். வாழ்வில் நம் செயல்கள் நமது சொற்களைப் பிரதிபலிக்க வேண்டும். ஒன்று சொன்னாலும் "நச்"சென்று சொல்ல வேண்டும். அது மந்திரச் சொல்லாக ஒலிக்க வேண்டும். நம் சொல்லை உலகம் உன்னிப்பாகக் கேட்க வேண்டும். போரில்லா உலகம் காண விழைவது, "No War" மந்திரம் ஒலிப்பது,



பேரன்பு வெளிச்சம் பரப்புவது போன்ற நமது சொல்லும், செயலும் மானுட சமூகத்திற்கு நன்மை பயக்கும் அதிர்வலையை ஏற்படுத்த வேண்டும். நமது சொல், செயல் ஒவ்வொன்றும் அர்ச்சுனன் அம்பு போன்று இருக்க வேண்டும். எடுக்கும் போது ஒன்று. தொடுக்கிறபோது நூறு. படுகிறபோது ஆயிரம். நமது சொல்லும், செயலும் நம் எதிர் நிற்பவனை நம்முடன் இணைத்துக் கொள்ளும்படி அமைய வேண்டும். உலகின் எந்த மூலையில் போர் வெடித்தாலும், இங்கே நமக்கு வலிக்க வேண்டும். அதற்கு நாம் சத்ரியனாக இருக்கத் தேவை இல்லை. சாணக்யனாக இருக்க வேண்டும். நாம் "தீ" என்று எழுதினால் பேப்பர் பொசுங்குகிற வாடை வரவேண்டும். அதுதான் சொல்லிலும், செயலிலும் நமக்கு சரஸ்வதி கடாட்சம். கனவுகள் மெய்ப்பட வாழ வேண்டும். அதுதான் சரியான, வீரியமான வாழ்க்கை. ஒருவன் பிறக்கும் போது அவனுக்கு மூச்சு இருக்கிறது. ஆனால் பெயர் இல்லை. அவன் இறந்த பிறகு பெயர் (சடலம்) இருக்கிறது. ஆனால் மூச்சு இல்லை. அவ்வாறு மூச்சுக்கும், பெயருக்கும் இடையே உள்ள இடைவெளி தான் வாழ்க்கை. வாழ்க்கை என்பது எவரும் பதில் காண முடியாத கேள்வி. மரணம் என்பது எவரும் எதிர்த்து கேள்வி எழுப்ப முடியாத பதில். எனவே பதில் நம்மை எட்டும் வரை, கேள்வியை ரசிப்போம். புலம்பல்களைத் தவிர்ப்போம். நமது இருப்பை அர்த்தமுள்ளதாக ஆக்கி, மண் பயனுற வாழ்வோம். வாழ்க்கை வாழ்வதற்கே.

## மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன? | வளையல் |
| வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது அது என்ன? | விமானம் |
| ஒட்டியவன் ஒருத்தன், பிரித்தவன் இன்னொருவன். அது என்ன? | கடிதம் |
| உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்? | எறும்பு |
| நான் சூரியனைக் கடந்து சென்றால் கூட எனக்கு நிழல் ஏற்படாது. நான் யார்? | தென்றல் |



## ஜோக்ஸ்

1--ஒரு புடவை வாங்க கடையையே புர ட்டிப் போடுகிறாயே?? ஆதிகாலத்தில் ஆதாமுக்கு இந்த தொல்லைகள் இல்லை!! ஏவாள் தான் வெறும் இலை தழைகளைத் தானே உடுத்தி வந்தாள்? மனைவி --அதற்கு அவள் கணவன் எத்தனை மரங்கள் ஏறி இறங்கினானோ???

==========================


2-- தொலைபேசி யில் ஒரு பதற்றமான குரல்
"டேய் மச்சான் ---,எங்கடா இருக்க??
""வீட்ல தான்டா இருக்கேன்--
""அப்பா இப்பதான் டா நிம்மதி யா இருக்கு--
"ஏன்டா ? என்ன விஷயம்??
""காலையில் பேப்பர் பார்த்தேன்.அதுல,,உங்க தெருவில் வெட்டியா சுத்திகிட்டிருந்த நாய்களை யெல்லாம் கார்பரேஷன்காரங்க. புடிச்சுட்டு போனதா செய்தி வந்தது !!நீ மாட்டிக்கிட்டியோன்னு பயந்தே போயிட்டேன்!!!

==========================

3-- அம்மா --என்னடி உன் புருஷன் தினமும் இப்படி குடிச்சிட்டு வாரே??
மகள்--தெரியல அம்மா நான் இன்னும் டேஸ்ட் பண்ணி பார்க்கல!!!

==========================

4-- தாத்தா --நீ என் தங்கக்



குட்டி தாத்தா சொல்வதை கேள்!! புத்தகப்பை மிகவும் கனமாக இருக்கு அதனால் நான் பையை தூக்கி வருகிறேன் நீ நடந்து வரயா??
பேத்தி--
வேண்டாம் தாத்தா என் பையை தூக்கி நீ கஷ்டப் பட வேண்டாம் பையை நானே தூக்கிக்கிறேன் ..நீ என்னை தன் தூக்கி க்கிட்டு வா!!

==========================

5-- பகலில் உங்களுக்கு கண் தெரியாதா. டாக்டர்??
தெரியுமே ஏன் கேட்கிறாய்??
இல்ல. பகிர்வை நேரம் மாலை ஆறிலிருந்து எட்டு வரை ன்னு போர்டு வெச்சிருக்காங்க அதான் கேட்டேன்!!++



# ஜோதிடம் அறிவோம்



## குழந்தைப்பேறு அருளும் அன்ன பிரசாதம்...



பல்லவர்களின் கடைசி மன்னரான அபராஜிதனால் கட்டப்பட்ட கோயில். அவரது மகன் பாம்பு தீண்டி உயிருக்குப் போராடிய நேரத்தில், அவரது கனவில் சிவன் தோன்றி பரிகாரங்களைக் கூறி மறைந்தார். மன்னர் அவற்றை நிறைவேற்றியதால், அவரது மகன் உயிர் பிழைத்தார். இதனால் மன்னர் ராமேசுவரம் சென்று நீராடுவதற்கு மூழ்கியபோது சிவன் லிங்க வடிவில் கடலில் தோன்றியதால், தாடூர் இறைவன் "கடலீஸ்வரர்' என்ற பெயர் பெற்றதாக சுவாமி திருநாமம் குறித்து இன்னொரு காரணமும் கூறப்படுகிறது.

1,500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கடலீஸ்வரர் கோயில் அந்நியப் படையெடுப்பால் சிதிலமடைந்தது. பிற்காலத்தில் மார்த்தாண்ட மன்னரால் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.


இறைவி யோகீஸ்வரி தேவி, நவகிரகங்கள், கணபதி, வள்ளி} தெய்வானை சமேத முருகன், விநாயகர், தட்சிணாமூர்த்தி, விஷ்ணு, பிரம்மா, துர்கை, சண்டிகேஸ்வரர், நாகதேவதை உள்ளிட்ட சந்நிதிகள் உள்ளன. ஈசான்ய மூலையில் லிங்கேஷ்வரர் பெரிய நீர்த்தொட்டியில் வைக்கப்பட்டுள்ளது சிறப்பு.

மழை பொய்த்த காலங்களில் சிவனுக்கு 101 குடம் அல்லது சங்கினால் அபிஷேகம் செய்த சில நாள்களிலேயே மழை பொழிந்துள்ள அதிசயமும் இத்தலத்தில் நிகழ்ந்துள்ளது.

திருவண்ணாமலை கோயிலை ஒரு முறை சுற்றி வந்தால் கிடைக்கும் பலன் கடலீஸ்வரர் கோயிலை 27 முறை சுற்றிவந்தால் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கோயிலின் ஈசான்ய மூலையில் தீர்த்தம் உள்ளது. கோயில் மண்டபத்தில் சந்திரன், சூரியன், பாம்பு, பல்லி, தேள் சின்னங்கள் இருப்பதால், விஷ ஜந்துக்களின் கடிகளில் இருந்து விடுபடும் பரிகாரத் தலமிது. இங்கு சூரிய பகவானுக்கு சிறப்பு பூஜைகள் செய்தால், கிரக தோஷங்கள் விலகிவிடுமாம்.

இத்தல வழிபாடு திருமணத் தடை, நோய்களை நீக்குகிறது. ஞாயிறுதோறும் மாலை 4 மணிக்கு நடைபெறும் அன்னாபிஷேகத்தில் பங்கேற்று பிரசாதத்தைச் சாப்பிட , குழந்தைப்பேறு கிடைப்பதாக நம்பிக்கை. இந்தக் கோயிலில் தற்போது திருப்பணிகள் நிறைவு பெற்று, டிசம்பர் 1 (திங்கள்கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள்ளாக மகா கும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

## கிரக அமைப்புகள் செல்வ வளர்ச்சியை எப்படி பாதிக்கின்றன?



சில கிரகங்கள் உங்களைச் சேமிக்க வைக்கின்றன, மற்றவை உங்களைச் செலவிட வைக்கின்றன. இவை ஒரு நபருக்கும் மற்றொரு நபருக்கும் மாறுபடும். அவரவர் பிறந்த நேரத்தில் ஏற்பட்ட கிரக அசைவுகளும், அமர்வுகளும் இதற்குக் காரணம்.

ஒருவரின் வரவுகள் மற்றும் செலவுகள் பழக்கம் அல்ல, அவை கிரக வடிவங்கள் மட்டுமே. ஒவ்வொரு கிரகமும் சொல்லும் அதன் இயல்புகளை, இந்த கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

**சுக்கிரன்**

வாழ்க்கை முறை மற்றும் ஆடம்பரம்.

அழகு, பிராண்டுகள், இரவு உணவுகள், அலங்காரத்திற்காகச் செலவிடுவது.

வசதிக்கான ஆசை தூண்டும்.

உயர்தர தேர்வுகள் மற்றும் ஆடம்பர செலவுகள்.

**செவ்வாய்**

(உந்துவிசை) தூண்டுதல் செலவு

விரைவான முடிவுகள், உடனடி கொள்முதல், "வண்டியில் சேர்" (ADD TO CART)என்ற சிலிர்ப்பு

**ஆக்ரோஷமான மனநிலை :** ஆக்ரோஷமான செலவு

**குரு**

பெரிய பண நகர்வுகள்

"விரிவாக்கக் கோள்"

முதலீடுகள், ஆபத்து, தொண்டு, பயணம்.

அதிகப்படியான நம்பிக்கையின் மூலம் செல்வத்தை வளர்க்கலாம் அல்லது எரிக்கலாம்.

**புதன்**

புத்திசாலித்தனமான அல்லது தந்திரமான கையாளுதல்

ஒப்பந்தங்கள், வர்த்தகம், கணக்கீடுகள்.

சரியான இடங்களில் புதன் அமர்வு புத்திசாலித்தனமான சேமிப்பு

தவறான இடங்களில் புதன் அமர்வு விரைவான இழப்புகள்.

**சனி**

சேமிப்பாளர் & வரவு செலவுத் திட்ட (BUDGET GURU) குரு.

மெதுவாக, நிலையானதாக, நடைமுறைக்கு ஏற்றதாக நடத்துதல் .

நீண்ட கால பாதுகாப்பு, திட்டமிடல் மற்றும் ஒழுக்கத்தில் கவனம் செலுத்துவது .

பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் வீடுகள்

**2வது வீடு:** சேமிப்பு, வங்கி இருப்பு, பணக்கண்ணோட்டம்

**6வது வீடு:** கடன்கள், EMI, கடன்கள், தினசரி ஒழுக்கம்

**11வது வீடு :** ஆதாயங்கள், வருமானம், லாபம், நிறைவேற்றம்

**12வது வீடு:** செலவுகள், இழப்புகள் & வடிகால் வெளியேற்றம் ( எதோ ஒரு சில காரணங்களுக்காக)

**செல்வத்திற்கான சூத்திரம்**

வலுவான 2வது + 11வது வீடு + நிலையான சுக்கிரன் / வியாழன் / சனி = செல்வம் அதிகரிப்பு

12வது + தூண்டுதல் செவ்வாய் = அதிகமாகச் செலவு செய்தல் & கடன்.

சரி இந்த அமைப்புகள் சரியாக இருந்தால் அந்த ஜாதகருக்கு எப்போதும் நல்லதே நடக்குமா என்றால், அது தான் இல்லை. ஜாதகரின் தசா புத்திகள் அந்த நபருக்கு சாதகமாக அமையும் போது மட்டுமே நல்லது நடக்கும். ஏனெனில், தசா புத்திகள் தான் ஒரு சம்பவத்தை நடத்தி வைக்கும். மற்றபடி ஒருவரின் ராசி கட்டத்தில் இருக்கும் அமைப்பு அந்த ஜாதகரின் அமைப்புகள் எவ்வாறு உள்ளது என மட்டுமே உரைத்திடும், தசா புத்திகளில் மட்டுமே சாதகமான அல்லது பாதகமானவைகள் நடந்தேறும்.

## பிரச்னைகளை தீர்க்கும் பெருமாள்



சோழர் கால கோட்டத்தில் ஒன்றான, வெண்குன்றக் கோட்டத்து மருதாடு நாட்டு கொடுங்காலூருக்கு உள்பட்டது கீழ்க்கொடுங்காலூர். கொடுங்காலூருக்குக் கிழக்குத் திசையில் இருப்பதாலும், அடர்ந்த கால்வாய்களை உடைய ஊர் என்பதாலும், இதைக் கீழ்க்கொடுங்காலூர் என்று குறிப்பிடுகிறார்கள். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த வந்தவாசிக்கு அருகே இந்தக் கிராமம் உள்ளது.

கிராமத்தின் நடுநாயகமாக கரியமாணிக்கப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இது 600 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

விஜயநகர ஆட்சிக் காலத்தில் வைணவர்களுக்கு அதிக செல்வாக்கு இருந்ததாகவும், அவர்கள் அதிக அளவில் வாழ்ந்த பகுதியாக இது இருந்திருக்கலாம் என்றும், இக்கோயில் பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டு இருக்கலாம் என்றும், பின்னர் பல்லவர்கள், சோழர்கள் ஆட்சியில் கோயில் புனரமைப்பு செய்யப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

மூலவர் கரியமாணிக்கப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராகக் காட்சியளிக்கிறார். உற்சவர் வரதராஜ பெருமாள். லட்சுமி ஹயக்ரீவர், கல்யாண சீனிவாசப் பெருமாள், யோக நரசிம்மர், விஷ்வக்சேனர், அனுமன், ராமானுஜருக்கும் சந்நிதிகள் உள்ளன.

சிறந்த பரிகாரத் தலம். இக்கோயில் வழிபாட்டால் திருமணத் தடை அகலும், குழந்தைப் பாக்கியம் கிட்டும், சொத்து } வீடு பிரச்னை முடிவுக்கு வரும், மனக் குழப்பம் நீங்கும். மலைபோன்ற பிரச்னைகளும், சூரியனைக் கண்ட பனிபோல் விலகும் என்கின்றனர். நெய் தீபம் ஏற்றி இத்தலத்தில் பிரார்த்தனை செய்தாலே போதும், உடல் ஆரோக்கியம் மேம்படும்.

பக்தர்கள் நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் இப்பெருமாள் நிறைவேற்றுகிறார். "கருதியதை முடிப்பார் கரியமாணிக்கப்பெருமாள்' என்பதே பக்தர்களின் நம்பிக்கை. பெருமாளுக்கு இரு தேங்காய்களை உடைப்பதாக பக்தர்கள் வேண்டிக் கொள்வர். வேண்டுதல் நிறைவேறியதும் தேங்காய்களை உடைத்து நன்றியைக் காணிக்கையாகச் செலுத்துகிறார்கள்.

## கல்வி தரும் கும்பேஸ்வரர்

ஊழிக்காலம் எனப்படும் மகாபிரளயத்துக்குப் பிறகு பிரம்மன் தனது படைப்புத் தொழிலைத் தொடங்குவதற்காக தவம் செய்தது, பிரம்மனது வேண்டுதலுக்கிணங்க சிவன் தந்த அமுதக்கலசமானது தங்கியது, பிரளய காலத்து வெள்ளத்தில் மிதந்து வந்த கும்பத்தின் மூக்கின் வழியே அமுதமானது பரவிய காரணத்தினால் "குடமூக்கு' என்று பெயர் பெற்றது எனப் பலவாறாகப் போற்றப்படும் தலம், கும்பகோணம்.

**இறைவனின் சிறப்பு:** ஆதியும் அந்தமும் இல்லாத அநாதியான இறைவன் சிருஷ்டியின் தொடக்கமாக கும்பத்திலிருந்து தன்னை வெளிப்படுத்திக் கொண்டதால் இத்தல இறைவன் "கும்பேஸ்வரர்', " ஆதிகும்பேஸ்வரர்' என்றும், அமுதத்திலிருந்து உதித்ததால் "அமுதீசர்' என்றும் போற்றப்படுகிறார். இவரது திருமேனி மணலால் ஆனது. இந்த பாணலிங்கத்தின் உச்சி கும்பத்தின் வாய் போன்று அமைந்திருக்கிறது. இந்த பாணத்தைக் கவசமிட்டு மூடியிருப்பர். இதற்கு திருமஞ்சனம் நிகழ்த்தப்படுவது இல்லை. புனுகுச் சட்டம் சாத்தப் பெறுவதே வழமை. இத்தகு லிங்கங்களை வணங்குவதால் அபாரமான ஞானமும் கல்வியும், முடிவில் மோட்சமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.


**இறைவியின் சிறப்பு:** மங்களேஸ்வரி, மங்கள நாயகி, வளர்மங்கை என்றும், சக்தி பீடங்களில் ஆதிபீடம் என்ற சிறப்புடைய மந்திர பீடத்தில் உறைந்து அருளுவதால் மந்திரபீடேஸ்வரி என்றும் பல்வேறு திருநாமங்களால் இறைவி போற்றப்படுகிறாள். ஆதிசிவன் தம்முடைய சரிபாதி உரிமையுடைய 36,000 கோடி மந்திர சக்திகளையும் இத்தலத்தில் அம்பாளுக்கு அருளியிருக்கிறார். அத்துடன் தமக்கும் உரிய சக்திகளுடன் சேர்த்து மொத்தம் 72,000 மந்திர சக்திகளுக்கும் ஏகாதிபதியாக விளங்குகிறாள் மங்களாம்பிகை.

இத்தலத்து அம்மை கேசாதி பாதம் வரை 51 சக்தி பாகங்களாகக் காட்சியளிப்பது வேறெங்கிலும் காண இயலாத சிறப்பு. இவ்வம்மையை அந்தி நேரத்தில் தரிசனம் செய்வதால் அனைத்து தோஷங்களும் நீங்கி விடும். ஏவல், திருஷ்டி போன்ற எதிர்மறை வினைகள் அழிந்து, சகல நன்மைகளும் உண்டாகும்; இவரை தரிசித்த கணத்திலேயே சகல பாவங்களும், நோய்களும் நீங்கும்.

"வெள்ளிக்கிழமைகளில் இவ்வன்னைக்கு செவ்வரளி மாலை சாத்தி, குங்குமத்தால் அர்ச்சனை செய்து வணங்கினால் நினைத்த காரியம் நிறைவேறிடும்' என்கிறார்கள். கிரக தோஷத்துக்கு ஆட்பட்டவர்கள் இந்த அன்னையை வழிபட்டால், தோஷம் நீங்கப்பெறுவர்.

நவ நதிகளும் நீராடிடும் சிறப்புடைய மாசிமக புனித நீராடலுக்குப் பெயர் பெற்ற தலம். கோயில் நகரமான கும்பகோணத்தின் தலைமை சிவராஜ தானியாக விளங்கிடும் இந்த கும்பேஸ்வரர் கோயிலின் ராஜகோபுரம் 128 அடி உயரமுடையது. இவ்வாலயத்தை மாசி மாதத்தில் வழிபட்டால் அஸ்வமேத யாகம் செய்த புண்ணியமும் , ஆவணி மாதத்தில் வழிபட்டால் தீர்க்க செ□மாங்கல்யமும் கிடைக்கும் என்கின்றன தெய்வநூல்கள். சோழர்கள் காலத்தில் பல சிறப்புகளுடன் ஏற்றம் பெற்று விளங்கியிருந்த கோயில்.

பல சிறப்புகள் கொண்ட இக்கோயிலுக்குத் திருப்பணிகள் நடைபெற்று வந்த நிலையில், டிசம்பர் 1ஆம் தேதி (திங்கள்கிழமை) காலை 6 மணிக்கு மேல் 7 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.





## வாழ்க்கையை உயர்த்தும் அய்யப்ப பக்தர்கள் விரதம்

மண்டல பூஜைக்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை திறக்கப்பட்டுள்ள நிலையில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி அய்யப்பனை வழிபடுகின்றனர். மாலை அணிந்து சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் விரத முறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டியது அவசியம்.

மாலை அணிந்து விரதம் இருந்து சபரிமலை செல்பவர்கள் கருப்பு, நீலம், பச்சை, காவி போன்றவற்றில் ஏதாவது ஒரு நிற வேட்டி-சட்டையை அணிய வேண்டும். அதிகாலை எழுந்து குளிர்ந்த நீரில் நீராடி 108 சரணம் கூறி பூஜை செய்ய வேண்டும். இதேபோல சூரியன் மறைந்த பிறகு மாலையில் நீராடி 108 சரணம் கூறி ஐயப்பனுக்கு பூஜை செய்ய வேண்டும், குளிப்பதற்கு சோப்பு உபயோகிக்க கூடாது. இரவில் தூங்கும்போது தலையணை, மெத்தை உபயோகிக்க கூடாது. பகலில் தூங்குவதை தவிர்க்க வேண்டும். பிரம்மச்சரிய விரதத்தை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். இது மனோவலிமையை பெருக்கி மனித வாழ்க்கையை உயர்த்துவதற்கு உதவுகிறது. இதுதவிர பெண்கள் அனைவரையும் தாயாக பார்க்க வேண்டும்.

சைவ உணவு மட்டும் உண்ண வேண்டும். மது அருந்தக்கூடாது, பீடி, சிகரெட், பான்மசாலா போன்றவற்றை அறவே நீக்கி விட வேண்டும். திரிகரண சுத்தி (மனம், வாக்கு, செயல்) ஆகியவற்றில் கவனமாக இருக்க வேண்டும். ஐயப்பனை எண்ணத்தில் எப்போதும் மனதில் நினைத்திருக்கவேண்டும். ஐயப்ப சரணத்தை மனதில் கூறி க்கொண்டிருந்தால் எண்ணங்கள் தூய்மையாகும். செய்யும் செயல்களும், பேசும் பேச்சுக்களும் நல்லவிதமாக அமையும். சண்டை, சச்சரவுகளில் கலந்துகொள்ளக்கூடாது. எல்லோரிடமும் சாந்தமாக பழக வேண்டும்.

காமம், கோபம், கஞ்சத்தனம், மோகம், அகம்பாவம், துவேஷம் முதலிய குணங்களை குறைப்பதற்கு, எப்போதும் ஐயப்பன் திருநாமத்தை உறுதுணையாக கொள்ள வேண்டும்.

பக்தனின் நெஞ்சினில் எப்போதும் நிறைந்து நிற்பது ஐயப்பனின் பேரொளி திருவுருவமே ஆகும். உரையாடும்போது சுவாமி சரணம் என்று சொல்லி தொடங்குவதும், முடிக்கும்போதும் சுவாமி சரணம் என்று சொல்லி முடிப்பதும் கூடுதல் நன்மைகளை தரும். ஒரு ஐயப்ப பக்தரை வழியில் காண நேர்ந்தால் அவர் அறிமுகம் இல்லாதவராக இருந்தாலும் சுவாமி சரணம் என்று வணங்க வேண்டும்.

குடை பயன்படுத்தக் கூடாது. காலணிகள் அணியக் கூடாது. சூதாடுதல் கூடாது. சினிமாவுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். மார்கழி மாதத்தில் 15 நாட்களாவது ஒருவேளை உணவை விடுத்து விரதம் இருக்க வேண்டும்.



## தனுஷ்கோடி பகுதியில் மழை நீர் தேங்கியதால் பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள்



தனுஷ்கோடி பகுதியில் மழை நீர் தேங்கியதால் கரையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் தங்க வைக்கப்பட்டவர்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வள்ளலார் சந்தித்து பேசினார். உடன் கலெக்டர் சிம்ரன்ஜித்சிங் காலோன் உள்ளார்.

## புதிய சமுதாய கூடம் கட்டிடம் திறப்பு விழா



திருப்பத்தூர் மாவட்டம், விஷமங்கலம் ஊராட்சியில் நேற்று புதிய சமுதாய கூடம் கட்டிடம் திறப்பு விழாவில் அமைச்சர் வேலு, கலெக்டர் சிவசவுந்தர வல்லி பங்கேற்றனர்.

## நீலமலைத் தொல்லியல் என்ற நூல் வெளியீடு



நீலகிரி மாவட்டத்தில், யாக்கை தனியார் அமைப்பின் சார்பில், நீலமலைத் தொல்லியல் என்ற நூலினை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டார். உடன் கலெக்டர் லட்சுமி பவ்யா உட்பட பலர் உள்ளனர்

## ஏழு மீட்டர் உயரத்துக்கு எழுந்த கடல்அலை



கடலூர் பகுதியில் நேற்று மாலை ஏழு மீட்டர் உயரத்துக்கு எழுந்த கடல்அலை.

## ராமேஸ்வரத்தில் கடல் அரிப்பு



ராமேஸ்வரத்தில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வள்ளலார், கலெக்டர் சிம்ரன்ஜித்சிங் காலோன் பார்வையிட்டனர்.

## கோவாவில் 77 அடி உயரமுள்ள ராமரின் வெண்கல சிலை





கோவாவில் 77 அடி உயரமுள்ள ராமரின் வெண்கல சிலையை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

## தமுஎகச ஓய்வூதியர் கிளை மதுரை மாநகர் சார்பில் பாராட்டு விழா மற்றும் கருத்தரங்கம்

**மதுரை, நவ.30:**

தமுஎகச ஓய்வூதியர் கிளை தலைவர் வெ.சங்கரலிங்கம் தலைமையில் 29.11.25 காலை நடைபெற்றது.

கிளைச்செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார். ஜீவமணி பாடல்கள் பாடினார். வாசிப்பை நேசிப்போம் இலவச நூலக பொறுப்பாளர் அ.முகமது இப்றாகீம் மற்றும் தெய்வத்தாய் மாதரி குறுங்காப்பிய அந்தாதி நூலாசிரியர் அ.முத்துவேலன் ஆகியோரை அவர்களது சமூக பணி மற்றும் தமிழ் வளர்ச்சிப்பணிக்காக தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மதுரை மாவட்ட தலைவர் மு.பரமேஸ்வரன் பாராட்டி கௌரவித்தார்.

மேலும் எதிர்கொள்வோம் எஸ்ஐஆர் ஐ என்ற தலைப்பில் எஸ்.முத்துராமலிங்கம், தொழிலாளர் நலச்சட்ட திருத்தங்களும் ஓய்வூதியர்களும் என்ற தலைப்பில் கோவிந்தராஜ் அவர்களும் கருத்துரையாற்றினர்.

அடைக்கன், மதுரைசுகி, பாலமுருகன் , மதுரை மணி ஆகியோர் கவிதை வாசித்தனர். தமுஎகச வின் மாவட்ட செயலாளர் பூ.பாண்டிய முத்துக்குமரன் மற்றும் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் அ.பால்முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வாசிப்பை நேசிப்போம் இலவச நூலக பொறுப்பாளர் அ.முகமது இப்றாகிம் ஏற்புரை வழங்கினார்.கிளை பொருளாளர் ஜி.உதயகுமார் நன்றி கூறினார்.

இக்கூட்டத்தில் மாநிலக் குழு உறுப்பினர் அ.நா. சாந்தாராம் உள்ளிட்ட 26 பேர் கலந்து கொண்டனர். வெ.சங்கரலிங்கம் கிளை தலைவர் முனைவர் சு கிருஷ்ணன் கிளை செயலாளர் தமுஎகச ஓய்வூதியர் கிளை.



## பூண்டி நீர்தேக்கத்தில் நீர் திறக்கப்பட்டது



நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை காரணமாக பூண்டி நீர்தேக்கத்தில் இருந்து 5000கன அடி நீர் திறக்கப்பட்டு உள்ளது.

## பள்ளிவாசல் திறப்புக்கு இந்து மக்கள் சீர்வரிசை



புதுக்கோட்டை அன்னவாசலில் பள்ளிவாசல் திறப்புக்கு இந்து மக்கள் சீர்வரிசை எடுத்து வந்தது, மத நல்லிணக்கத்துக்கு அடையாளமாக அமைந்தது.

## செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் திறப்பு




செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரிநீர் திறப்பு 2,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டது, இதனால் அடையாறு கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

## ஏரல் பாலம் கலெக்டர் இளம்பகவத் நேரில் பார்வையிட்டார்



தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பாலம் மற்றும் தாமிரபரணி ஆற்றின் வழியாக செல்லும் தண்ணீர் வரத்தை கலெக்டர் இளம்பகவத் நேரில் பார்வையிட்டார்.

## திற்பரப்பு அருவியில் பயணிகள் குளிக்க தடை



குமரி மாவட்டத்தில் தொடர் மழையால் திற்பரப்பு அருவியில் வெள்ளம் அதிகரித்துள்ளதால், ஏழாவது நாளாக நேற்று சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

## 30 பேர் அடங்கிய 1 தேசிய பேரிடர் மீட்பு குழு வருகை



வங்கக் கடலில் உருவாகியுள்ள 'டிட்வா' புயலால் விழுப்புரம் மாவட்டத்திற்கு நேற்றும் நவம்பர் 29 இன்றும் நவம்பர் 30 வானிலை மையம் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதால் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள நேற்று நவம்பர் 29 மரக்காணத்திற்கு 30 பேர் அடங்கிய 1 தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வருகை தந்துள்ளனர்.

## திருநள்ளாறு சனிஸ்வர பகவான் திருக்கோயிலில் பாஜக மூத்த நிர்வாகி தமிழிசை தரிசனம்




காரைக்கால், திருநள்ளாறு சனிஸ்வர பகவான் திருக்கோயிலில் பாஜக மூத்த நிர்வாகி தமிழிசை நேற்று தரிசனம் செய்தார்.

## சாலை பாதுகாப்பு ஆலோசனை கூட்டம்



கோவையில் சாலை பாதுகாப்பு ஆலோசனை கூட்டம் உச்சநீதிமன்ற நீதிபதி அபய மனோகர் சாப்ரே தலைமையில் நடந்தது. கலெக்டர் பவன்குமார் உள்பட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## மின் விளக்கில் ஜொலிக்கும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவில்



கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி ஜொலிக்கும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி கோவில்.

## எஸ்ஐஆர் பணிகளை கலெக்டர் பிரதாப் நேரில் பார்வை



மதுரவாயல் தொகுதியில் எஸ்ஐஆர் பணிகளை கலெக்டர் பிரதாப் நேரில் பார்வையிட்டு, பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தினார்.

## ரவுசு மணி

மனது குருடாக இருக்கும் போது கண்கள் இருந்தும் பயனற்றவை என்பதை உணர்ந்தால்.... வெற்றி நமதே...



V. முத்து ராமகிருஷ்ணன்

## மாநில மாவட்ட நிர்வாகிகள் சங்கமம்



தமிழ்நாடு பாஜக அனைத்து பிரிவுகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் சங்கமம் நேற்று கும்பகோணத்தில் நடந்தது.

## சென்னையில் கடல் அலைப்பின் சீற்றம்



சென்னையில் நேற்று மாலை கடல் அலையின் சீற்றம்.

## நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்



திருவண்ணாமலை மாவட்டம் ,செய்யாறு ஊராட்சி ஒன்றியம், செய்யாறு சுகாதார மாவட்டம் சார்பில் கொருக்கை கிராமத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நேற்று காலை நடைபெற்றது.

## மீட்பு பணிக்காக தேசிய பேரிடர் மீட்பு படை



டிட்வா' புயல் எதிரொலியாக செங்கல்பட்டு மாவட்டத்தில் கூடுவாஞ்சேரி, முடிச்சூர் ஆகிய பகுதிகளில் மீட்பு பணிக்காக தேசிய பேரிடர் மீட்பு படையினர் முகாமிட்டுள்ளனர்.

## எஸ்ஐஆர் முகாமில் கலெக்டர் பிரவீன்குமார் ஆய்வு செய்தார்



மதுரை வக்ப் வாரிய கல்லூரியில் எஸ்ஐஆர் முகாமில் கலெக்டர் பிரவீன்குமார் நேற்று ஆய்வு செய்தார்.

## மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவி



ஈரோடு நசியனூர், பாரதி கல்வி நிலையத்தில் நேற்று நடந்த மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவியினை அமைச்சர் முத்துசாமி வழங்கினார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரயில்வேயில் 3,058 காலிப்பணியிடங்கள்; விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு

ரயில்வேயில் 12-ம் வகுப்பு தகுதியில் நிரப்பப்படும் NTPC Under Graduate பணியிடங்களுக்கு விண்ணப்பம் நவம்பர் 27 தேதியுடன் முடிவடைந்த நிலையில், விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் மொத்தம் 3.058 காலிப்பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்களுக்கு https://www.rrbchennai.gov.in/ என்ற இணையதளத்தில் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.

ரயில்வேயில் வேலை பார்க்க விரும்புகிறவர்களின் கவனத்திற்கு.. தேசிய அளவில் ரயில்வேயில் காலியாக உள்ள 3,058 காலிப்பணியிடங்களுக்கு ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்க நவம்பர் 27-ம் தேதியே கடைசி நாளாக இருந்ததது. இந்நிலையில், கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, டிசம்பர் 4-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

12-ம் வகுப்பு தகுதி உள்ளவர்கள் சென்னை ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியத்தின் இணையதளத்தில் பதிவு செய்து உடனே விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பம் அக்டோபர் 28-ம் தேதியே தொடங்கப்பட்ட நிலையில், தற்போது டிசம்பர் 4-ம் தேதி வரை பெறப்படுகிறது. விண்ணப்பக் கட்டணத்தை டிசம்பர் 6 வரை செலுத்தலாம். அதே போன்று, விண்ணப்பத்தில் திருத்தம் மேற்கொள்ள டிசம்பர் 7 முதல் 16 வரை அவகாசம் வழங்கப்படும். scribe விவரங்கள் அளிக்க டிசம்பர் 17 முதல் 21 வரை அவகாசம் அளிக்கப்படுகிறது. கல்வி மற்றும் இதர சான்றிதழுக்கான கட்-ஆஃப் தேதியும் 04.12.2025 ஆக மாற்றப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வேயில் தொழில்நுட்பம் அல்லாத பதவிகளில் 12-ம் வகுப்பு தகுதியின் அடிப்படையில் கமர்சியல் உடன் டிக்கெட் கிளார்க், அக்கவுண்ஸ் கிளார்க் உடன் டைப்பிஸ்ட், ஜூனியர் கிளார்க் உடன் டைப்பிஸ்ட் மற்றும் டிரைய்ன் கிளார்க் ஆகிய பதவிகளில் நிரப்பப்படுகிறது. 2025-ம் ஆண்டு தேசிய அளவில் மொத்தம் 3,058 காலிப்பணியிடங்கள் இதன் மூலம் நிரப்பப்படுகிறது.

இப்பணியிடங்களுக்கு 2026 ஜனவரி அடிப்படையில் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, குறைந்தபட்சம் 18 முதல் 30 வயது வரை இருக்கலாம். மத்திய அரசு தளர்வு பின்பற்றப்படும்.

கல்வித்தகுதியை பொருத்தவரை, விண்ணப்பதார்கள் கட்டாயம் 12-ம் வகுப்பை 50 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அக்கவுண்ஸ் கிளார்க் உடன் டைப்பிஸ்ட் மற்றும் ஜூனியர் கிளார்க் உடன் டைப்பிஸ்ட் ஆகிய 2 பதவிகளுக்கு மட்டும் ஆங்கிலம் அல்லது இந்தியில் தட்டச்சு தெரிந்திருக்க வேண்டும்.

# சுற்றுலா: சென்னையிலிருந்து சுற்றுலா செல்வதற்கு சிறந்த இடங்கள்!



ரோடு ட்ரிப் என்பது தற்போது அதிகரித்துவரும் நிலையில் சென்னைக்கு மிகவும் அருகாமையில் நாம் ரோடு ட்ரிப் செல்ல ஏற்ற இடங்களை பற்றிய முழு விவரங்களை இந்த பதிவில் காணலாம்.

முக்கிய அம்சங்கள்:

ஏலகிரி மலை சுற்றுலா தளம் சென்னையில் இருந்துகிருஷ்ணகிரி செல்லும் வழியில் அமைந்துள்ளது.

சென்னைக்கு இருப்பதிலேயே மிகவும் குறைந்த தூரம் கொண்ட சுற்றுலா தளம் என்றால் அது இந்த பல்லவ நகரமான மாமல்லபுரம் எனப்படும் மஹாபலிபுரம்.

இந்தியாவில் தற்போது குடும்பத்துடன் ஒன்றாக சுற்றுலா செல்வது வழக்கமாகிவருகிறது. அதுவும் தற்போது கார் அல்லது பைக் வைத்திருப்பவர்கள் அந்த வாகனங்களை கொண்டே ரோடு ட்ரிப் செல்கிறார்கள். அப்படி சென்னைக்கு மிகவும் அருகாமையில் உள்ள சில முக்கிய ரோடு ட்ரிப் செல்லக்கூடிய இடங்களை பற்றி இந்த பதிவில் காணலாம்.

1.ஏலகிரி மலைகள்

இந்த மலை சுற்றுலா தளம் சென்னையில் இருந்து கிருஷ்ணகிரி செல்லும் வழியில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் மிகவும் அழகான மலைப்பாதை அமைந்துள்ளதால் நாம் கார்களில் அல்லது பைக்குகளில் கூட மேலே செல்லமுடியும்.

சென்னைக்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ள மலைப்பிரதேசங்களில் ஏலகிரி மலைகளும் ஒன்று. இந்த இடம் சென்னையில் இருந்து 230 கிலோமீட்டர் தொலைவில் உள்ளதால் இருந்து 5 மணிநேரம் ஆகும். சிறந்த நேரம்: நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை

முக்கிய இடங்கள்: YELAGIRI ADVENTURE CAMP, NATURE PARK, JALAGAMPARAI FALLS

2.தரங்கம்பாடி

சென்னையில் இருந்து நாகப்பட்டினம் செல்லும் வழியில் இந்த தரங்கம்பாடி அமைந்துள்ளது. இந்த கடற்கரை நகரம் மிகவும் அழகாகவும் கடல்அலைகள் நிறைந்ததாகவும் உள்ளது. இந்த இடம் ரோடு ட்ரிப் செல்ல சிறந்த இடம் ஆகும்.

இந்த இடம் சென்னையில் இருந்து 270 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு செல்ல 6 முதல் 7 மணிநேரம் ஆகும். சிறந்த நேரம்: ஆகஸ்ட் முதல் பிப்ரவரி வரை

முக்கிய இடங்கள்: THE ZION CHURCH, THE TOWN GATE, FORT DANSBORG, DANISH MUSEUM, JERUSALEM CHURCH.

3.வேலூர்

ரோடு ட்ரிப் செல்ல அருகில் உள்ள மற்றொரு இடம் எதுவென்றால் அது அருகில் உள்ள வேலூர் மாவட்டம் ஆகும். இங்கு பல கோவில்கள் மற்றும் சுற்றுலா தளங்கள் உள்ளன. இந்த மாவட்டம் சென்னையில் இருந்து 158 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இங்கு செல்ல 3 முதல் மணிநேரம் ஆகும். சிறந்த நேரம்: அக்டோபர் முதல் மார்ச் வரை

முக்கிய இடங்கள்:VELLORE FORT, SRI LAKSHMI GOLDEN TEMPLE, JALAKANDESHWAR TEMPLE.

4. பாண்டிச்சேரி

முதல் இடத்தை பிடிக்க வேண்டியது இந்த இடம்தான் ஏனென்றால் சென்னையில் இருந்து அதிக சுற்றுலா பயணிகள் இங்குதான் செல்வார்கள். இந்த கடற்கரை நகரம் பலவற்றிற்கு பெயர்போன ஒரு இடம் ஆகும். முக்கியமாக சென்னைவாசிகள் அதிக அளவு சுற்றுலா பயணம் செல்ல செலவழிக்கும் இடம் இதுவே. இது சென்னையில் இருந்து 175 கிலோமீட்டர் தூரம் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு செல்ல 3 முதல் 4 மணிநேரம் ஆகும். இங்கு அக்டோபர் முதல் மார்ச் மாதம் செல்வதற்கு ஏற்ற சமயம் ஆகும்.

முக்கிய இடங்கள்:AUROBINDO ASHRAM, SRI MANAKULA VINAYAGAR TEMPLE, BASILICA OF THE SACRED HEART OF JESUS, THE CHURCH OF OUR LADY OF ANGELS, MEERAN MOSQUE.

5.மாமல்லபுரம்

சென்னைக்கு இருப்பதிலேயே மிகவும் குறைந்த தூரம் கொண்ட சுற்றுலா தளம் என்றால் அது இந்த பல்லவ நகரமான மாமல்லபுரம் எனப்படும் மஹாபலிபுரம். இங்கு பல்லவர் காலத்து கோவில்கள் மற்றும் சிற்பங்கள் பல உள்ளன. இந்த இடம் சென்னையில் இருந்து சுமார் 52 கிலோமீட்டர் தூரம் தொலைவில் அமைந்துள்ளது. இந்த இடத்திற்கு செல்ல 1 முதல் 2 மணிநேரம் ஆகும்.

# டிசம்பர் மாத வார ராசிபலன்

## 30.11.2025 முதல் 06.12.2025 வரை

### மேஷம்

அஸ்வினி: இந்த வாரம் தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது.

பரணி: இந்த வாரம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம் சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே திடீர் மன வருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கும்.

கார்த்திகை 1ம் பாதம்: இந்த வாரம் உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நல்லது. வழக்குகளில் மெத்தன போக்கு காணப்படும். எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

துர்க்கை அம்மனை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும்.

### ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்: இந்த வாரம் தடைகளை தாண்டி செய்யும் முயற்சி வெற்றி பெறும். காரிய வெற்றி கிடைக்கும். எதிர்ப்புகள் விலகும். வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக் கவலை உண்டாகும்.

ரோகிணி: இந்த வாரம் வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை.

மிருக சிரீஷம் 1, 2, பாதங்கள்: இந்த வாரம் உத்தியோகத்தில் சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. நவகிரகத்தில் சுக்கிரனை பூஜிக்க வாழ்க்கையில் மகிழ்ச்சி உண்டாகும்.

### மிதுனம்

மிருக சிரீஷம் 3, 4 பாதங்கள்: இந்த வாரம் ஆயுதங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். பண வரத்து திருப்தி தரும். தேவையான உதவி கிடைக்கும்.

திருவாதிரை: இந்த வாரம் திறமை வெளிப்படும். எல்லா கஷ்டங்களும் நீங்கும். பொருளாதார மேம்பாடு உண்டாகும். பண வரத்து சீராக இருக்கும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும்.

புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்: இந்த வாரம் அக்கம்பக்கத்தினரிடம் சண்டைகள் ஏற்பட்டு சரியாகும்.

கவுரவம் பாதிக்கும்படியான சூழ்நிலை வரலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

பரிகாரம்: ஸ்ரீ ரங்கமன்னாரை வணங்கி வர எல்லா பிரச்சனைகளும் தீரும். செல்வ செழிப்பும், ஆரோக்கியமும் உண்டாகும்..

### கடகம்

புனர் பூசம் 4ம் பாதம்: இந்த வாரம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது.

பூசம்: இந்த வாரம் குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சனைகள் அதனால் வாக்குவாதம் போன்றவை உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்று ஏற்படலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம்.

ஆயில்யம்: இந்த வாரம் வீண் அலைச்சல், வேலைப் பளு ஆகியவை அதிகரிக்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். அடுத்தவரை பற்றிய விமர்சனங்கள், கிண்டல், கேலி பேச்சு போன்றவற்றை தவிர்த்து உங்கள் கடமைகளில் கவனம் செலுத்துவது நல்லது. குடும்ப கஷ்டங்கள் நீங்கும்.

அருள்மிகு ஆதிபராசக்தி அன்னையை தரிசித்து வருவது உடல் ஆரோக்கியத்தை தரும்.

### சிம்மம்

மகம்: இந்த வாரம் தடைபட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும்.

பூரம்: இந்த வாரம் தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். பண வரத்து திருப்தி தரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேல் அதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும்.

உத்திரம் 1ம் பாதம்: இந்த வாரம் குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சனையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்க காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மதிப்பு கூடும்.

பரிகாரம்: அருணாசலேஸ்வரரை வணங்கி வர துன்பங்கள் விலகும்.

### கன்னி

உத்திரம் 2, 3, 4 பாதங்கள்: இந்த வாரம் எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும் பயணங்களின் போது கவனம் தேவை. எல்லா கஷ்டங்களும் நீங்கும். பொருளாதாரம் மேம்படும் தைரியம் உண்டாகும்.

அஸ்தம்: இந்த வாரம் தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பண தேவை உண்டாகலாம்.

சித்திரை 1, 2, பாதங்கள்: இந்த வாரம் தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம்.

லட்சுமி நரசிம்ம பெருமாளை வணங்கி வர எதிர்ப்புகள் நீங்கும்.

### துலாம்

சித்திரை 3, 4 பாதங்கள்: இந்த வாரம் குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளிடம் அனுசரித்து செல்வதும் அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது.

சுவாதி: இந்த வாரம் கோபத்தை கட்டுப்படுத்துவதும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நன்மை தரும். வீண் செலவை தடுக்க திட்டமிட்டு செயல் படுவது நல்லது. சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் வேலைகளை செய்வது அவசியம்.

விசாகம் 1, 2, 3ம் பாதங்கள்: இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். எதையும் சமாளிக்கும் திறமை உண்டாகும். அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். எனவே நிதானமாக இருப்பது நல்லது.

குல தெய்வத்தை வணங்க குடும்ப பிரச்சனை, தொழிற்பிரச்சனை கல்வியில் தடை போன்றவை விலகும்.

### விருச்சிகம்

விசாகம் 4ம் பாதம்: இந்த வாரம் சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விஷயங்களால் மன நிறைவை அடைவீர்கள். எதிர்பாலினரிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, ரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கலாம்.

அனுஷம்: இந்த வாரம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயல்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு.

கேட்டை: இந்த வாரம் குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படும். குடும்ப செலவை சமாளிக்க பண வரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் ஆன்மீக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும்.

முருகனை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். காரிய வெற்றி கிடைக்கும். எதிர்ப்புகள் விலகும்.

### தனுசு

மூலம்: இந்த வாரம் அடுத்தவர்கள் செயல்கள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கலாம். எனவே நிதானமாக செயல் படுவது நன்மையை தரும். எந்த பிரச்சனை யையும் சமாளிக்கும் திறமை கூடும். எதையும் அவசரப் படாமல் நிதானமாக செய்வது நல்லது.

பூராடம்: இந்த வாரம் பிரச்சனைகள் குறையும். மனதில் அமைதி உண்டாகும். நீண்ட நாட்களாக தடைபட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள்.

உத்திராடம் 1ம் பாதம்: இந்த வாரம் அதிகம் பேசுவதை தவிர்ப்பது நல்லது. அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயல்படுவது முன்னேற்றத்திற்கு உதவும்.

நவகிரகத்தில் குரு பகவானுக்கு முல்லை மலர் சாற்றி நெய் தீபம் ஏற்றி வர எல்லா கஷ்டங்களும் நீங்கும்.

### மகரம்

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்: இந்த வாரம் பண வரத்து அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை குறைந்து நெருக்கம் அதிகரிக்கும்.

திருவோணம்: இந்த வாரம் வாழ்க்கை துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். அதனால் நன்மையும் ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. அடுத்தவர் கூறுவதை செய்யும் முன்பு அது பற்றி ஆலோசனை செய்வது நல்லது.

அவிட்டம் 1, 2 பாதங்கள்: இந்த வாரம் மேலதிகாரி, சக ஊழியர் மத்தியில் நன்மதிப்பு உண்டாகும். பணத் தட்டுப்பாடு நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை உண்டாகும். கடித போக்குவரத்து சாதகமான பலன் தரும். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. மனதில் தைரியம் உண்டாகும்.

விநாயக பெருமானுக்கு அருகம் புல் மாலை சாற்றி அர்ச்சனை செய்து வர குடும்ப கஷ்டங்கள் நீங்கும்.

### கும்பம்

அவிட்டம் 3, 4 பாதங்கள்: இந்த வாரம் வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் சாதூரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும்.

சதயம்: இந்த வாரம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும் அதற்கேற்ற பலனும் உண்டாகும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும்.

பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள்: இந்த வாரம் அக்கம் பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடம் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். கணவன் மனைவிக்கு இடையே மகிழ்ச்சி நிலவும். மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. வீண் வாக்குவாதத்தை விட்டு நிதானமாக பேசுவது நன்மை தரும்.

வியாழக்கிழமையில் ஆஞ்சநேயரை வெண்ணெய் சாற்றி வணங்கி தீபம் ஏற்றி வர எல்லா கஷ்டங்களும் நீங்கும்.

### மீனம்

பூரட்டாதி 4ம் பாதம்: இந்த வாரம் கூடுதல் உழைப்பு தேவைப்படும். எதிர்பார்ப்புகளை குறைத்து இருப்பதை வைத்து முன்னேற முயற்சிப்பது நல்லது. எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவதுடன் புதிய முயற்சிகளை தள்ளிபோடுவதும் நல்லது.

உத்திரட்டாதி: இந்த வாரம் எல்லா நன்மைகளும் உண்டாகும். கல்வியில் வெற்றி கிடைக்கும். பண வரத்து திருப்திகரமாக இருக்கும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாக செய்வீர்கள். ஆனால் தாமதமான பலனே கிடைக்கும்.

ரேவதி: இந்த வாரம் எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக வந்து சேரும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது கவனமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக இல்லாவிட்டாலும் நிதானமாக இருக்கும். பண வரத்து உண்டு.

சித்தர்களை வணங்க எல்லா பிரச்சனைகளும் தீரும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும்.

# டிட்வா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் விளக்கம்

சென்னை நவ.30:

மழையால் இதுவரை மிகப்பெரிய பாதிப்பு இல்லை. புயல் கரையை கடக்கும்வரை வெளியே வரவேண்டாம் என்ற முதல்வரின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும் என அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: மழையால் இதுவரை மிகப்பெரிய பாதிப்புஇல்லை.குறிப்பாகஉயிரிழப்பு ஏதுமில்லை. போக்குவரத்து எங்கும் தடைபடவில்லை. 16 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. 24 குடிசைகள் இடிந்து விழுந்துள்ளன. அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்து வருகிறது.



கடந்த 24 மணி நேரத்தில் நாகை மாவட்டம் தோப்புத்துறையில் அதிகபட்ச மழை பதிவாகியுள்ளது. டிட்வா புயல் சென்னைக்குள் வராமல் சென்னையை ஒட்டியே செல்லும் என வானிலை மையம் கூறியுள்ளது. இன்று கடற்கரை பகுதிக்குச் செல்ல வேண்டாம். காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. குறிப்பாக செல்பி எடுப்பதாக கடற்கரை பகுதிக்கு செல்ல வேண்டாம். படகு, பயிர் சேதங்களை கணக்கிடும் பணிகள் நவம்பர் 30-க்கு மேல் நடைபெறும். அதற்கு வேண்டிய நஷ்ட ஈடுகளை முதல்வர் உடனடியாக வழங்க வலியுறுத்தியுள்ளார். முதல்வர் ஒவ்வொரு நகர்வையும் நேரடியாக கவனித்து வருகிறார். புயல் கரையை கடக்கும்வரை வெளியே வரவேண்டாம் என்ற முதல்வரின் அறிவுரையைப் பின்பற்ற வேண்டும். 28 பேரிடர் மீட்புக் குழுக்கள் தயார் நிலையில் உள்ளன.

மேலும் 10 குழுக்கள் பிற மாநிலங்களில் இருந்து விமானம் மூலம் வரவழைக்க உள்ளோம். விமானப்படை மற்றும் கடலோர காவல் படைக்கும் எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ளது. நாளை பாதிப்பை பொறுத்து தேவையான மாவட்டங்களுக்கு கூடுதல் கண்காணிப்பு அலுவலர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எல்லா மாவட்டத்திலும் 6000-க்கும் மேற்பட்ட நிவாரண முகங்கள் தயார் நிலையில் உள்ளன.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

# சபரிமலை வனப் பகுதிக்குள் வழிதவறும் பக்தர்களை மீட்க உதவும் 'அய்யன்' செயலி

சபரிமலை வனப் பகுதிக்குள் வழிதவறும் பக்தர்களை அய்யன் செயலி மூலம் கண்டறிந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனத் துறையினர் தெரிவித்தனர். இணைய வசதி இல்லாமலும் இந்த செயலி செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபரிமலையில் மண்டல பூஜை டிச. 27-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்காக, கடந்த 16-ம் தேதி மாலை நடை திறக்கப்பட்டு மறுநாள் முதல் தொடர் வழிபாடுகள் நடக்கின்றன.

தினமும் 75 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்படுவர் என்று அறிவித்திருந்தாலும், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனத்துக்காக தினமும் சென்று கொண்டிருக்கின்றனர். இவர்களுக்காக பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் ஒரு பகுதியாக அய்யன் எனும் செயலி பல்வேறு வழிகாட்டுதல்களை பக்தர்களுக்கு அளித்து வருகிறது. இதில் தகவல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை, வழிகாட்டுதல் உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும், வழிபாட்டு நேரம், பக்தர்கள் செய்ய வேண்டியவை, எரிமேலி, சத்திரம் உள்ளிட்ட வனப் பாதைகளின் தூரம், அங்குள்ள மருத்துவ மற்றும் அடிப்படை வசதிகள் குறித்த விவரங்கள் இடம் பெற்றுள்ளதுடன், யானை, புலி, செந்நாய், காட்டெருமை உள்ளிட்ட விலங்குகள் காட்டுப் பாதையில் குறுக்கிட்டால், அதுகுறித்த தகவல்களும் பக்தர்களுக்கு செயலியில் பகிரப்படுகின்றன.

இச்செயலி இணையம் இல்லாத இடத்திலும் செயல்படும். இதில் தங்கள் இடத்தை (லொகேஷன்) பகிர்ந்தால், அவர்கள் செல்லும் பாதையில் உள்ள பல விவரங்கள் குறுந்தகவலாக அனுப்பப்படுகிறது.

பாதை தவறி வனத்துக்குள் சென்றுவிட்டால், பகிரப்பட்ட 'லொகேஷன்' மூலம் மீட்புக் குழுவினர் விரைந்து சென்று பக்தர்களை மீட்டு விடுவர். பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய இச்செயலியை கூகுள் பிளே ஸ்டோரில் 'அய்யன்' என்று ஆங்கிலத்தில் டைப் செய்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தமிழ், மலையாளம், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், இந்தி உள்ளிட்ட 6 மொழிகளில் விவரங்கள் இடம் பெற்றுள்ளன. சபரிமலை பாதையில் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள க்யூ ஆர் கோடுகளை ஸ்கேன் செய்தும் இந்த செயலியை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# பிஹார் தொழிலாளிக்கு கை மாற்று அறுவை சிகிச்சை: மருத்துவர்களுக்கு துணை முதல்வர் நேரில் பாராட்டு

சென்னை, நவ.30:

பிஹார் தொழிலாளிக்கு அறுவை சிகிச்சை மூலம் வெற்றிகரமாக கையை பொருத்திய ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மருத்துவர்களை நேரில் அழைத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டினார்.

பிஹாரைச் சேர்ந்த 28 வயது தொழிலாளி கடந்த செப்.26-ம் தேதி சென்னை பூங்கா ரயில் நிலையம் அருகே தண்டவாளத்தை கடக்க முயன்ற போது விபத்தில் சிக்கினார்.

இந்த விபத்தில் அவரது இடது கை தோள் பட்டையிலிருந்து முழங்கை வரை மிக மோசமாக சிதைந்துபோனது. அதேபோல், வலது கை மணிக்கட்டு பகுதிவரை சிதைந்திருந்தது. இதையடுத்து ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இரண்டு கைகளும் சிதைந்திருந்த நிலையில் அவருக்கு இடது கையில் மணிக்கட்டிலிருந்து கீழே உள்ள பகுதியை வலது கையோடு இணைத்து, கரங்களை மாற்றி பொருத்தும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அந்த சிக்கலான, சவால் மிகுந்த அறுவை சிகிச்சையை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையின் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறை தலைவர் பி. ராஜேஸ்வரி தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

சிகிச்சையில் ரத்தக் குழாய் மறுசீரமைப்பு முடிந்தவுடனேயே இணைக்கப்பட்ட கை புத்துயிர் பெற்றது. இந்த சவால் மிகுந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர்களை சென்னை முகாம் அலுவலகத்துக்கு அழைத்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பாராட்டினார்.

இந்நிகழ்வில் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை முதல்வர் சாந்தா ராமன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட பதிவில், "சென்னையில் பணியாற்றி வந்த பிஹார் தொழிலாளி எதிர்பாராதவிதமாக ரயில் விபத்தில் சிக்கி கைகளை இழந்த நிலையில், அவருக்கு, ராஜீவ் காந்தி மருத்துவர்கள் தொடர் சிகிச்சை அளித்து அவரின் இடது கையை வலது முழங்கையுடன் இணைத்து சாதனை படைத்துள்ளனர்.

மிக அரிதான கரங்களை மாற்றி பொருத்தும் அறுவை சிகிச்சை நமது நாட்டில் உள்ள அரசு மருத்துவமனையில் நிகழ்த்தப்பட்டது இதுவே முதல்முறை. இந்த அறுவை சிகிச்சையை திறமையாக செய்த மருத்துவர்களுக்கு பாராட்டுகள்" என்று தெரிவித்தார்.

# பரந்தூர் விமான நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி தீவிரம்: டி.ஆர்.பாலு தகவல்

சென்னை, நவ.30:

சென்னை விமான நிலைய அபிவிருத்தி குறித்த ஆய்வுக் கூட்டம் மீனம்பாக்கத்தில் உள்ள அதன் வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதற்கு விமான நிலைய ஆலோசனைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமை வகித்தார்.

இதில் சென்னை விமான நிலைய இயக்குநர் ராஜா கிஷோர், எம்எல்ஏக்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விமான நிலையத்தில் பயணிகள் போக்குவரத்து, சரக்குகள் கையாள்வது குறித்தும், அதன் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

அதன்பின் டி.ஆர்.பாலு எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது: சென்னை விமான நிலையத்தில் பயணிகளுக்கு நிறைய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்தியாவில் பல்வேறு விமான நிலையங்களில் இல்லாத வசதியாக, இங்கு மாநகரப் பேருந்துகள் விமான நிலையம் உள்ளே வந்து பயணிகளை ஏற்றி செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் வரவுள்ளது.

அதற்கான பணிகளை தமிழக அரசு வேகமாக செய்து வருகிறது. பரந்தூர் விமான நிலையம் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அந்த விமான நிலையம் வந்தால் சென்னையில் வாகன நெரிசல் தவிர்க்கப்படும்.

பரந்தூர் விமான நிலையம் அமைக்க 5,700 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதில் 2,000 ஏக்கர் அரசுக்கு சொந்தமானது. 3,700 ஏக்கர் தனியாருக்கு சொந்தமானது. அதில் 1,300 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலத்தை வாங்கக் கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன. மிக விரைவில் திட்டத்துக்கான நிலம் கையகப்படுத்தப்படும். அதன்பின் பணிகள் தொடங்கப்படும். பயணிகள் கோரிக்கையை ஏற்று சர்வதேச விமான நிலையத்தின் உட்பகுதியில், ப்ரீபெய்ட் டாக்ஸி புக்கிங் கவுன்ட்டர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.


# தொடர் பனி, மழை எதிரொலி: மதுரையில் ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.4,500-க்கு விற்பனை

மதுரை, நவ. 30:

மதுரை மாவட்டத்தில் நீடிக்கும் தொடர் பனி மற்றும் மழையால் மதுரை மல்லிகைப்பூ உற்பத்தி முற்றிலும் முடங்கியுள்ளது. இதனால், மல்லிகைப் பூ பற்றாக்குறையால் முகூர்த்த நாட்கள், விழாக் காலங்கள் இல்லாமலேயே ஒரு கிலோ மல்லிகைப்பூ வரலாறு காணாத வகையில் ரூ.4,500 என விற்பனையாகிறது.

மதுரை மாவட்டத்தின் மண்வளம், தட்பவெப்ப சூழ்நிலையில் உற்பத்தியாகும் மல்லிகைப்பூக்கள் குண்டு, குண்டாக வெண் நிறமும், தடித்த காம்பு, தனித்துவமான மணத்தையும் கொண்டுள்ளதால் உலகளவில் பிரசித்தி பெற்றது. அதற்காக, மதுரை மல்லிகைப் பூக்களுக்கு கடந்த 2012-13-ம் ஆண்டில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.

மேலும், மதுரை மல்லிகைப்பூ, நறுமணப் பொருட்கள் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது.



அதனால், உள்ளூர் பயன்பாட்டிற்கு போக, சிங்கப்பூர், குவைத், மலேசியா, துபாய் போன்ற வெளிநாடுகளுக்கும் விமானங்கள் மூலம், நறுமணப் பொருட்கள் தயாரிப்பதற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு கடல் கடந்தும் மணம் வீசி வருகிறது.

தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் மலர் சந்தைகளில் மதுரை மல்லிகைப் பூக்களுக்கும் தனி வரவேற்பு உண்டு.

மதுரை மட்டுமில்லாது, தேனி, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் விளையும் மல்லிகைப் பூக்கள், தற்போது வரை 'மதுரை மல்லிகை' அடையாளத்துடனேயே தமிழகம் முழுவதும் விற்பனை செய்யப்படுகிறது. மல்லியின் தரம் மற்றும் சீசனைப் பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படும். மதுரை மல்லிகைப்பூ 3 டன் தமிழக சந்தைகளிலும், 4 முதல் 6 டன் வரை வெளிநாடுகளுக்கும் தற்போது ஏற்றுமதியாகிறது.

மதுரை மல்லிகைப்பூ விவசாயத்தை 'கரோனா'வுக்கு முன், பின் என இரண்டு நிலைகளாக பிரிக்க வேண்டிய உள்ளது. 'கரோனா'வுக்கு முன் வரை, மதுரை மல்லிகைப்பூ சாகுபடி ஏக்கரில் நடைபெற்று வந்தது. 'கரோனா' ஊரடங்கு காலத்தில் கோயில்கள் பூஜைகள் நின்று போனதோடு, பெண்களும் வீட்டை விட்டு வேளியே வராததால் பூக்கள் பயன்பாடு முற்றிலும் நின்றுபோனது. மதுரை மல்லிகைப்பூக்கள் விவசாயத்தில், விவசாயிகளுடைய பராமரிப்பு அன்றாடம் அதிகம் தேவைப்படுகிறது. ஊரடங்கில் பணபுப்ழக்கமே இல்லாத நிலையில் ஏராளமான விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் போட்டிருந்த மதுரை மல்லிகைப்பூ செடிகளை அழித்துவிட்டு மாற்று விவசாயத்துக்கு மாறினர்.

கரோனாவுக்கு பின் ஓரளவு நிலை மாறியதால், விவசாயிகள் மதுரை மல்லிகை விவசாயத்திற்கு திரும்பினர். ஆனாலும், தற்போது வரை பழைய சாகுபடி பரப்பை தோட்டக்கலைத் துறையால் மதுரை மல்லிகை சாகுபடியில் எட்ட முடியவில்லை. தற்போது மழையால் ஒட்டுமொத்த மதுரை மல்லிகை பூக்கள் உற்பத்தியும் முடங்கியதால் தற்போது சாதாரண நாட்களிலே மிக அதிக விலைக்கு விற்கப்படுகிறது. விழாக் காலங்கள், முகூர்த்த நாட்கள் இல்லாமலேயே மதுரை மல்லிகை மதுரை மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த மலர் சந்தையில் மதுரை மல்லி கிலோ ரூ.4500 வரை விற்பனையானது.

கோயில்களிலும் பெரும் கூட்டம் வரவில்லை. அப்படியிருந்தும் மதுரை மல்லிகை விலை சாதாரண நாளான இன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்த சம்பவம், தோட்டக்கலைத்துறை அதிகாரிகள், விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## க்ரைம் கார்னர்

# கோவையில் அரசு ஊழியர்கள் குடியிருப்பில் துணிகர கொள்ளை: 3 பேரை சுட்டுப் பிடித்த போலீஸ்!

கோவை, நவ.30:

கோவை மேட்டுப்பாளையம் சாலை கவுண்டம்பாளையம் பகுதியில் அரசு ஊழியர்கள் குடியிருப்பு வளாகம் உள்ளது. இங்கு 2000-க்கு மேற்பட்ட வீடுகள் உள்ளன. இதில் அரசுத் துறையில் பணியாற்றும் அதிகாரிகள், அலுவலர்கள், குடியிருந்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று (நவ.28) மாலை பணிக்குச் சென்றிருந்த அரசு ஊழியர் ஒருவர் வீடு திரும்பியபோது, அவரது வீட்டு பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. அவரது வீடு போலவே அடுத்தடுத்து 13 வீடுகளில் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது.

அதில் ஒருவர் வீட்டில் 30 பவுன் நகை திருடு போயிருந்தது. ஒட்டுமொத்தமாக 13 வீடுகளின் சேர்த்து 56 பவுன் நகை, 3 லட்சம் பணம், 3 கிலோ வெள்ளிப் பொருட்கள் ஆகியவை திருடு போயிருந்தன.

இது குறித்து தகவல் அறிந்த கவுண்டம்பாளையம் போலீஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். அங்கு பதிவாகியிருந்த கைரேகைகள், தடயங்களை சேகரித்தனர். அதேபோல் செல்போன் தொழில்நுட்பங்கள் மூலமாகவும் போலீஸார் விசாரித்தனர். அதன் இறுதியில் இங்கு கொள்ளையடித்த நபர்கள் கோவை குனியமுத்தூர் அருகே பிகே புதூரில் இருந்து குளத்துப்பாளையம் செல்லும் சாலையில் உள்ள திருநகர் காலனியில் ஒரு வீட்டில் பதுங்கி இருப்பதாக போலீஸாருக்கு நேற்று (நவ.29) காலை தகவல் கிடைத்தது .போலீஸார் அங்கு சென்றனர். அவர்கள் தங்கி இருந்த வீட்டை சுற்றி வளைத்தனர். மர்ம நபர்களை வீட்டிலிருந்து வெளியே வருமாறு போலீஸார் வலியுறுத்தினர்.

அப்போது அவர்கள் மூவரும் தங்களது கையில் இருந்த அரிவாளால் போலீஸாரை நோக்கி மிரட்டினர். அங்கிருந்த காவலர் பார்த்திபன் என்பவரை அரிவாளால் தாக்கிவிட்டு தப்பிக்க முயன்றனர். இதை அடுத்து போலீஸார் தங்களிடம் இருந்து துப்பாக்கியால் மர்மநபர்கள் மூவரின் கால்களில் சுட்டுப்பிடித்தனர்.

விசாரணையில் பிடிபட்ட நபர்கள் உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த இர்பான்(43), கல்லு ஆரிப் (60 ), ஆசிப்(45) எனத் தெரிந்தது. மூவருக்கும் வலது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து அவர்கள் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் மேற்கண்ட இடத்தில் பகல் நேரத்தில் வந்து நோட்டமிட்டு திருடிச் சென்றது தெரியவந்தது. போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# போலீஸாரால் தேடப்பட்ட எல்என்எஸ் நிதி நிறுவன நிர்வாகி கைது: துபாயிலிருந்து வந்தபோது பிடிபட்டார்

சென்னை, நவ.30:

ரூ.828 கோடி மோசடி வழக்கில் போலீஸாரால் தேடப்பட்ட எல்என்எஸ் நிதி நிறுவன நிர்வாகி சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

வேலூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்த எல்என்எஸ் இன்டர்நேஷனல் ஃபைனான்சியல் சர்வீஸ் என்ற நிதி நிறுவனம் 5,322 பேரிடம் சுமார் ரூ.828 கோடி மோசடி செய்தது. பணத்தை இழந்தவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், தமிழக பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸார் கடந்த 2022-ம் ஆண்டு அந்த நிறுவனத்தின் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இதையடுத்து அந்நிறுவனம் தொடர்புடைய 35 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இதில், ரூ.1.16 கோடி ரொக்கம், 90 பவுன் நகை, ரூ.40 லட்சம் வெள்ளிப் பொருட்கள், ரூ.6 கோடி மதிப்புள்ள 26 கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்டனர். நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகளாக இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மோகன்பாபு, லட்சுமி நாராயணன், வேதநாராயணன், ஜனார்த்தனன் ஆகிய 4 பேரை தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் வேதநாராயணன், துபாயில் இருந்து சென்னை வந்தார். அவரது பாஸ்போர்ட், விசாக்களை ஆய்வு செய்த குடியுரிமைத்துறை அதிகாரிகளுக்கு, அவருக்கு எதிராக பொருளாதார குற்றப்பிரிவினரின் ரெட் கார்னர் நோட்டீஸ் இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, வேதநாராயணனை கைது செய்து பொருளாதாரக் குற்றப்பிரிவு போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

# அரவக்குறிச்சி: காதலித்து வந்த பள்ளி மாணவியின் கழுத்தை பிளேடால் அறுத்த இளைஞர் தற்கொலை!

கரூர், நவ.30:

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி அருகேயுள்ள வேலம்பாடியைசேர்ந்தவர் வசந்தகுமார் (26). எலெக்ட்ரிஷியன். அதே பகுதியைச் சேர்ந்த பிளஸ் 2 படிக்கும் 16 வயது மாணவியும், ஒருவரை ஒருவர் கடந்த 3 ஆண்டுகளாக காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் இருவரது பெற்றோரும் திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர். இதனால் விரக்தியடைந்த இருவரும் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தனர். இதையடுத்து நேற்று (நவ. 29ம் தேதி) காலை 10 மணிக்கு மாணவியின் வீட்டிற்கு வந்த வசந்தகுமார் மாணவியின் கழுத்தை பிளேடால் அறுத்ததில் மாணவி மயங்கியுள்ளார். அவர் உயிரிழந்து விட்டதாக நினைத்த வசந்தகுமார் மாணவியின் வீட்டிலேயே சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்நிலையில் மயக்கம் தெளிந்து எழுந்த மாணவி வசந்தகுமார் தூக்கில் தொங்குவதை கண்ட கூச்சலிட்டுள்ளார். இதையடுத்து அக்கம் பக்கத்தினர் மாணவியை மீட்டு பள்ளபட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளித்த நிலையில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்று வருகிறார். அரவக்குறிச்சி போலீஸாருக்கு தகவல் அளித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த போலீஸார் வழக்குப் பதிவு செய்து வசந்தகுமார் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக பள்ளபட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# NDRF பணியாளர்கள், நிவாரணப் பொருட்களுடன் இலங்கை சென்றது இந்திய விமானப்படை விமானம்

புதுடெல்லி, நவ.30:

டிட்வா புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவும் நோக்கில் 80 NDRF பணியாளர்கள் மற்றும் நிவாரணப் பொருட்களுடன் இந்திய விமானப்படையின் IL-76 விமானம் இலங்கை சென்றடைந்தது.




இது தொடர்பாக இலங்கை விமானப்படை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளுக்கு உதவும் நோக்கில் இந்திய விமானப்படையின் IL-76 விமானம் இலங்கை வந்துள்ளது. NDRF பணியாளர்கள் 80 பேர் விமானத்தில் வந்துள்ளனர். இவர்களில் 4 பேர் பெண்கள்.

மேலும், மோப்ப நாய்கள், பேரிடர் நிவாரணப் பொருட்கள் மற்றும் மீட்பு உபகரணங்கள் ஆகியவையும் வந்துள்ளன” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8வது பட்டாலியனின் கமாண்டன்ட் பி.கே. திவாரி தலைமையிலான இக்குழுவினர், காற்று நிரப்பப்பட்ட படகுகள், ஹைட்ராலிக் கட்டிங் மெஷின்கள், தகவல் தொடர்பு கருவிகள், மருத்துவ முதலுதவி உபகரணங்கள், அத்தியாவசியப் பொருட்கள் ஆகியவற்றுடன் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட உள்ளனர்.

அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கைக்கு ஏற்ப டிட்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவும் நோக்கில் சாகர் பந்து ஆபரேஷன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முதல் நிவாரணத் தொகுப்புகள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்திய விமானப்ப படை கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் மற்றும் உதய்கிரி ஆகியவற்றின் மூலம் இந்த நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

தமிழகத்தில் விழுப்புரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை மாவட்டங்களில் 14 குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், புதுச்சேரிக்கு கூடுதல் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தேசிய பேரிடர் மீட்புப் படை தெரிவித்துள்ளது.

5வது பட்டாலியன் (புனே) மற்றும் 6வது பட்டாலியன் (வதோதரா) ஆகியவற்றில் இருந்து மேலும் 10 குழுக்கள் சென்னைக்குச் செல்கின்றன.

உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் திறமையான மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக இந்திய வானிலை ஆய்வு மையம், என்டிஎம்ஏ, மாநில நிர்வாகங்கள், வெளியுறவு அமைச்சகம் உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து பணிபுரிந்து வருவதாக தேசிய பேரிடர் மீட்புப் படை தெரிவித்துள்ளது.

## சிறுத்தைக்கு வைத்த கூண்டில் குடிபோதையில் சிக்கிய மனிதர்

பஹ்ரைச், நவ.30:

சிறுத்தைக்கு வைத்த கூண்டில் குடிபோதையில் மனிதர் ஒருவர் சிக்கிய சம்பவம் உத்தரபிரதேச மாநிலத்தில் நடந்துள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் பஹ்ரைச் மாவட்டத்தில் கடார்னியாகாட்டில் சரணாலயம் உள்ளது. சரணாலயத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் அடிக்கடி சிறுத்தை, புலிகள் புகுந்து ஆடு, மாடுகளை கொன்று தின்னும் சம்பவம் நடந்து வந்தது.

கடந்த 26-ம் தேதி இரவு கடார்னியாட் பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் புகுந்த சிறுத்தை 55 வயதான சாந்திதேவி என்ற பெண்ணை அடித்துக் கொன்றது. இதையடுத்து வனத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தினர்.

வனப் பகுதியை ஒட்டியுள்ள இடத்தில் இரும்புக் கூண்டை வைத்து சிறுத்தையைப் பிடிக்க ஏற்பாடு செய்தனர். கூண்டுக்குள் ஆடு கட்டி வைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை, அந்த இரும்புக் கூண்டுக்குள் பிரதீப் என்பவர் அடைபட்டுக் கிடந்தார். வனத்துறை அதிகாரிகள் கூண்டுக்குள் இருந்து அவரை மீட்டனர்.

பின்னர் விசாரித்தபோது அவர் குடிபோதையில் இரும்புக்கூண்டில் சிக்கியது தெரியவந்தது. இரும்புக் கூண்டுக்குள் யார் நுழைந்தாலும் உடனடியாக கூண்டுக்கதவுகள் தானியங்கியாக மூடிவிடும். ஆனால், கூண்டில் இருந்த ஆட்டை பிரதீப் திருட வந்து சிக்கியிருக்கலாம் என்று சந்தேகம் கொண்டனர்.

இதுகுறித்து பிரதீப் கூறும்போது, “அங்கு என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வந்தேன். அப்போது திடீரென கூண்டுக்குள் அடைபட்டேன். கூண்டுக்குள் சிக்கிக் கொண்டதும் சத்தம் எழுப்பினேன். அது யாருக்கும் கேட்கவில்லை. இதையடுத்து, என்னுடைய செல்போன் மூலம் உதவிக்கு அழைத்தேன். கிராம தலைவருக்கு தகவல் தெரிவித்து என்னை மீட்க ஏற்பாடு செய்தேன். பின்னர் வனத்துறை அதிகாரிகள், போலீஸார் வந்து என்னை மீட்டனர்” என்றார்.

சிறுத்தைக்கு வைத்த கூண்டில் கிராமத்தைச் சேர்ந்தவர் சிக்கியது அப்பகுதியில் பரபரப்பாகவும், நகைச்சுவையாகவும் பேசப்பட்டு வருகிறது.

## நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் 10 முக்கிய மசோதாக்கள் தாக்கல்

புதுடெல்லி, நவ.30:

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், (எஸ்ஐஆர்) வந்தே மாதரம் பாடல் ஆகியவை குறித்து விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டம் டிசம்பர் 1-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு கொண்டாடப்படுவதால் அதன் வரலாறு குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பாடலில் இருந்து முக்கிய வரிகள் கடந்த 1937-ம் ஆண்டு நீக்கப்பட்டதே இந்தியாவின் பிரிவினைக்கு காரணம் என பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

வந்தே மாதரம்: வந்தே மாதரம் பாடலின் வரலாறு, சுதந்திர இயக்கத்தில் அதன் பங்கு குறித்து இளைஞர்களுக்கு நினைவூட்டுவதற்காக விவாதம் நடைபெறும் என அதிகாரிகள் கூறினர்.

மேலும் அணு சக்தி, உயர் கல்வி, கார்ப்பரேட் சட்டம் மற்றும் பங்குச் சந்தை ஆகியவற்றில் மாற்றங்கள் கொண்டுவருவது தொடர்பாக 10 முக்கிய மசோதாக்களை குளிர்கால கூட்டத்தில் கொண்டு வரவும் மத்திய அரசு திட்டமிட்டள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், டெல்லி காற்று மாசு, வேலைவாய்ப்பின்மை தொடர்பான பிரச்சினைகள் குறித்து அவையில் விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தில் எந்த பிரச்சினை குறித்தும் விவாதிக்க தயார் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஒருமித்த கருத்துடன் அவையை சுமுகமாக நடத்துவதற்கு வேண்டுகோள் விடுக்க அனைத்து கட்சி கூட்டத்தை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ நாளை கூட்டியுள்ளார்.

## பிஹாரில் மெகா கூட்டணியின் சட்டமன்ற தலைவராக தேஜஸ்வி யாதவ் தேர்வு

பாட்னா, நவ.30:

பிஹாரில் மெகா கூட்டணியின் சட்டமன்றத் தலைவராக தேஜஸ்வி யாதவ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு அணியாகவும், ராஷ்ட்ரிய ஜனதா தளம்(ஆர்ஜேடி) தலைமையிலான மெகா கூட்டணி ஒரு அணியாகவும் களம் கண்டன. இந்த தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி மொத்தமுள்ள 243 தொகுதிகளில் 202 தொகுதிகளில் வெற்றி பெற்று வலிமையான பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

ஆர்ஜேடி தலைமையிலான கூட்டணி 35 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இதில் ஆர்ஜேடி-25, காங்கிரஸ்-6, சிபிஐ(எம்எல்)-2, சிபிஎம்-1, ஐஐபி-1 தொகுதிகளில் வெற்றி பெற்றன.

இந்நிலையில், மெகா கூட்டணியின் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் பாட்னாவில் இன்று நடைபெற்றது. தேஜஸ்வி யாதவின் அழைப்பின் பேரில் நடைபெற்ற இந்த கூட்டத்தில், கூட்டணியின் சட்டமன்றத் தலைவராக தேஜஸ்வி யாதவ் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். ஏற்கனவே, ஆர்ஜேடியின் சட்டமன்றக் குழு தலைவராக அவர் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ஆர்ஜேடி எம்எல்ஏ பாய் வீரேந்திரா, “மெகா கூட்டணியின் சட்டமன்றத் தலைவராக தேஜஸ்வி யாதவ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். எங்கள் கட்சியின் சட்டமன்றத் தலைவராகவும் அவர் இருப்பார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு போதுமான எண்ணிக்கை பலம் உள்ளது. எனவே, அவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருப்பார்” என தெரிவித்தார்.

தேஜஸ்வி தேர்வு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மாநில செயல் தலைவர் சமீர் குமார் சிங், “தேஜஸ்வி யாதவின் தேர்வு ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவு. இன்றைய கூட்டத்தில் சட்டமன்றத் தேர்தல் நடத்தப்பட்ட விதம் குறித்து பலரும் கவலைகளைத் தெரிவித்தனர். தேர்தல் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவுமே நடந்தது. எனினும், பிஹாரில் முதன்முறையாக நடத்தப்பட்ட எஸ்ஐஆர் செயல்முறை இன்னமும் கேள்விக்குரியதாகவே உள்ளது.

மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை நாங்கள் சட்டமன்றத்தில் எழுப்புவோம். தேர்தல் வாக்குறுதிகளில் இருந்து ஆளும் கூட்டணி பின்வாங்குமானால் நாங்கள் அதற்கு எதிராக நிற்போம்” என தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பிறகான பிஹார் சட்டப்பேரவையின் முதல் கூட்டம் வரும் திங்கள் கிழமை கூட உள்ளது. இதில், அனைத்து உறுப்பினர்களும் பதவியேற்க உள்ளனர். இந்த கூட்டம் 5 நாட்கள் நடைபெற உள்ளது.

## முதல்வர் பதவி விவகாரம்: கட்சி மேலிட முடிவுக்கு கட்டுப்படுவோம் - சித்தராமையா, டி.கே. சிவகுமார் அறிவிப்பு

பெங்களூரு, நவ.30:

முதல்வர் பதவி விவகாரத்தில் கட்சி மேலிடத்தின் முடிவுக்குக் கட்டுப்படுவோம் என்று கர்நாடக முதல்வர் சித்தராமையாவும், துணை முதல்வர் டி.கே. சிவகுமாரும் தெரிவித்துள்ளனர்.



காலை விருந்துக்கு தனது இல்லத்துக்கு வருமாறு சித்தராமையா, டி.கே.சிவகுமாருக்கு அழைப்பு விடுத்தார். இதையடுத்து, சிவகுமார், சித்தராமையாவின் இல்லத்துக்கு இன்று காலை சென்றார். இருவரும் உணவு அருந்தும் புகைப்படங்கள் வெளியாகின.

இதையடுத்து, சித்தராமையாவும் டி.கே. சிவகுமாரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது பேசிய சித்தராமையா, “காலை உணவுடன் டி.கே. சிவகுமாருடன் இன்று ஒரு சிறிய கலந்துரையாடல் நடத்தினேன். கட்சி மேலிடத்தின் அறிவுறுத்தலின் பேரில் இது நடந்தது. முதல்வர் பதவி தொடர்பாக எழுந்துள்ள குழப்பத்தைப் போக்க கட்சி மேலிடம் இருவருக்கும் அறிவுறை வழங்கி உள்ளது. இப்போது எந்தக் குழப்பமும் இல்லை. எதிர்காலத்திலும் குழப்பம் இருக்காது.

முதல்வர் பதவியைப் பொறுத்தவரை, கட்சி மேலிடம் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட நானும் டி.கே. சிவகுமாரும் முடிவு செய்துள்ளோம். அமைச்சர்களோ அல்லது எம்எல்ஏக்களோ எங்கள் அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் அல்ல.

அமைச்சரவை மாற்றம் தொடர்பாக சில எம்எல்ஏக்கள் டெல்லி சென்றிருக்கலாம். அதை வேறுவிதமாக பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

2028-ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வது குறித்து நானும் சிவகுமாரும் இன்று ஆலோசித்தோம். 2023 தேர்தலில் நாங்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றியது போல மீண்டும் இணைந்து பணியாற்ற முடிவு செய்துள்ளோம். எங்களுக்குள் எந்த வேறுபாடுகளும் இல்லை. இப்போதும் இல்லை. எதிர்காலத்திலும் இருக்காது.

டிச. 8 முதல் பெலகாவியில் சட்டப்பேரவை குளிர்காலகூட்டத் தொடர் நடைபெற உள்ளது. இதுவரை நாங்கள் எதிர்ப்பை திறம்பட எதிர்கொண்டோம். தொடர்ந்து எதிர்கொள்வோம். அதற்குத் தேவையான உத்திகளை நாங்கள் வகுத்துள்ளோம்.

முதல்வர் பதவி குறித்த குழப்பங்களுக்கு ஊடகங்களே காரணம். பாஜகவும் ஜேடியுவும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப் போவதாக செய்திகள் வெளியாகி உள்ளன. எங்கள் அரசாங்கம் உறுதியாக உள்ளது. எங்களிடம் 142 பேர் உள்ளனர். அவர்கள் வசம் 82 பேர் மட்டுமே உள்ளனர். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர முயன்றால் அது ஒரு தோல்வியுறும் முயற்சியாகவே இருக்கும்.” என தெரிவித்தார்.

துணை முதல்வர் டி.கே. சிவகுமார், “கட்சி மேலிடத்தின் கட்டளைக்கு நாங்கள் கட்டுப்படுவோம் என தெரிவித்தார்.

# விளையாட்டு செய்திகள்

## “சுழற்பந்து வீச்சுக்கு எதிராக இந்திய பேட்ஸ்மேன்கள் தடுமாறுவது ஏன்?” - கபில் தேவ் விளக்கம்

சென்னை, நவ.30:

சுழற்பந்து வீச்சுக்கு எதிராக இந்திய கிரிக்கெட் அணியின் பேட்ஸ்மேன்கள் தடுமாறுவது ஏன்? என்பது குறித்து முன்னாள் கேப்டன் கபில் தேவ் விளக்கியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி, அதன் சொந்த மண்ணில் கடந்த ஆண்டு நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-3 என்ற கணக்கில் இழந்தது. தொடர்ந்து அண்மையில் தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-2 என்ற கணக்கில் இழந்தது. இந்த இரண்டு தொடரிலும் (5 டெஸ்ட் போட்டிகள்) மொத்தமாக 62 முறை எதிரணியின் சுழற்பந்து வீச்சாளர்களிடம் விக்கெட்டை இழந்தனர்.

இந்தியா உட்பட ஆசிய நாடுகளை சேர்ந்த கிரிக்கெட் அணிகளின் பேட்ஸ்மேன்கள் பொதுவாகவே சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள். ஆனால், இந்த இரண்டு தொடர்களில் இந்தியாவுக்கு அது தலைகீழாக மாறியுள்ளது.

“இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் பேட்ஸ்மேன்கள், உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் வெவ்வேறு ரகமான ஆடுகளங்களில் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக சிறப்பாக ஆடிய அனுபவத்தை கொண்டிருந்தனர். இதோடு தனிப்பட்ட பேட்ஸ்மேன்களின் ஆட்ட பாணி, ஃபூட் வொர்க் உள்ளிட்டவையும் இதில் அடங்கி இருக்கும். இந்நிலையில், இன்றைய தலைமுறையை சேர்ந்த முன்னணி வீரர்கள் எத்தனை பேர் உள்ளூர் கிரிக்கெட் தொடர்களில் விளையாடுகிறார்கள் என்ற கேள்வியை நான் முன்வைக்க விரும்புகிறேன். அதுதான் இதில் மிக முக்கியமான ஒன்று. அப்படி நீங்கள் உள்ளூர் கிரிக்கெட் விளையாடாமல், தரமான பந்து வீச்சாளர்கள் எதிர்கொள்ளாமல் இருந்தால் நிச்சயம் தடுமாறுவீர்கள்.

இதில் ஆடுகள அமைப்பு முக்கியமான ஒன்று. இரண்டரை நாட்களில் முடியும் ஆட்டம் ஐந்து நாட்கள் ஆடும் பார்மெட்டுக்கு உகந்தது அல்ல. டாஸை இழந்தால், ஆட்டத்தில் தோல்வி என்ற நிலையில் உள்ளது. நிச்சயம் சொந்த மண்ணில் நியூஸிலாந்து மற்றும் தென் ஆப்பிரிக்கா வசம் இந்தியா டெஸ்ட் தொடரை முற்றிலும் இழந்தது எனக்கு சர்ப்ரைஸாக இருந்தது. ஆனால், இந்த தொடருக்கு நாம் இன்னும் சிறந்த முறையில் தயாராகி இருக்க வேண்டும் என கருதுகிறேன். ஏனெனில் டெஸ்ட் கிரிக்கெட் என்பது முற்றிலும் மாறுபட்டது” என கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

## கோலாகலமாக தொடங்கிய ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை: இந்தியா, பெல்ஜியம் அணிகள் அபார வெற்றி



சென்னை, நவ.30:

14-வது ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை தொடர் சென்னை மற்றும் மதுரையில் வெள்ளிக்கிழக்கை (நவ.28) தொடங்கியது. மதுரையில் நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் ‘ஏ’ பிரிவில் இடம் பெற்றுள்ள நடப்பு சாம்பியனான ஜெர்மனி, தென் ஆப்பிரிக்காவை எதிர்த்து விளையாடியது.

இதில் ஜெர்மனி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அந்த அணி சார்பில் ஜஸ்டஸ் வார்வெக் 19 மற்றும் 56-வது நிமிடங்களில் பீல்டு கோல் அடித்து அசத்தினார். பென் ஹாஸ்பாக் 43-வது நிமிடத்திலும், பால் க்லாண்டர் 44-வது நிமிடத்திலும் பெனால்டி கார்னர் வாய்ப்புகளை கோலாக மாற்றினர்.

‘ஏ’ பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் அயர்லாந்து 4-3 என்ற கோல் கணக்கில் கனடாவை தோற்கடித்தது. அயர்லாந்து அணி சார்பில் ரோவ் லூயிஸ் 12 மற்றும் 32-வது நிமிடங்களில் கோல் அடித்து அசத்தினார். வில்லியம்ஸ் கிரிகோரி 34-வது நிமிடத்திலும், தாம்சன் மிலோ 40-வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். சென்னையில் பிற்பகல் 1.15 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ‘சி’ பிரிவில் உள்ள இரு முறை சாம்பியனான அர்ஜெண்டினா - ஜப்பான் அணிகள் மோதின. இதில் அர்ஜெண்டினா 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அர்ஜெண்டினா அணி தரப்பில் ரோட்ரிகஸ் நிக்கோலஸ் 2 கோல்களும், டோரிஜியானி மேடியோ, காரியா புருனோ ஆகியோர் தலா ஒரு கோலும் அடித்தனர்.

ஸ்பெயின் அபாரம்: மதுரையில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ‘டி’ பிரிவில் உள்ள ஸ்பெயின் - எகிப்து அணிகள் மோதின. இதில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் 8-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஸ்பெயின் அணி சார்பில் அவிலா புருனோ ஹாட்ரிக் கோல் அடித்தார். மார்ட்டின் ஜோசப் 2 கோல்கள் அடித்து அசத்தினார். செர்ராஹிமா ஆல்பர்ட், மெதினா ஆன்ட்ரெஸ், மோரான் டன் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

சென்னையில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ‘சி’ பிரிவில் உள்ள நியூஸிலாந்து - சீனா அணிகள் மோதின. இதில் நியூஸிலாந்து 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. நியூஸிலாந்து அணி சார்பில் எல்ம்ஸ் ஜான்டி 3 கோல்கள் அடித்தார். லின்ட்ஸ் சேம், பிரவுன் ஓவன் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

# இலங்கையை புரட்டிப் போட்ட டிட்வா புயல்: 123 பேர் பலி; அவசர நிலை பிரகடனம்!





**கொழும்பு, நவ.30:**

டிட்வா புயல் காரணமாக கனமழை, நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பேரழிவுகளை சமாளிக்க இலங்கையில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்துவதாக அந்நாட்டின் அதிபர் அநுர குமார திசாநாயக்க அறிவித்தார்.

வெள்ளிக்கிழமை தேதியிட்டு இன்று அதிபர் அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில், இலங்கை முழுவதும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இலங்கையில் நேற்று நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர்கள் அவசர நிலையை அறிவிக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர். அதிபர் திசாநாயக்கவுக்கு எழுதிய கடிதத்தில் மருத்துவர்களின் தொழிற்சங்கம் அவசரகால நிலையை அமல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. நிவாரண உதவிகள் ஒருங்கிணைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளின் செயல்முறையை அவசர நிலை பிரகடனம் விரைவுபடுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டிட்வா புயல் நேற்று (நவம்பர் 29) இலங்கையை விட்டு வெளியேறியது. இதுகுறித்து பேசிய இலங்கை வானிலை ஆய்வுத் துறையின் இயக்குநர் ஜெனரல் அதுல கருணாநாயக்க, "டிட்வா புயல் இலங்கையிலிருந்து வெளியேறி இந்திய கடற்கரையை நோக்கி நகர்வதை நாங்கள் கவனித்தோம். இருப்பினும், கனமழை மற்றும் அதிவேக காற்றுடன் கூடிய மழை நீடிக்கும்" என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

நேற்று காலை 9 மணி நிலவரப்படி இலங்கையில் கனமழை பாதிப்புகளால் 123 பேர் உயிரிழந்தனர், 130 பேர் காணாமல் போயுள்ளனர் என இலங்கை பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

கொழும்புவில் சிக்கித்தவிக்கும் 300 பயணிகள்: டிட்வா புயல் காரணமாக சென்னைக்கு பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, துபாயில் இருந்து இலங்கை வழியாக சென்னைக்கு பயணித்த சுமார் 150 தமிழர்கள் உட்பட 300 பயணிகள் கடந்த மூன்று நாட்களாக கொழும்புவின் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சிக்கித் தவிக்கின்றனர். போதுமான உணவு, தண்ணீர் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல் தவிப்பதாக பயணிகள் குற்றம் சாட்டினர்.

கொழும்பு விமானநிலையத்தில் சிக்கித் தவிக்கும் பயணிகளுக்கு உரிய உதவிகளை செய்ய கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்குமாறு அதிகாரிகளுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழர்கள் பாதுகாப்பாக திரும்புவதை உறுதி செய்ய, தமிழக அதிகாரிகள் இந்திய தூதரக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## இம்ரான் கான் உயிரோடிருப்பதற்கு ஆதாரங்களை வெளியிடுங்கள்

### பாக். சிறை நிர்வாகத்துக்கு மகன் காசிம் கான் வலியுறுத்தல்




**இஸ்லாமாபாத், நவ.30:**

"சிறையில் எனது தந்தை இம்ரான் கான் உயிரோடு இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்களை வெளியிட வேண்டும்" என்று அவரது மகன் காசிம் கான் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், பல்வேறு வழக்குகள் தொடர்பாக தண்டனை விதிக்கப்பட்டு ராவல்பிண்டி அடியாலா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவின்படி இம்ரானின் குடும்பத்தினர் அவரை அவ்வப்போது சந்தித்து வந்தனர். இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக சிறையில் அவரை சந்திக்க நிர்வாகம் அனுமதிக்கவில்லை. இதற்கிடையில், சிறையில் இம்ரானை ராணுவம் கொன்றுவிட்டதாக தகவல் பரவியது.

இதையடுத்து 2 நாட்களுக்கு முன் சிறைக்கு வெளியில் இம்ரான் கானின் சகோதரிகள் 3 பேர் தர்ணாவில் ஈடுபட்டனர். அவர்கள் மீது போலீஸார் கடும் தாக்குதல் நடத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்நிலையில், இம்ரானின் மகன் காசிம் கான் நேற்று தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

எனது தந்தை உயிரோடு இருக்கிறார் என்றால், அதற்கான ஆதாரங்களை வெளியிட வேண்டும். கடந்த ஒரு மாதமாக அவரை சந்திக்க எங்களை அனுமதிக்காதது ஏன்? மனிதாபிமானமில்லாமல் அவரை தனிமைப்படுத்தி வைத்திருப்பது சரியல்ல. இது சட்டவிரோதமானது. கடந்த 845 நாட்களாக எனது தந்தை சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த ஒரு மாதமாக அவரை யாரும் தொடர்பு கொள்ள முடியவில்லை. நீதிமன்ற உத்தரவு இருந்தும், அவரை சந்திக்க அனுமதிக்காதது ஏன்? போனிலும் பேச முடியவில்லை. எங்களது தந்தையின் பாதுகாப்பு, உடல் நலம் எல்லாவற்றுக்கும் பாகிஸ்தான் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். இந்த விவகாரத்தில் சர்வதேச நாடுகளும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தலையிட்டு, எனது தந்தையின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு காசிம் கான் கூறியுள்ளார்.

## 62வது வயதில் காதலியை திருமணம் செய்த ஆஸி. பிரதமர்

**கென்பரா, நவ.30:**

அந்தோணி அல்பனிஸ் – ஜோடி ஹைய்டன் திருமண புகைப்படம் சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

ஆஸ்திரேலிய நாட்டின் பிரதமர் அந்தோணி அல்பனிஸ் (வயது 62). இவர் 2000ம் ஆண்டு கார்மல் மெரி டெம்பட் என்பவரை திருமணம் செய்தார். இந்த தம்பதிக்கு ஒரு மகன் உள்ளார். இதனிடையே, கடந்த 2019ம் ஆண்டு அந்தோணி அல்பனிஸ் - கார்மல் தம்பதி விவாகரத்து பெற்றனர்.

அதேவேளை, 2020ம் ஆண்டு பிரதமர் அந்தோணி அல்பனிஸ் ஜோடி ஹைய்டன் (வயது 47) என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இது நாளடைவில் காதலாக மாறியது

இந்நிலையில், காதலி ஜோடி ஹைய்டனை பிரதமர் அந்தோணி அல்பனிஸ் இன்று திருமணம் செய்துகொண்டார். திருமணம் செய்துகொண்ட தம்பதிக்கு அரசியல் தலைவர்கள் உள்பட பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்தோணி அல்பனிஸ் – ஜோடி ஹைய்டன் திருமண புகைப்படம் சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

## ஹாங்காங் தீ விபத்தில் உயிரிழப்பு 128 ஆக உயர்வு: குடியிருப்பில் எச்சரிக்கை கருவி பழுது



**ஹாங்காய், நவ.29:**

ஹாங்காங் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது.

ஹாங்காங்கின் டய் போ பகுதியில் உள்ள வாங் பக் கோர்ட் வளாகத்தில் 8 அடுக்கு மாடி குடியிருப்புகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் 31 மாடிகள் உள்ளதால் அங்கு 2,000-க்கும் மேற்பட்ட வீடுகள் இருந்தன. இங்கு பராமரிப்பு பணிக்காக கட்டிடங்களை சுற்றி சாரங்கள் அமைக்கப்பட்டு தார்பாலின் மூலம் மறைக்கப்பட்டிருந்தன. இதனால் இங்கு ஒரு இடத்தில் பற்றிய தீ 7 கட்டிடங்களுக்கு மளமளவென பரவியது.

இதில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 128 ஆக அதிகரித்துள்ளது. 79 பேர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். சுமார் 200 பேரை காணவில்லை. இந்த கட்டிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட 900 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து ஏற்பட்ட கட்டிடங்களைச் சுற்றி 1000 போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் தீ விபத்து சம்பவம் குறித்து பாதுகாப்பு செயலாளர் கிரிஸ் டாங்க் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:

கட்டிடங்களில் தீ முழுவதுமாக அணைக்கப்பட்டுள்ளது. இங்கு தேடுதல் பணிகளும் நிறைவடைந்துவிட்டன. இறந்தவர்களின் உடல்களை அடையாளம் காணும் பணி நடைபெறுவதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம். கட்டிடத்தில் வெப்ப நிலை குறைந்ததும், அங்கு போலீஸார் சென்று தீ விபத்துக்கான ஆதாரங்களை சேகரிப்பர். தீ விபத்து ஏற்பட்ட போது கட்டிடங்களில் பொருத்தப்பட்டிருந்த தீ எச்சரிக்கை கருவிகள் வேலை செய்யவில்லை என தெரியவந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## இந்தோனேசியாவில் கனமழை, வெள்ளம்: பலி எண்ணிக்கை 303 ஆக உயர்வு



**ஜகர்தா, நவ.30:**

ஆசியாவில் அமைந்துள்ள நாடு இந்தோனேசியா. இந்நாட்டின் வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா, அச்சோ ஆகிய மாகாணங்களில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

கனமழையால் பல்வேறு நகரங்களில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் 2 லட்சத்திற்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. சாலை போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்தோனேசியாவில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 303 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 100க்கும் மேற்பட்டோர் மாயமான நிலையில் அவர்களை தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. அதேபோல், மீட்புப்பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மீட்புப்பணியில் ராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது.

## வெனிசுலா வான்பரப்பை பயன்படுத்த வேண்டாம்; விமான நிறுவனங்களுக்கு டிரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், நவ.30:**

வெனிசுலா, மெக்சிகோ உள்பட பல்வேறு நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக ஜனாதிபதி டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். மேலும், கடல் வழியாக போதைப்பொருள் கடத்தி வரும் கும்பல் மீது தாக்குதல் நடத்தவும் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, கடல் வழியாக படகில் போதைப்பொருள் கடத்தி வரும் கும்பல்கள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலில் இதுவரை 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக, வெனிசுலாவில் இருந்து கடல் வழியாக அதிக அளவில் போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். மேலும், வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ போதைப்பொருள் கடத்தலை ஊக்குவிப்பதாகவும், அந்த கும்பல்களுடன் அவர் தொடர்பில் இருப்பதாகவும் டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார்.


மேலும், போதைப்பொருள் கடத்தலை தடுக்க வெனிசுலா மீது தாக்குதல் நடத்துவோம் என்றும் டிரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

மேலும், வெனிசுலா அருகே கரீபியன் கடலில் அதிக அளவிலான போர் கப்பல்களையும், போர் விமானங்களையும் நீர்மூழ்கி கப்பல்களையும், படை வீரர்களையும் அமெரிக்கா நிலை நிறுத்தியுள்ளது. இதன் மூலம் வெனிசுலா மீது அமெரிக்கா எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இந்நிலையில், வெனிசுலா வான்பரப்பை விமான நிறுவனங்கள் பயன்படுத்த வேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி டிரப்ம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

விமானங்கள் வெனிசுலா வான்பரப்பை பயன்படுத்த வேண்டாம் என டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் வெனிசுலா மீது விரைவில் அமெரிக்கா தாக்குதல் நடத்தும் என அச்சம் எழுந்துள்ளது. இதனால், கரீபியன் கடற்பரப்பில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

## டிட்வா புயலால் விமான சேவைகள் பாதிப்பு; 3 நாட்களாக இலங்கையில் சிக்கித் தவிக்கும் 300 இந்தியர்கள்




**கொழும்பு, நவ.30:**

'டிட்வா' புயல் இலங்கை மற்றும் அதனையொட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலை கொண்டுள்ளது. 'டிட்வா' புயலின் வேகம் தற்போது அதிகரித்துள்ள நிலையில், மணிக்கு 10 கி.மீ வேக்த்தில் சென்னையை நோக்கி நகர்ந்து வருகிறது.

தொடர்ந்து வடக்கு - வடமேற்கில் நகர்ந்து நாளை (நவ.30) காலை வட தமிழ்நாட்டை நெருங்கும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், டிட்வா புயலால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இன்றைய தினம் தமிழகத்தில் உள்ள விமான நிலையங்களில் மொத்தம் 54 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக சென்னை விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி சென்னையில் இருந்து தூத்துக்குடி, மதுரை, திருச்சி செல்லக்கூடிய 16 விமானங்களும், சென்னைக்கு வரக்கூடிய 16 விமானங்களும், பெங்களூரு மற்றும் ஐதராபாத் செல்லக்கூடிய 22 விமானங்களும் ரத்து செய்யப்பட்டுளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் இலங்கையின் கொழும்பு விமான நிலையத்திலும் டிட்வா புயல் காரணமாக விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, துபாயில் இருந்து இலங்கை வழியாக இந்தியா வருவதற்காக விமானத்தில் பயணம் செய்த சுமார் 300 இந்தியரகள், கடந்த 3 நாட்களாக கொழும்புவின் பன்தர்நாயகே விமான நிலையத்தில் சிக்கியுள்ளனர்.

இலங்கையில் சிக்கி இருப்பவர்களில் சுமார் 150 பேர் தமிழர்கள் என்பது தெரியவந்துள்ளது. அவர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதற்கிடையில், டிட்வா புயல் காரணமாக நாளை வரை தமிழகத்தில் உள்ள விமான நிலையங்களில் விமான சேவைகள் ரத்து செய்யப்படும்என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.